*Issued* 7—1—1966]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## THURSDAY, 4TH NOVEMBER 1965

## VOLUME XXXII—No. 2

*CONTENTS*


| | PAGES |
|---|---|
| I Obituary reference to Sri K. Venkata Setty and Sri K. S. Ramaswamy Gounder, former Members of the Legislative Assembly. .. .. .. .. .. .. .. .. | 133 |
| II Questions and Answers .. .. .. .. .. .. | 133–158 |
| III Adjournment Motions.— | |
| (1) Bonus dispute between textile workers and textile mills in Coimbatore region. .. .. .. .. | 158–160 |
| (2) Shortage of kerosene. .. .. .. .. .. .. | 160–163 |
| (3) Prohibition of anniversary celebration of late Sri Muthuramalinga Thevar under Sec. 144 Cr. P. C. .. | 163–166 |
| IV Calling attention to non-availability of kerosene and diessal oil. | |
| V Government Motions.— | |
| (1) Transaction of Government business on non-official day. | 167 |
| (2) Change in the order of business .. .. .. .. | 202 |


[P.T.O.

©
GOVERNMENT OF MADRAS
1965

*Leg. ... Assembly Department*
*...ge, Madras-9*
V211, 31 N65
N65-32.2
64923

PRICE 50

## C O N T E N T S—cont.


| | PAGES |
|---|---|
| **VI Announcements.—** | |
| (1) The Madras Land Revenue and Water-cess (Surcharge) Bill, 1965. .. .. .. .. .. .. | 167 |
| (2) The Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1965. .. .. . .. | 168 |
| **VII Government Bills.—** | |
| (1) The Madras Land Revenue and Water-cess (Surcharge) Bill, 1965. .. .. .. .. .. .. | 167 |
| (2) The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1965. .. .. .. .. .. .. .. | 167 |
| (3) The Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1965. .. .. .. .. | 168 |
| (4) The Madurai University Bill, 1965. (L. A. Bill No. 11 of 1965. .. .. .. .. .. .. | 168 |
| (5) The Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965 (L. A. Bill No. 18 of 1965). .. .. | 202 |
| **VIII Papers laid on the table of the House** .. .. .. .. | 208 |


# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

### Thursday, 4th November 1965.

The House met in the Assembly Chamber, *Fort St. George*, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I. OBITUARY REFERENCE TO SRI K. VENKATA SHETTY AND SRI K. S. RAMASWAMI GOUNDER, FORMER MEMBERS OF LEGISLATIVE ASSEMBLY.

MR. SPEAKER: It is my painful duty to inform the House about the demise of Sri K. Venkata Setty, a former Member of the Madras Legislative Assembly during 1952–53 representing the Dhone Assembly Constituency, on the 22nd August 1965, and also of Sri K. S. Ramaswami Gounder, a former Member of the Madras Legislative Assembly during 1937–39 representing Palladam General Rural Constituency on the 11th September 1965.

On behalf of the House, I will convey the condolences to the bereaved families.

I request the hon. Members to stand in silence for two minutes as a mark of respect to the departed souls.

The Members stood in silence for two minutes.

64923

### II.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

#### *அகில இந்திய காங்கிரஸ் தலைவரின் சுற்றுப்பயணம்*

*261 கேள்வி.—**திரு. செ. மாதவன்**: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-ம் ஆண்டு மே மாதம் அகில இந்திய காங்கிரஸ் குழுவின் தலைவர் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்த பொழுது அரசாங்க அதிகாரிகள் உடன் செல்ல வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

**திரு. செ. மாதவன்**: தலைவர் அவர்களை, சமீபத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தேர்தல் நிதி திரட்டும்போது அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவருடன் அமைச்சர்கள் யாராவது சென்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: சுற்றறிக்கை அனுப்பப்பட்டதா என்பதுதான் கேள்வி. இல்லை என்று பதில் சொன்னேன். காங்கிரஸ் தலைவர் அவர்கள் போனபோது அமைச்சர்களும் போயிருக்கலாம், போகாமலும் இருக்கலாம். அதற்குமேல் கனம் அங்கத்தினர் கேள்வி கேட்டால் எப்படி விடை அளிப்பது என்பது எனக்குத் தெரியவில்லை.

**திரு. செ. மாதவன்** : இந்த நிதி திரட்டும் கூட்டங்களிலே அமைச்சர்கள் கலந்துகொண்டார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நிதி திரட்டும்போது அமைச்சர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி நிதி திரட்டுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நிதி அளிப்புக் கூட்டங்களிலே அமைச்சர்கள் கலந்து கொண்டிருக்கலாம். ஆனால், நிதி திரட்ட அவர்களுடைய அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு அவசியம் இல்லை.

**திரு இராம. அரங்கண்ணல்** : அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்து சேவை செய்திருக்கிறார்கள் என்றாலும் இப்போது அவர்கள் ஒரு அரசியல் கட்சியின் தலைவராக விளங்குகிறார்கள். அரசாங்கம் நடத்தும் திறப்பு விழாக்களிலும் இன்னும் மற்ற விழாக்களிலும் அவர்கள் கலந்து கொள்ள அழைக்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையா? அப்படியென்றால், அது அரசாங்கத்திற்கு உகந்தது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை அல்ல இது. குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் அவர்களை அழைத்தால் அதை ஆட்சேபிப்பதில் பொருள் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர்** : காங்கிரஸ் தலைவர் போகும் இடத்திற்கு அமைச்சர்களும் போவதிலே என்ன தடை இருக்கிறது? காங்கிரஸ் தலைவருடன் அமைச்சர்களும் வர வேண்டுமென்று பொதுமக்கள் விரும்பினால் போவதற்கு ஏதாவது தடை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : தடையும் இல்லை, நிர்ப்பந்தமும் இல்லை.

## மதுரை காங்கிரஸ் கமிட்டி அலுவலகங்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு

* 262 **கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள காங்கிரஸ் கமிட்டி அலுவலகங்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி:** சமீபத்திலே இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடைபெற்ற சமயத்தில் மதுரையிலுள்ள காங்கிரஸ் அலுவலகங்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருந்தது. பிறகு



அந்தப் பாதுகாப்பு இரண்டு மாதங்களுக்கு முன்புதான் நீக்கப்பட்டது. அவ்வளவு நாட்களாக காங்கிரஸ் அலுவலகங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அவசியம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அமைதியைப் பாதுகாக்க எங்கெங்கே போலீஸ் பாதுகாப்பு அவசியமோ, அங்கங்கே போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. சுதந்திராக் கட்சித் தலைவர் கனம் ராஜாஜி அவர்கள் வீட்டுக்குக்கூட பாதுகாப்பு இருக்கிறது.

## ஜலகண்டேஸ்வரர் கோயில், வேலூர்

* 263. **கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி :**
**திரு. வை. சங்கரன் :** } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வேலூர் கோட்டைக்குள் இருக்கும் ஜலகண்டேஸ்வரர் கோயிலை இந்துக்கள் வழிபாட்டிற்கு விரைவில் திறந்துவிட உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) : In his letter, dated 4th January 1965, the Assistant Commissioner, Kanchipuram, reported to the Commissioner, that the Renovation Committee as originally constituted consisting of 6 members was not functioning and that a fresh Renovation Committee has to be reconstituted to the purpose of collecting necessary funds to meating the expenses of worship to be revieved in the temple. The Hindu Religious and Charitable Endowments Advisory Committee also has been insisting that at least a sum of Rs. 2 lakhs should be collected by the Renovation Committee and by others interest in the restoration of the workshop in the temple before any steps for reviving worship are taken. The Commissioner has, therefore, stated that in this connection correspondence with the Central Government, Department of Archaeology for allowing worship to be revived would become necessary and that this might take more than 6 months. The Commissioner has also reported that he has requested some interested persons to make a vigorous drive for collecting funds and that the Renovation Committee will be reconstituted after receipt of reply from the parties. He has also stated that it will take at least a year to finalise the matter. In the circumstances, the Government have proposed to agree with the Commissioner and to re-open the matter on 15th January 1966.

**திரு. சா. கணேசன் :** வேலூரிலுள்ள அந்த ஆலயத்தில் மறுபடி பூஜை நடைபெறுவதற்கு நாம் எல்லா செய்யவேண்டிய ஏற்பாடுகள் தங்களைச் செய்வதற்கும் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து காலம்தான் அதிகம் அல்லது குறைவு என்று தெரிகிறதே தவிர நிச்சயமாக அது செயல்படுத்தப்படுமா? இதில் மத்திய

அரசாங்கத்திற்கு ஏற்கனவே இருந்த கருத்து வேறுபாடுகள் அகற்றப்பட்டு தடையில்லாமல் இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சிற்பக்கலைச் சிறப்புப்பெற்ற ஆலயம் இது. சுவாமி இல்லாத ஆலயம் இது. சுவாமியைப் பிரதிஷ்டை செய்த பிறகுதான் அதற்குப் பூஜை செய்ய வேண்டும். அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று கேட்டு அதை ஆர்கியாலஜிகல் டிபார்ட்மெண்ட் கவனித்துக் கொண்டு வருகிறது. நான் இதைப்பற்றி வற்புறுத்துவது என்னவென்றால் மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்றுவிட்டால் மட்டும் போதாது. நிரந்தரமாக அங்கே பூஜை நடக்கவேண்டும். அப்படி நிரந்தரமாக பூஜை நடக்கவேண்டுமென்றால் அதற்குப் போதிய நிதி வேண்டும். அதற்காக இரண்டு லட்சம் ரூபாய் நிதி திரட்டவேண்டும். நிதி திரட்டுவதில்தான் தாமதம் இருக்கிறது. வேறு ஒன்றும் தாமதம் இல்லை.

**திரு. வை. சங்கரன் :** வேலூரில் மூன்று விசேஷங்கள் இருக்கின்றன. ஒன்று, ஆண்டவன் இல்லாத ஆலயம். இரண்டு, அதிகாரம் இல்லாத போலீஸ். மூன்று, அழகு இல்லாத ஆசனங்கள். இதை நான் சொல்லவில்லை; முன்பு இச்சபையில் அங்கத்தினராக இருந்த திரு. விநாயகம் அவர்கள் இங்கே இதே கேள்வியைக் கேட்கும்போது சொன்னார்கள். இந்த நிலைமையை சீக்கிரத்தில் மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தவிதமான சிறப்புகளிலே அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. கடவுள் இல்லாத ஆலயம் இருக்கவேண்டுமென்று கனம் அங்கத்தினர் விரும்பினால் நான் அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். பூஜை நடத்துவதுதான் நல்லது. பூஜை இல்லாமல் கோவில் இருந்தால் அதில் சோபை இல்லை. சிற்பச் சிறப்பு இருந்தாலும்கூட சுவாமி இருந்தால்தான் நல்லது.

**திரு. சா. கணேசன் :** அந்த வட்டத்திலே, நகரத்திலே, இருக்கிறவர்கள் நிரம்பக் கொடுக்க வேண்டும். அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நிரம்பத் தொகை [illegible] அண்ட [illegible] எண்டோமெண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் ஏராளமான பணம் தேங்கிக் கிடப்பதைப் பல்வேறு ஆலயங்களுக்கும் செலவழிப்பதைப்போல, இந்த ஆலயத்திற்கும் செலவழிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அற நிலையப் பாதுகாப்பு இலாகாவில் பணம் இல்லை. அப்படிப் பணம் இருந்தாலும், ஒழுங்காக நடைபெற்றுவரும் ஆலயங்களில் பழுது பார்க்கக்கூடிய வேலைகளுக்குத்தான் செலவழிக்க வேண்டும். வேலூரில் இந்த ஆலயத்தில் கடவுள் பிரதிஷ்டை செய்ய அந்த நகரத்து மக்களே முன்வந்து 2 அல்லது 5 லட்சம் ரூபாய் கொடுக்கக்கூடும்.





**திரு. எஸ். முருகையன் :** ஆண்டவன் இல்லாத ஆலயம் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு ஆண்டவன் இருக்கிறார். இருக்கவேண்டிய இடத்திற்குச் சற்று தூரத்தில் இருக்கிறார். அங்கே ஆண்டவன் இல்லாத ஆலயம் அல்ல, நீர் இல்லாத ஆறு அல்ல, அறிவு இல்லாத பெண்கள் அல்ல. வேலூரில் எல்லாம் இருக்கிறது. ஆனால், முறைப்படி செய்ய வேண்டியதைச் செய்யவில்லை. வேறு ஒன்றும் குறையில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் போய்ப் பார்த்து இருக்கிறேன். அது நகரத்துக்குள் இருக்கிறது. கடவுள் கர்ப்ப கிருஹத்தில் இல்லை; தூரத்துக்குள்ளே இருக்கிறது. அங்கு கடவுள் இருக்கிறதாகத் தெரியவில்லை. ஆனால், உயர்ந்த வேதாந்தத்தின்படி கடவுள் எங்கும் இருக்கிறார் என்பார் சொல்லலாம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ஆண்டவன் இல்லாத இடத்திற்குக் கோயில் என்று சொல்வது பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நாம் எத்தனையோ விசித்திரமான வேலைகளில் ஈடுபட்டு இருக்கிறோம். அதில் இதுவும் ஒன்று என்று வைத்துக்கொள்ளலாம்.

### *Ahobila Mutt*

*264 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the report of the Sri C. P. Ramaswamy Iyer's Committee regarding the alienation of Mutt lands by the Jeer of Ahobila Mutt;

(*b*) whether the head of the Mutt has obtained the permission of the Government for disposing of the lands;

(*c*) the action, if any, taken to get back the lands; and

(*d*) whether there is any proposal to make an enquiry regarding the mismanagement of the Mutt?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) No.

(*c*) & (*d*) No suit can be filed to set aside alienation even though they are null and void under section 34 (1) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959. The Commissioner is taking action to frame a Scheme for the Mutt. Meanwhile the Jeer has given an undertaking on 30th December 1962 not to sell the lands without proper sanction in future.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, அஹோபில மட ஜீயர் ஏறத்தாழ 700 ஏக்கர் நிலத்தை 3½ லட்ச ரூபாய்க்குத் தனிப்பட்ட முறையிலே விற்று

[4th November 1965

விட்டதாகவும் அதுபற்றி நடவடிக்கை எடுக்க விண்ணப்பம் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அதற்குத்தான் விடை அளித்தேன். அம்மாதிரி புகாரை விசாரித்ததில் ஒரு "ஸ்கீம்" போட்டு, சட்டத்திற்கு உட்பட்டு, கமிஷனர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்று கூறினேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : விற்பனை செய்யப்பட்ட மட்டில் அந்த விற்பனை எல்லாம் சரியான விற்பனைதானா? விற்ற நிலத்திற்கு சரியான தொகை பெறப்பட்டு இருக்கிறதா என்பதைக் கமிஷனர் விசாரித்தாரா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இதெல்லாம், சட்டப்படி, முறைப்படி விசாரணை செய்யப்பட்டு வருகிற விஷயம்.

**திரு. எஸ். முருகையன்** : விற்ற நிலம் போக, மீதி நிலங்களை யாவது விற்காமல் நிறுத்த, சர்க்கார் தடை உத்தரவு போடுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இதிலே சர்க்கார் எல்லா வற்றையும் செய்ய முடியவில்லை. மேலே கோர்ட்டு இருக்கிறது. அற நிலைய இலாகா எந்த அளவுக்கு, சட்டத்திற்கு உட்பட்டு கவனம் செலுத்த முடியுமோ அதிலெல்லாம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி** : தலைவர் அவர்களே, இந்த விசாரணை எத்தனை நாளாக நடைபெற்று வருகிறது, எவ்வளவு காலதாமதம் ஆகி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இதற்கெல்லாம் கால வரம்பு ஒன்றும் இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, அஹோபில மடத்தைப் பொறுத்தவரையில் ஊழல்கள் பல நிறைந்து இருப்பதாகப் பரவலாகச் சொல்லப்படுகிறது. அதைப் பற்றி விசாரிக்க, தனிக் குழு ஒன்றினை நியமித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க, அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : சட்டப்படி அற நிலைய இலாகாவுக்கு வரம்பு இருக்கிறது. அதற்குமேல் கோர்ட்டு இருக்கிறது. தனிக் குழு வைத்துப் பயன் இல்லை.

### *Funds under 'Housing' in Plan Schemes*

* 265 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any communication from the Centre has recently been received on the provision and utilisation of adequate funds under 'Housing' in Plan Schemes; and

(*b*) if so, the action taken thereon?



4th November 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes. The Union Minister for Works and Housing suggested that a bigger provision for 'Housing' may be made in the last year of the Third Five-Year Plan and also in the Fourth Five-Year Plan.

(*b*) An increased provision of Rs. 308.55 lakhs has been made in the last year of the Third Five-Year Plan for both Plan and Non-Plan Housing Schemes (Plan Rs. 103.55 lakhs and Non-Plan Rs. 205 lakhs). As for the Fourth Five-Year Plan, an outlay of Rs. 42.05 crores under Plan and Rs. 12 crores under Non-Plan on 'Housing' has been suggested by this Government.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : வீட்டு வசதி பற்றாக்குறை நகரப் புறங்களில் மட்டுமின்றி கிராமப் புறங்களிலும் பரவி வருகிறது. இந்த நிதி ஒதுக்கலில் கிராம கூட்டுறவு சொசைடிகளுக்கும், நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் "வில்லேஜ் ஹவுஸிங் பிராஜெக்ட்" கீழ் 25 லட்சம் ரூபாய் ஒதுக்கினோம். இதுவரையிலும் செலவழித்தது, இந்த ஆண்டு இறுதிவரை செலவழிக்கக் கூடியது ரூ. 27,99,000.

**திரு. வை. சங்கரன்** : பல ஜில்லாக்களிலே தொழிலாளர்களின் வீட்டுவசதி கோவாபரேடிவ் வொர்க்ஸ் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. இதையெல்லாம் பழையபடி மறுபடியும் நடத்தி முடிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : இல்லை.

### வீட்டு வசதி போர்டு

* 266 கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநில வீட்டு வசதி போர்டில் (1) மேஜை நாற்காலிகள், (2) விளம்பரம் செய்து பணம் கொடுப்பது, (3) நிரந்தர முன் பணம் கொடுத்தல் போன்ற இனங்களுக்கான பதிவுகள் சரிவரச் செய்யப் படுவதில்லை என்று புகார் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா? அதன் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : Certain defects were pointed in paragraphs 162, 163, 164 of the Audit Report of the State Housing Board 1961–62 in regard to the maintenance of the Furniture Register, Register of Permanent Advances and Advertisement Charges eRgister. The above defects have since been rectified.

* 267 கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநில வீட்டு வசதி போர்டின் 1961-62-ன் தணிக்கையில் ரூ. 40,316,23 பெற்றுக்கொண்டவர்கள் (payee's acknowledgment) கையெழுத்திட்ட ரசீதுகள் இல்லை என்று தணிக்கையாளர் குறிப்பிட்டிருப்பதுபற்றி அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : The audit objections under reference have been settled. No action is therefore called for at Government level.

திரு. இராம. அரங்கண்ணல் : அக்னாலெட்ஜ்மென்ட் இல்லாமலே மெஸ்ஸர்ஸ் ஹெல்லிக் கம்பெனிக்கு ரூ. 11,877 கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி தனிப்பட்ட முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா அல்லது விவரம் கேட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆடிட் பரிசீலனை என்று சொன்னால் முதலில் அப்ஜெக்ஷன் எழுதுவார்கள். அப்ஜெக்ஷன் எழுதிய பிறகு, என்னென்ன பதில், அதற்கு விளக்கம் என்ன என்று சம்பந்தப்பட்ட இலாகாவிலிருந்து ஆடிட்டருக்கு எழுதி அனுப்புவார்கள். அதை ஆடிட்டர் ஏற்றுக் கொண்டால் நடவடிக்கை எடுக்கமாட்டார்கள். ஒத்துக்கொள்ளாவிட்டால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். இங்கே ஆடிட்டர் விளக்கத்தை ஒத்துக்கொண்டு விட்டார்கள்.

* 268 கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீட்டு வசதி போர்டு 1961-62-ன் தணிக்கை அறிக்கையின்படி முன் ஆண்டுகளுடைய தணிக்கை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட 334 அம்சங்களைப் பைசல் செய்ய எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன?

(இ) இதுவரை பைசலான அம்சங்கள் எத்தனை?

(உ) காலதாமதத்திற்கான காரணம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Chairman, State Housing Board is taking necessary action for the settlement of the objections in consultation with the Examiner of Local Fund Accounts.

(b) 102 objections.

(c) The delay is due to the non-availability of the Measurement Books and certain other requisite records readily, as they are held up at work spots.





திரு. இராம. அரங்கண்ணல் : இந்த 334 அம்சங்களும் நீண்ட காலமாகவே பைசல் செய்யப்படவில்லை என்று ஆடிட் ரிப்போர்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் காலதாமதமாகும் என்று சொன்னால் எவ்வளவு நாள் காலதாமதமாகும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதுபற்றி விளக்கினால் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆடிட்டில் அந்தந்த ஆண்டில் வேண்டிய குறிப்புகளை எல்லாம் அவ்வப்போது கொண்டு வந்து அதை நிரூபித்து விளக்கிச் சொல்ல வேண்டும். ஆனால் பரந்து, இந்த ராஜ்யம் பூராவிலும் வீடுகள் கட்டுகிற இடங்களில் பல இடங்களில் வீடுகள் கட்டி முடியவில்லை. கட்டி முடித்த பிறகு அந்தக் கணக்குகளைக் கொண்டு வருவது, செக் மெஷர்மென்ட் செய்வதுதான் சுலபம். கட்டடம் கட்டிக் கொண்டிருக்கும்போது க்வான்டிட்டி, செக் மெஷர்மென்ட்ஸ் இவற்றை யெல்லாம் கொண்டு வர இயலாது. வீடுகள் கட்டி முடிந்த பின் அப்ஜக்ஷன்ஸுக்கு எல்லாம் விளக்கம் கூறி சரி செய்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தத் தணிக்கை ஆட்சேபனைகளில் எத்தனை இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பதில் சொல்லப்படாமலே இருக்கின்றன என்பதற்கு விவரம் உண்டா? அதை அறிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும். ஐந்து வருடங்கள் ஆகவில்லை என்று நினைக்கிறேன். போர்டு வைத்தே ஐந்து வருடங்கள் ஆகவில்லை.

* 269 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

1964-ம் வருஷத்தில் Low Income Group Housing, Middle Income Group Housing and slum clearance திட்டங்களின் கீழ் சென்னை வீட்டு வசதி யூனிட்டினால் கட்டப்பட்டு வழங்கப்பட்ட வீடுகள், மனைகள் எத்தனை?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[a] is placed on the Table of the House.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தத் திட்டப்படி எல்.ஐ.ஜி. வீடுகள் கட்டிக் கொடுப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக ஓப்பன் ப்ளாட்ஸ் கொடுக்கும் முறைதான் அதிகமாக சென்னை நகரில் தென்படுகிறதே தவிர எல்.ஐ.ஜி. ஸ்கீமின்கீழ் அதிக வீடுகள் கட்டிக் கொடுக்கும் தன்மை இங்கு இல்லை. அதை நீக்கும் விதத்தில் அதிகப்படி வீடுகள் கட்டிக் கொடுக்க உத்தரவிடப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிதி வசதி இருந்தால் கனம் அங்கத்தினர் சொல்லுகிற ஆலோசனையை உடனடியாக ஏற்றுக் கொள்ளலாம். வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று

[a] Printed as Appendix I on pages 78–79.

சொன்னால் சர்க்கார் அந்த நிலத்தின் கிரயம், வீடு கட்டுகிற செலவு எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு அதை 15, 20 ஆண்டுத் தவணையில் வசூலிக்க வேண்டியிருக்கிறது. அதனால் சர்க்கார் பணம் அதிகமாக முடங்கி விடுகிறது. ஓப்பன் ப்ளாட்ஸலானால் உடனடியாகப் பணம் வந்து விடுகிறது. அந்தப் பணத்தைப் போட்டு மேலும் ஸ்கீம்ஸ் ஆரம்பிக்க உபயோகமாக இருக்கிறது. பணத்திற்காகத் தான் இத் திட்டத்தை வைத்திருக்கிறோம்.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்த ஓப்பன் ப்ளாட்ஸ் ஏலம் போடுகிற முறையில் க்ரவுண்டுக்கு 7,000, 8,000, 9,000 ரூபாய் என்ற அளவில் சென்று கொண்டிருக்கிறது. அத் துறையில் பார்த்தால் வசதி உள்ளவர்கள், பணக்காரர்கள்தான் மீண்டும் மீண்டும் அந்த இடங்களை எடுக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். எல்.ஐ.ஜி. ஸ்கீமின் கீழ் கட்டிக் கொடுத்தால் மத்திய தர மக்கள் குறைந்த தொகையில் 2,000 ரூபாயைக் கட்டிவிட்டு அந்த வீட்டை அனுபவிக்கும் முறை ஏற்படும். ஆகவே இப்படி ஏலம் போடுகிற முறையை மாற்றியமைத்து எல்.ஐ.ஜி. ஸ்கீமின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அங்கத்தினர் அவர்கள் கூறும் விவரம் சரியல்ல. ஏலம் போடுகிறது எல்லாம் 100 அடி ரோடு, 80 அடி ரோடு பக்கத்திலுள்ள மிக வால்யூபிள் ப்ளாட்ஸ். அது மட்டும்தான் போடப்படுகிறது. மற்றவை எல்லாம் ஏலம் போடப்படுவது கிடையாது. மற்றவை, 'நோ ப்ராஃபிட்—நோ லாஸ்' பேஸிஸில் தனியாக அலாட்மென்டதான் செய்கிறோம். 100 அடி ரோடிற்குப் பக்கத்தில் உள்ளதை ஏலம் போட்டு அதனால் வருகிற பணத்தை வைத்துக் கொண்டு ஸ்லம் க்ளியரன்ஸ் ஸ்கீமிற்கு சப்ஸிடியாக உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இதை யாரும் குறை சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்த வீடுகளைக் கட்டுவதற்குப் பணத்தை நாம அதிகமாக முடக்கி விட்டால் புதிய ஸ்கீம்கள் போட நம்மிடம் பணம் இல்லாமல் போய் விடும். வீடு கட்டிக் கொள்கிறவர்களுக்கு வசதி ஒருபுறம், வீடு கட்டிக்கொள்ள முடியாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது ஒருபுறம், ரென்டல் ஹௌஸிங் ஸ்கீம் ஒருபுறம். இப்படிப் போட்டால்தான் அதிக வீடுகள் கிடைக்கும்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, சாதாரண மக்களுக்குப் பயன்படுகிற வகையில் மாடிகள் அமைந்திருக்கக்கூடிய, அடுக்குக் கட்டடங்களாக 10,000 வீடுகள் கட்டத் திட்டமிட்டிருப்பதாகத் தொழில் அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த திட்டம் எப்போது எடுக்கப்படும்? எப்போது நிறைவேற்றப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒன்று இப்போதே கட்டி முடியும் தறுவாயில் இருக்கிறது. நந்தனம் காலனியில் இப்போது போய்ப் பார்த்தால் ஒன்பது அடுக்கு மாடி கொண்ட வீடு இன்று இருக்கிறது. மூன்று ஃப்ளோர்கள் கட்டி முடிந்து விட்டன. இப்போதே குடிவைத்து விடலாம் என்று நோக்கம். பின்,





Trunblbs-இல் 14 அடுக்கு மாடிக் கட்டடம் பாதி உயர்ந்து வந்திருக்கிறது. இது தவிர புதிதாக நாம் போடுகிற ஸ்கீம்களில் டவர் ப்ளாக்ஸுக்கு இடம் ஒதுக்கியிருக்கிறோம். 10, 12 மாடிகளில் அந்த ப்ளாக்ஸ் அமைக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: எல்.ஐ.ஜி. வீடுகள் கட்டத் தருகிறோம். ஆனால் அதைப் பெறுகிறவர்கள் அதிகமாக வாடகைக்கு விட்டுக் கொடுக்கும் பழக்கம் சென்னையில் எல்லா இடங்களிலும் இருந்து கொண்டு வருகிறது. அதைத் தடுக்க அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எல்லா நடவடிக்கைகளும் எடுத்துத்தான் பார்க்கிறோம். இருந்தாலும், ஏமாற்றுகிறவர்கள் தான் சர்க்கார் அதிகாரிகளை விட கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். விதிகள் எல்லாம் போட்டு இவ்வளவு நாள் வரை விற்கக் கூடாது, இவ்வளவு நாள் வரை வேறு உபயோகத்திற்குக் கொடுக்கக் கூடாது என்றெல்லாம் விதிகள் இருந்தாலும் சிலர் ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அது தடுக்கப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: 6,500 ரூபாயில் வீடு கட்டி அங்கு உள்ளே நுழைந்து பார்க்க நான்கணா கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அந்தமாதிரி வீடுகளை கிராமப் பகுதிகளில் விஸ்தரிக்க எண்ணமுண்டா? அந்த அளவிற்காவது முன்னேற்றம் காண வழி வகை செய்யப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போதுதான் முதல் முறையாக பரீட்சார்த்தமாகக் கட்டியிருக்கிறோம். பரீட்சை செய்வதற்கே ரொம்பப் பேர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. பரீட்சை செய்வதற்கே சர்க்கார் உத்தரவு எல்லாம் போட்டுத்தான் செய்ய வேண்டியிருந்தது. அதைப் பார்த்ததில் அது நன்றாகத்தான் இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து பார்த்ததில். வெளியிட்ட டெஸ்ட், காற்றோட்டம் எவ்வளவு அதிகம் தாங்கும் என்றெல்லாம் பார்த்ததில் நன்றாகத்தான் இருக்கிறது. இதை விஸ்தரிப்பதற்கான நோக்கம் சர்க்காருக்கு இருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: நகர வீட்டு வசதி போர்டின் கீழ் அமைக்கப்பட்ட பல இடங்களில் வீடு கட்டப்படாமலேயே பல மனைகள் இன்னும் காலியாகவே இருக்கின்றன. பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகளாகவே அப்படி இருந்து கொண்டிருக்கின்றன. அந்தக் காலி மனைகள் விஷயத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? காலி மனைகளின் உரிமையாளர்கள் ஒரு ஆண்டுக்குள் அந்த வீடுகளைக் கட்டவேண்டும், இல்லாவிட்டால் அரசாங்கமோ அல்லது வீட்டு வசதி போர்டோ அதை எடுத்துக் கொள்ளும் என்ற தாக்கீது அனுப்பப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பழைய ஸி.ஐ.டி.யில் என்ன விதிகள் இருந்தன என்று தெரியாது. ஹௌஸிங் போர்டு ஆரம்பித்த பிறகு இந்த மாதிரி விதிகள் எல்லாம் போட்டிருக்

[4th November 1965

றோம். அப்படிக் கட்டாவிட்டால் அதை எடுத்து வீடுகள் கட்டிக் கொண்டு வருகிறார்கள் என்பது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். ஸி. ஐ. டி. விதிகளில் அப்படி இருக்கிறதா என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்து பதில் சொல்ல முடியும்.

*270 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோடம்பாக்கம்-புதூரில் போடப்பட்டிருக்கும் திட்டப்படி குடிசை வாழ் மக்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் கிரவுண்டுகள் எத்தனை ?

(இ) அங்கே கட்டுவதாகத் திட்டமிட்டிருக்கும் மேற்கத்திய பாணி ஓட்டலுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் கிரவுண்டுகள் எத்தனை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The extent of land earmarked for slum (hut) dwellers in Kodambakkam–Pudur Part I Scheme area is about 50 acres and that earmarked tentatively in Kodambakkam-Pudur Part II area is about 75 acres.

(b) No provision has been made for the construction of Western style Hotel in the layout for the Kodambakkam-Pudur Part I and Part II Scheme areas.

### வதிட்டபுரத்திற்குக் கிராம வீடு கட்டும் திட்டம்

* 271 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், வதிட்டபுரம் கிராமத்தில் கிராம வீடுகட்டும் திட்டம் (Rural Housing Scheme) ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கோரி வேப்பூர் பஞ்சாயத்து யூனியனிடமிருந்து தீர்மானம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) No, Sir. However, at the instance of the Collector of Tiruchirappalli, the Government have approved the selection of the Vashistapuram village for the implementation of the Village Housing Project Scheme.

### Cattle development

*272 Q.—SRI C. M. AMBIKAPATHI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether this Government has any proposal to set up Intensive cattle development blocks; and

(b) if so, where and the details thereof?



4th November 1965]

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) The Government have sanctioned the establishment of Intensive cattle Development Projects one each in Madras, Madurai and Coimbatore milk shed areas during 1964–66 under the Crash Programme sponsored by the Government of India at a total cost of Rs. 133.69 lakhs. The scheme envisages a comprehensive integrated and intensified development of cattle breeding, fodder production, disease control and dairy extension work.

திரு. சி. ம. அம்பிகாபதி : தஞ்சை ஜில்லாவில் இதுமாதிரி ஒரு ஸ்கீம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : க்ராஷ் ப்ரோக்ராமின் கீழ் மதராஸ் ப்ராஜெக்ட், கோவை ப்ராஜெக்ட், மதுரை ப்ராஜெக்ட், இந்த மூன்று இடங்களில்தான் இப்போது ஏற்பாடு செய்திருக்கிறோம். பின்னால் நீடிக்கும்போது தஞ்சை ஜில்லா பற்றியும் கவனிக்கப்படும்.

* 273 கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல்: திரு. வை. சங்கரன் : } கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் 50 லட்சம் ரூபாயில் பெரிய மாட்டுப் பண்ணை ஒன்று நிறுவ வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடமிருந்து யோசனை ஏதேனும் இம் மாநில அரசுக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) தமிழ்நாட்டில் ரூபாய் 50 லட்சம் செலவில் தர்பார்கர் இன (Tarparkar breed) கறவை மாடுகளின் அபிவிருத்திக்காக மாட்டுப் பண்ணை ஒன்றை துவக்க இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

(இ) இப் பண்ணையை அமைப்பதற்கும் தகுந்த இடத்தைத் தேடிப் பிடிக்க இப்போது மாநில அரசாங்கம் முயன்று வருகிறது.

(a) The Government of India propose to start a cattle farm in Madras State at a cost of Rs. 50 lakhs for development of Tarparkar breed of dairy cattle.

(b) The State Government are now in search of a suitable place for location of the Farm.

திரு. வை. சங்கரன் : இதற்கான இடத்திற்கு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்று சர்க்கார் நினைக்கின்றது ? இப்போது எந்த அளவுக்குத் தேடிக் கொண்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். 500 ஏக்கர் நிலம் புஞ்சையாக இருக்க வேண்டும். 500 ஏக்கர் நிலம் நஞ்சையாக இருக்க வேண்டும். புல் வளரக்கூடிய

இடமாக இருக்க வேண்டும். மாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்ற இடமாக இருக்க வேண்டும்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியபடி ஏறத்தாழ 1,500 ஏக்கர் பரப்புள்ள ஒரு மாட்டுப் பண்ணை இப்போது ஒரத்தநாடில் இருந்து வருகிறது. ஆகவே, அந்த இடத்திலேயே இந்த மாட்டுப்பண்ணையையும் வைப்பதற்கு சர்க்கார் முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** இருக்கிற மாட்டுப்பண்ணையிலேயே மேலும் மாட்டுப்பண்ணையை வைக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. இது மத்திய சர்க்காரால் செலவு செய்யப்படுகிற திட்டம். ஆகவே, மத்திய அரசாங்கத்திற்கு வெற்றியைக் காண்பிப்பதற்குத் தகுந்தமாதிரியான இடத்தில் இந்தத் திட்டத்தை அமல் செய்ய வேண்டும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** இராமநாதபுரம் ஜில்லாவில் பல லட்சக்கணக்கான ஏக்கர் சர்க்கார் நிலங்கள்—தரிசாகக் கிடக்கின்றன. மாட்டுப்பண்ணை வைப்பதற்கும் புல் வளருவதற்கும் ஏற்ற இடமாக இருக்கிறது. ஆகவே, புதிய நஞ்சை நிலங்களைப் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து வாங்குவதைவிட சர்க்கார் புறம்போக்கு நிலங்களையே இந்தப் பண்ணைக்கு உபயோகப்படுத்தலாம் என்ற அடிப்படையில் இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சில இடங்களில் வேண்டிய அளவுக்கு நிலங்கள் இருக்கின்றன. ஆனால், இருக்கின்ற நிலங்கள் மாட்டுப் பண்ணை வைப்பதற்குத் தகுதியான இடங்களாக இருக்கவேண்டும். புல் வளராத இடத்தில் கொண்டு போய் மாட்டுப்பண்ணையை வைப்பது என்பது சாத்தியமல்ல.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சார், மாடு அபிவிருத்திக்கு ஏற்ற இடமாக இருக்கின்ற நீலகிரி ஜில்லாவில் இப்போது சில பண்ணைகள் இருக்கின்றன. ஆகவே, இன்னும் அபிவிருத்தி செய்கின்ற அளவில், நீலகிரி, கூடலூர் போன்ற பகுதிகளில்—நன்றாக புல் வளரக்கூடிய இடத்தில்—இந்த மாட்டுப்பண்ணையை வைப்பதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** உதகையில் ஏற்கனவேயே மாட்டுப் பண்ணை, ஆட்டுப்பண்ணை முதலியவை இருக்கின்றன. ஆகவே, அந்த இடத்தில் மேலும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதாக இல்லை. முக்கியமாக, சென்னைக்குப் பக்கத்தில் இருக்கின்ற மாதவரம் மில்க் யூனிட்டுக்கு மேலும் பால் கிடைக்க வேண்டும். ஆகவே, இதைச் சென்னையின் பக்கத்திலேயே வைப்பதற்கு சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** தலைவர் அவர்களே, தஞ்சையிலே நஞ்சை அதிகமாக இருக்கிறது. இராமநாதபுரத்தில் மேய்ச்சலுக்கு வசதியிராது. ஆகவே, எல்லா வசதிகளும் கொண்டிருக்கிற நெல்லையில் இதற்காக வேண்டிய இடங்கள் இருக்கின்றன.





இப்போது ஏற்கனவே ஒரு மாட்டுப்பண்ணை இருந்து வருகிறது. இதை இன்னும் அபிவிருத்தி செய்கின்ற முறையில், நெல்லையிலேயே இந்தப் பண்ணையை நிறுவுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** நெல்லையில், நெல்லையப்பர் கோவிலின் இடத்தில் ஏற்கனவே மாட்டுப்பண்ணை, ஆட்டுப்பண்ணை இவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இப்போது இந்தத் திட்டம் அங்கு வராது என்று நினைக்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி:** சார், அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் ஜில்லாவில் புல்லே வளராது என்று சொல்கிறார்கள் . . .

**கனம் திரு. பூ. கக்கன் :** ராமநாதபுரம் ஜில்லாவில் புல்லே முளைக்காது என்று நான் சொல்லவில்லை.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, இந்த மாட்டுப் பண்ணைக்கு மத்திய அரசாங்கம் ஒதுக்கியிருக்கிற இந்த 50 லட்சம் ரூபாயை இத்தனை காலத்திற்குள் செலவு செய்தாக வேண்டும் என்று ஏதாவது உத்தரவு போட்டிருக்கிறார்களா, அல்லது நாம் இடம் தேடி அலைவதற்குள் இந்தத் திட்டம் போய்விடுமா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தத் திட்டத்தின் மூலமாக நல்ல கிடேரிகளை அதாவது சுமார் 300 'அடல்ட் கௌஸ்'-ஐ தயார் செய்ய வேண்டும் என்றிருக்கிறது. இதற்குத் தகுந்த இடம் வேண்டும். இதற்கான இடத்தைப் பார்த்து ஓரளவுக்கு முடிவு செய்தாகிவிட்டது என்று நினைக்கிறேன். மத்திய அரசாங்க அதிகாரி பார்வையிட்ட பின் இது பற்றி இறுதியாக முடிவு செய்யப்படும்.

**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** தென்னாற்காடு ஜில்லாவில் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இந்த இடங்களில் நல்ல முறையில் மாடுகளை அபிவிருத்தி செய்யலாம், புல்லையும் விளைவிக்கலாம். ஆகவே, இங்கு இந்தத் திட்டத்தை அமல் நடத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன்:** எங்கெல்லாம் கால்நடைப் பண்ணை வைப்பதற்கு ஏற்ற இடங்கள் இருக்கின்றனவோ அந்த இடங்களில் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் உதவியில்லாமலேயே—நம்முடைய சர்க்காரிலிருந்தே—மாட்டுப்பண்ணைகளை ஏற்படுத்துவது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. எஸ். முருகையன்:** அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில், சென்னைக்கு அருகில் இந்தத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அப்படியென்றால் சென்னைக்கு அருகாமையிலுள்ள வட ஆற்காடு மாவட்டத்தில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன்:** சென்னைக்கு அருகாமையில் என்று சொல்லும்போது, அருகாமையில் எங்கே வசதியாக இருக்கிறதோ அந்த இடத்தில் இந்தத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

* 274 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா திருத்துறைப்பூண்டி தாலூகாவில் உள்ள உம்பளச்சேரி இன பொலிக் காளைகள் அகில இந்திய அங்கீகாரம் பெற்ற கால்நடை இனம் தானா?

(இ) கீழ்த்தஞ்சை பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களில் 1963-64-க்கு எத்தனை கூட்டு மன்றங்களுக்கு உம்பளச்சேரி இன மாடுகள் **premium** ஆக கொடுக்கப்பட்டுள்ளது, கூட்டு மன்ற வாரியாக?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) இந்திய அரசாங்கம் இந்நாட்டில் வெவ்வேறு மண்டலங்களுக்கான மாடுகள் இனக்கலப்புக் கொள்கையை வகுக்கையில் உம்பளச்சேரி இனமாடுகளை அங்கீகரிக்கப்பட்ட மாட்டினங்களில் ஒன்றென நிச்சயித்து, ஒப்புக் கொண்டு இருக்கிறது. அதனை அகில இந்திய முக்கியத்துவம் பெற்ற மாட்டினமாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் ஏற்றுக் கொள்ளவில்லை.

(இ) சபைமுன் ஒரு விவர அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** சார், நல்ல தரமான மாடுகள் தமிழ்நாட்டில் ஏராளம் இருக்கின்றன. இவற்றை இன்னும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் மேலும் 50 லட்சம் ரூபாய் செலவு செய்து ஒரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனையும் இருக்கிறது. இந்தத் திட்டத்தின்படி இந்தப் புதிய பண்ணையை ஓரிடத்தில் அமைப்பதற்குப் பதிலாக, நஞ்சை நிலங்கள் ஏராளமாக இருக்கின்றது கோவில்களில் ஏற்படுத்தலாம். பல கோவில்களிலும் பண்ணைகளை ஏற்படுத்தி நல்ல முறையில் மாடுகளை அபிவிருத்தி செய்வது தொடர்ந்து இருந்து வரும் பழக்கமாகும். ஆகவே, இந்த 50 லட்சம் ரூபாயையும் தமிழ் நாட்டிலுள்ள கோவில்களுக்கு வழங்கி உம்பளச்சேரி மாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** உம்பளச்சேரியிலிருந்து அதிகப்படியாகப் பால் வராது. கனம் அங்கத்தினர் இப்போது கேட்கும் கேள்வி முன்னால் போடப்பட்ட கேள்வியோடு சேர்ந்தது. இந்தக் கேள்விக்குச் சம்பந்தமில்லை.

**கனம் திரு. ஆ. கு. சுப்பையா:** சார், உம்பளச்சேரி காளைகளுக்குப் பதிலாக காங்கேயம் காளைகளைத்தான் வாங்கவேண்டும் என்று சர்க்காரிலிருந்து ஏதாவது தாக்கீது அனுப்பியிருக்கிறார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அப்படி ஒன்றுமில்லை. தஞ்சை ஜில்லாவில் உம்பளச்சேரி மாடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாடுகள் கொடுக்கப்படும் போதும் இந்த இனத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

* 79—80-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. சி. ம. அம்பிகாபதி:** சபையில் வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையைப் பார்க்கும்போது, நன்னிலம், தலைஞாயிறு, கீவளூர், கொரடாச்சேரி போன்ற பிளாக்குகளில் 1963—64-ல் உம்பளச்சேரி காளைகள் வாங்கி கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. இந்தப் பகுதிகளிலிருந்து அப்ளிகேஷன்கள் வரவில்லையா? அல்லது அப்ளிகேஷன்கள் வந்தும் வாங்கிக் கொடுக்கப்படவில்லையா, அப்படியென்றால், அதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அப்ளிகேஷன்கள் வந்ததாக என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

* 275 Q.—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal with the Government during the Fourth Plan to introduce a Scheme of Cattle Insurance in the interests of cattle breeders?

The Hon. Sri P. KAKKAN: It is proposed to introduce Cattle Insurance on a pilot basis in the Intensive Cattle Development Project areas of Madras, Madurai and Coimbatore.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் கால்நடை முனைப்பு வளர்ப்புப் பகுதிகளில் கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டத்தை ஒரு முன்னோடித் திட்ட அடிப்படையில் கொண்டு வரத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

### மாதவரம் பால் பண்ணை

* 276 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாதவரம் பால் பண்ணையில், பணியாளர் எண்ணிக்கையைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு மதிப்பீட்டுக் குழு செய்த சிபாரிசின்மீது எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

The Hon. Sri V. RAMAIAH: The Milk Commissioner has retrenched a total number of 97 workers paid from contingencies in the various sections of the Madras Dairy and Milk Project as detailed below:—

| *Name of section in the Project.* | *Number of posts retrenched* |
|---|---|
| Dairy ... ... ... ... .. ... | 46 |
| Colony ... ... ... ... ... ... | 41 |
| Miscellaneous (Calf rearing, Transport, Office, Chilling Centres, etc.) ... ... ... | 10 |
| Total ... | 97 |

[4th November 1965

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத்தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணை திறம்பட பணியாற்றுவதற்குத் தக்க ஒரு அறிக்கை கொடுக்கும்படி ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. அவருடைய அறிக்கை சர்க்காருக்கு வந்து விட்டதா? அப்படியென்ருல் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** சீப்-செக்ரட்டரி அவர்கள் இதைப் பற்றி பரிசீலனை செய்து ஒரு அறிக்கை சர்க்காருக்குக் கொடுத்தி ருக்கிருர். அதை ஏற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

*** 277 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அண்மையில் மாதவரம் பால் பண்ணையில் உள்ள மாடுகள் இறந்தன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) During the period from 25th December 1964 to 24th June 1965, 42 buffaloes, 511 cows and 240 calves died in the colony. Of these, 37 buffaloes and 492 cows died due to the rinderpest attack which was prevalent in the colony from last week of November 1964 to the middle of February 1965. The 340 calves died on account of rinderpest and foot and mouth diseases. The rest of the animals died due to debility, old age and other natural causes.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தப் பண்ணையில் விலையுயர்ந்த மாடுகள் பல இறந்து போயிருக்கின்றன. இவற்றுக்கு வியாதி வந்தவுடனேயே மாடுகளைக் கவனிப்பதற்குக் கால்நடை டாக்டர் இல்லையா? அல்லது டாக்டர்கள் இருந்தும் அசிரத்தையாக இருந்தார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அங்குள்ள கால்நடைகளுக்கு வியாதி வந்தவுடனேயே அங்குள்ள டாக்டர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்ததின் காரணத்தினுல்தான் இந்த அளவோடு சேதம் நின்றது. இல்லையென்ருல் மாட்டுப் பண்ணை முழுவதுமே போயிருக்கும். மாட்டுப்பண்ணையோடு மட்டுமல்ல, பக்கத்திலுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகளுக்கும் சேதம் ஏற்பட்டிருக்கும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சார், அப்படி இறந்த மாடுகள் எல்லாம் லைஸென்ஸ்தார்களுடைய மாடுகள். மாடுகள் இறந்த காரணத்தினுல் பல லைஸென்ஸ்தார்கள் மீண்டும் அங்கு இருக்கத் தயங்கிக் கொண்டிருக்கிருர்கள். லைஸென்ஸ்தார்கள் உதவி கேட்டு ஏதாவது விண்ணப்பம் செய்திருந்தார்களா ? அரசாங்கம் ஏதாவது அனுமதித்திருக்கிறதா ?



4th November 1965]

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அவர்களுடைய தேவைகளைக் கோரிக்கைகளாகப் போட்டிருக்கிருர்கள். எல்லாவற்றையும் பரிசீலனை செய்து எந்தெந்த விதத்தில் உதவி செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது. வேறு தனிக் கேள்வி போட்டால் இதைப் பற்றிய விவரம் சொல்லலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** மாடுகளுக்கு தற்காப்பாகப் பஞ்சாயத்து யூனியன்கள்கூட வியாதி வராமல் தடுக்க ஊசி போடப்படுகிறது. இவ்வளவு பெரிய பால் பண்ணையில் 340 மாடுகள் சாகும் அளவுக்கு வியாதி ஏற்பட்டிருப்பதால் தற்காப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்ய வில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ராஜ்யத்தில் மற்ற இடங்களில் எடுக்கக் கூடிய தற்காப்பு நடவடிக்கைகளை விட, பாதுகாப்புகளை விட அதிகமாக நடவடிக்கை எடுத்து இந்தக் காலனியில் அதிகாரிகளும் நிபுணர்களும் வேலை செய்கிருர்கள். அப்படி இருந்தும் இந்த வியாதி பரவிய காரணத்தினுல் ஏராள சேதம் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, சிக்க் கண்ட மாடு களைத் தனியாக வைத்துப் பராமரிக்க போதிய ஷெட் வசதி தரவில்லை என்று கேள்விப்படுகிறேமே அது உண்மைதானு ?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** அது உண்மை அல்ல.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்தத் தொத்து வியாதி வெளியே யிருந்து இந்தப் பால் பண்ணைக்கு வந்ததா? இந்த வியாதி பால் பண்ணையில் மட்டும் ஏற்பட்டதாகத் தெரிகிறது. வெளியே இருந்ததாகத் தெரியவில்லை. பால் பண்ணையில என்ன சூழ்நிலை இந்த வியாதியை ஏற்படுத்தியது ? நஷ்டம் அடைந்த மாடுகளின் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்தத் தொத்து வியாதி அங்கேயே உற்பத்தி ஆனதல்ல, வெளியே இருந்து வந்ததுதான். காலனியில் மாடுகள் நுழைவதற்கான விதி முறைகள் கண்டிப்பாக அனுஷ்டிக்கப்பட்ட போதிலும் நோய் கண்ட மாடுகள் உள்ளே வந்திருக்கின்றன. அதனுல் ஏற்பட்டதுதான் இது. பாதிக்கப் பட்டவர்கள் காலனியில் இருக்கிற காரணத்தால் விசேஷ சலுகை எதுவும் காட்ட முடியாது. இதே மாதிரி நோயினுல் பாதிக்கப் பட்ட மற்றவர்களுக்கு என்ன உதவி கொடுக்கிருர்களோ அதைத் தான் கொடுக்க முடியும். காலனி நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் ஷெட் வாடகை போன்ற இதிலெல்லாம் கொஞ்சம் சலுகை காட்டப்படுகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்தப் பால் பண்ணை சென்னை நகர மக்களுக்குப் பால் வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மாடுகள் இறந்த காரணத்தினுல் மக்களுக்கு வழங்கும் பாலின் அளவு குறைந்த காரணத்தினுல் சென்னை நகரமக்களுக்குப் போதிய அளவு பால் கிடைக்க என்ன மாற்றுத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

[4th November 1965

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்த ஸ்தாபனத்தால் மட்டும் தான் சென்னை நகர மக்களுக்குப் பால் கிடைக்கிறது என்பதல்ல. தொத்து வியாதி ஏற்பட்டு மாடுகள் இறந்த காரணத்தினால் வழங்கும் பாலின் அளவு குறைந்தது. திரும்பவும் வேண்டிய அளவு உற்பத்தி செய்ய என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டு வருகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மாதவரம் பால் பண்ணையில் நல்ல வசதிகள் இருக்கின்றன. டாக்டர் இருக்கிறார். இருந்தும் 300-க்கு மேற்பட்ட மாடுகள் இறக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப் பற்றி விசாரிக்க அரசாங்கம் ஏதாவது கமிட்டி போட்டதா ? அது அறிக்கை சமர்ப்பித்திருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இதற்குக் கமிட்டியே தேவையில்லை. இது தொத்து நோய். இங்கே பரவிவிட்டது. பரவி விட்டது என்று சும்மா இராமல், அரசாங்கத்தின் பொறுப்பில் காலி இருக்கிற காரணத்தினால், ராஜ்யத்தில் இருக்கிற நிபுணர்கள் மட்டுமல்லாமல் உடனடியாக இந்திய அரசாங்கம் சம்பந்தப்பட்டவர்களைக்கூட வரவழைத்துச் சில தினங்கள் தங்கும்படி செய்து கவனிக்க ஏற்பாடு செய்தோம். நமது முயற்சிக் குறைவால் ஏற்பட்டதல்ல. அவர்கள் கண்டு பிடித்திருக்கக் கூடிய மருந்துகூட கொஞ்சம் பலஹீனமானது என்று அவர்கள் ஒத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையில் இப்போது எவ்வளவு மாடுகள் வைத்து வளர்க்க வசதி செய்யப்பட்டிருக்கிறது? இப்போது எவ்வளவு மாடுகள் இருக்கின்றன ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும். அங்கு இருக்கக்கூடிய வசதிகளைப் பரிபூர்ணமாகப் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்கு இப்போது அங்கு மாடுகள் இல்லை.

### *Madurai Milk Project*

* 278 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the probable time when the Madurai Milk Project is expected to be commissioned;

(*b*) the extent of work completed till date; and

(*c*) the balance of work, that remains to be carried out?

THE HON SRI V. RAMAIAH : (*a*) The Madurai Milk Project is expected to be commissioned by the middle of 1966.

(*b*) Construction of buildings for the two chilling centres at Srivilliputhur and Virudhunagar has been completed. Construction of buildings for the main dairy at Madurai is in progress. Service buildings, such as godowns, garage and office have been completed.



4th November 1965]

(*c*) Completion of the main dairy buildings, erection of plant and equipment in the Main Dairy and Chilling Centres and mechanical and electrical works are yet to be completed.

**திரு. வை. சங்கரன் :** இந்தத் திட்டம் சம்பந்தமான பாஸ்ட்டுரைஸேஷன் ப்ளாண்ட்ஸ், சில்லிங் ப்ளாண்ட்ஸ் முதலிய வெளி நாட்டிலிருந்து வரவேண்டியவைகள் பூர்ணமாக வந்து விட்டனவா? இல்லாவிட்டால் வேலைக்குத் தாமதம் ஏற்படும் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்தத் திட்டத்திற்கான எக்விப்மெண்ட் எல்லாம் வந்து விட்டன.

### கூட்டுறவு பால் வழங்கும் சொசைட்டி, பாராசூர்.

*** 279 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், பாராசூர் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள கூட்டுறவுப் பால் வழங்கும் சொசைட்டி சரிவர நடைபெறாமல் இருப்பது குறித்து அரசாங்கம் அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes. The affairs of the Parasur Milk Supply Co-operative Society, Limited in the Cheyyar Taluk of North Arcot District being not satisfactory, an enquiry under Section 65 of the Madras Co-operative Societies Act of 1961 has been ordered into the constitution, working and financial condition of the Society.

(*b*) Further action to collect the Government dues and to set right the affairs of the Society will be taken on receipt of the enquiry report from the Enquiry Officer.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே. இந்த சொஸைட்டிக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது? எப்போது கொடுக்கப்பட்டது? நன்றாக நடைபெறவில்லை என்ற இந்தச் செய்தி எப்போது சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டது? சர்க்கார் எப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டது ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்த சொஸைட்டிக்குத் தொகை கொடுத்தது 19—2—1963-ல் ரூ. 2,000 கொடுத்திருக்கிறோம். அந்தப் பணத்திலே ரூ. 600 வந்தாயிற்று. மீதம் வரவேண்டியது ரூ. 1,400 பிரின்சிபாலுக்கும், ரூ. 203.11 இண்டரஸ்டுக்கும். இந்தக் கணக்கு 30—6—1965 வரை. மற்ற விவரங்களுக்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

[4th November 1965

### கரம்பக்குடி நகர பஸ் நிலையம்.

*280 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரம்பக்குடி நகர பஸ்டாண்டை விரிவு படுத்த வேண்டி கடன் கோரி கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்திடமிருந்து அண்மையில் சர்க்காருக்கு ஏதேனும் விண்ணப்பம் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம்.

(இ) விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு கடன் வழங்கப் பட்டுள்ளது.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கடன் வழங்கப்பட்டதாக அறிவித்திருக்கிறார்கள். எத்தனை ஆயிரம் வழங்கப்பட்டது ? எப்போது கொடுக்கப்பட்டது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** 50,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது சமீபத்திலே.

### தேசியப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கப்பட்ட தொகை.

*281 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-65-ல் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றிய மன்றத்திலிருந்து தேசியப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

**கனம் திரு. கோ. பூவராகன் :** கரம்பக்குடி பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து 1964-65-ல் தேசியப் பாதுகாப்பு நிதிக்காகத் தொகை எதுவும் வழங்கப்படவில்லை. ஆயினும், 1964-65-ம் ஆண்டிற்கு முன்பு பல்வேறு வாயில்கள் மூலமாக இந்தப் பஞ்சாயத்து யூனியனில் ரூ. 9,154.00 திரட்டப்பட்டது.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து கொடுக்கப்படவில்லை, பொது மக்களிடமிருந்து வசூல் செய்த ரூ. 400-ஐ அமைச்சரிடம் கொடுத்ததாக முன்பு இருந்த ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார்கள். அது கிடைத்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** ரூ. 9,154-க்கு என்னிடம் இருக்கும் விவரம் வருமாறு :—

| | | RS. | P. |
|---|---|---|---|
| I | Amount collected from 42 individuals by the Commissioner, Panchayat Union, Karambakudi. | 599 | 00 |
| | Amount collected from the Devasthanam, Ambukoil. | 8 | 75 |



4th November 1965]

| | | RS. | P. |
|---|---|---|---|
| II | Amount collected from the Panchayat Union Staff and Teachers. | 487 | 25 |
| | Amount collected from the three village Panchayats. | 153 | 00 |
| III | Amount collected by the Tahsildar, Alangudi in the Panchayat Union area. | 4,444 | 00 |
| IV | Amount handed over to the Hon. Chief Minister at Pudukottai. | 3,462 | 00 |

### நகரசபைகள் பொருட்காட்சி நடத்தல்

*282 கேள்வி—திரு. எம். எஸ். மணி : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகரசபைகள் பொருட்காட்சி நடத்த அனுமதிக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு நகரசபைத் தலைவர்கள் ஏதேனும் கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) பொருட்காட்சிகள் நடத்தக் கூடாதென்று பொதுவாக விதிக்கப்பட்ட தடையை நீக்கி நகராட்சி மன்றங்கள் அவற்றை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு நகராட்சித் தலைவர்கள் சபையின் நிர்வாகக் குழு அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

(இ) பொருட்காட்சிகள் நடத்த அனுமதி வேண்டிச் செய்து கொள்ளும் மனுக்கள் அவற்றின் தகுதிகளை யொட்டி ஆலோசிக்கப் படுகின்றன.

**திரு. எம். எஸ். மணி :** சார், எந்த, எந்த நகராட்சியிலிருந்து, பொருட்காட்சி நடத்த வேண்டும் என்று கோரி அனுமதி கேட்டு கடிதம் வந்திருக்கிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இப்பொழுது அனுமதி கொடுத்திருப்பது மதுரை, சேலம் இரண்டு நகராட்சி மன்றங்களுக்கும். வேறு எந்த, எந்த நகராட்சியிலிருந்து அனுமதி கேட்டிருக்கிறார்கள் என்கிற தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஸார், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தேசீய நெருக்கடியை ஒட்டி, ஆடம்பர விழாக்கள் ஒன்றும் நடத்த வேண்டாம் என்று இருப்பதால், எந்த விதமான பொருட்காட்சியோ, கண்காட்சியோ நடத்த அனுமதி கொடுக்கக் கூடாது என்பதை அரசாங்கம் கடைப்பிடிக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொருட்காட்சிகளை ஆடம்பர விழா என்று எடுத்துக்கொள்ளக் கூடாது.

[4th November 1965

**திரு. து. ப. அழகமுத்து:** தலைவர் அவர்களே. பொருட்காட்சிகள் நடத்த அனுமதி கேட்கும்போது, அந்த, அந்த நகராட்சிகளுடைய தகுதிகள் கவனிக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்த, எந்தத் தகுதிகள் பொருட்காட்சி நடத்த ஒரு நகர சபைக்கு வேண்டும் என்று அறியலாமா?

**கனம் திரு கோ. பூவராகன்:** நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமாக இடம் வேண்டும். அந்த நகர சபை ஏற்கனவே அம்மாதிரி பொருட்காட்சி நடத்தி லாபம் அடைந்திருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். குறிப்பாக, அப்படிப் பொருட்காட்சி நடத்துவதால் நகராட்சி அதிகாரிகளுக்கு அவர்கள் வேலைக்குக் குந்தகமாக இல்லாமல் இருக்க வேண்டும்.

**திரு கோ. சி. மணி:** தலைவர் அவர்களே, நகராட்சிக்குச் சொந்தமான இடம் இருந்தும், போதிய நிதி வசதி இருந்தும், கும்பகோணம் நகராட்சிக்குச் சென்ற ஆண்டு மாசி மகத்தின் போது பொருட்காட்சி நடத்த அனுமதி கொடுக்காத காரணம் என்ன?

**கனம் திரு. கோ. பூவராகன்:** கும்பகோணம் நகராட்சிக்கு அப்படிச் சொந்தமாக இடம் இருப்பதாகத் தகவல் இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியின்போது முதல் அமைச்சர், விளம்பரத்துறை அமைச்சர் இருவருமே பதில் சொன்னார்கள். ஆனால் இரண்டுபேர்களுடைய பதில்களுமே கேட்கவில்லை (சிரிப்பு). அது என்ன பதில் என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

### நேருவின் உருவப் படம்

* 283 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மறைந்த பிரதமர் நேரு அவர்களின் உருவத்தை நிறுவ வேண்டுமென்று வடாற்காடு மாவட்டம், வேலூர் நகராட்சியிடமிருந்து தீர்மானம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**கனம் திரு. கோ. பூவராகன்:** (அ) & (இ) வேலூர் நகராட்சி மன்றம், முன்னாள் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்களின் உருவச் சிலை ஒன்றை ஆற்காடு சாலையும் காட்பாடி சாலையும் சந்திக்குமிடத்தில் நிறுவவேண்டுமென்று 22—6—1964 அன்று தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், இந்த இடம் அதற்கேற்ற சிறந்த இடமென்று நெடுஞ்சாலைத்துறை கருதவில்லை. எனவே, நகராட்சி மன்றம் நெடுஞ்சாலைத் துறையைக் கலந்து கொண்டு இன்னொரு தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்த இடம் முடிவாகத் தெரிந்தெடுக்கப்படவில்லை. ஆகவே நேரு உருவச் சிலையை நிறுவ அனுமதி வேண்டி நகராட்சி அரசாங்கத்துக்கு எழுதவில்லை.



4th November 1965]

### Service under Municipalities

*284 Q.—**Sri V. SANKARAN**: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the present stage of the proposal of the provincialisation of the Municipal services?

**கனம் திரு. கோ. பூவராகன்:** நகராட்சிகளிலுள்ள கமிஷனர், எஞ்சினியர், சுகாதார அதிகாரி ஆகிய உத்தியோகங்கள் ஏற்கனவே சர்க்கார் உத்தியோகங்களாக்கப்பட்டுள்ளன. இன்னும் சில உத்தியோகங்களைச் சர்க்கார் உத்தியோகங்களாக்கும் உத்தேசம் பரிசீலனையில் உள்ளது. இதற்காக மதராஸ் 1920-ம் வருடத்திய நகராட்சி சட்டத்தில் அவசியமான திருத்தங்கள் பற்றியும் கவனிக்கப்படுகிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், சில பதவிகளை அரசாங்க சர்வீஸாக எடுப்பதற்குப் பதிலாக, முனிசிபாலிடியில் உள்ள எல்லாச் சிப்பந்திகளையும், எல்லா முனிசிபாலிடி சிப்பந்திகளையும் ஒரே சர்வீஸ் என்று கொண்டுவந்து, சிப்பந்திகளை ஒரு முனிசிபாலிடியிலிருந்து இன்னொரு முனிசிபாலிடிக்கு மாற்றி அவர்களுக்குப் பிரமோஷனுக்கு உதவி செய்யும் வகையில் ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** பரிசீலனை செய்யும்போது, இவையெல்லாம் கவனிக்கப்படும்.

**திரு. வை. சங்கரன்:** ஸார், தற்போதுள்ள, முனிசிபாலிடி ஊழியர்களில் ஆபீசர்கள் போன்றவர்களுக்குப் பல சலுகைகளும், மேற்கொண்டு ப்ராஸ்பெக்ட்ஸுக்காக இம் முறையில் அரசாங்க ஊழியர்கள் நிலைக்கு வழி செய்யும்போது, கீழ்நிலை ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும் இதேபோல அவர்கள் நிலையில் முன்னேற்றம் காண ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** சட்டத்தைத் திருத்தி அமைக்கும்போது, இந்த யோசனைகளெல்லாம் கவனிக்கப்படும்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஸார், இந்த அலுவலர்களையெல்லாம் அரசாங்கமே நியமிப்பது என்கிற உத்தரவு எப்பொழுது அமுலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன்:** சட்டம் நிறைவேற்றிய பிறகு வரும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், இந்தச் சட்டத்தை எந்த வகையில் திருத்தி அமைக்கப் போகிறார்கள் என்பதைக்கூட அமைச்சர் குறிப்பிடவில்லை. அது போக, இது முனிசிபாலிடி சிப்பந்திகள் பற்றியது. அவர்களைத் தேர்ந்தெடுக்கவும், ஊதியம் நிர்ணயம் செய்யவும், வசதிகள் கொடுக்கவும், ஒழுங்குப் பிரச்சினைகளைப் பார்க்கவும், இதற்கென்று ஒரு சர்வீஸ் கமிஷன் அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** இந்த விஷயமும் சர்க்கார் கவனத்தில் இருக்கிறது.

[4th November 1965

*Bogalur Panchayat Union Office.*

* 285 Q.—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state whether there is any proposal before the Government to locate the Bogalur Panchayat Union Office at Nainarkoil, Ramanathapuram district?

The Hon. Sri G. BHUVARAHAN : This question has not been decided yet.

Mr. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ADJOURNMENT MOTIONS.

### (1) BONUS DISPUTE BETWEEN TEXTILE WORKERS AND TEXTILE MILLS IN COIMBATORE REGION.

Sri K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I have given notice of an adjournment motion to discuss the following matter of urgent public importance, viz.—

"the failure of the Government to take adequate steps for an amicable settlement regarding bonus dispute between several thousands textile workers and more than seventy textile mills in Coimbatore region and the consequent unrest and strained feelings among textile workers."

ஸார், இன்றைக்கு நாடு முழுவதிலும் ஒரு பெரிய ஐக்கியத்திற்கு அவசியம் ஏற்பட்டு, பகைவனை முறியடிக்க நாம் முனைந்திருக்கும் நேரம் இது என்பதை இந்த மன்றமும், அரசாங்கமும் அறியும். இப்படிப்பட்ட நேரத்தில், இந்த அவசரத் தீர்மானம் தமிழ் நாட்டு மன்றத்தில் வருகிறது. தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருகியுள்ள கோவை மாவட்டத்தில் இருக்கிற தொழிலாளர்களுக்கு சட்டப் படியும், நியாயமாகவும் கொடுக்க வேண்டிய போனசைக் கொடுக்க இன்னும் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. நான்கு மாதங்களாக நடைபெற்றிருக்கிற நடவடிக்கைகளின் விவரங்களை அரசாங்கம் உணரும். போனஸ் அவசரச் சட்டப்படி கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இரண்டாவதாக, போனஸ் மசோதா . .

Mr. SPEAKER : I request the hon. Member not to go into the details at this stage. Now, he has to convince me how this matter comes under the rules governing the admission of adjournment motions. At this stage, he has to refrain from referring to the various details.

Sri K. A. MATHIALAGAN : Sir, I am not going into the details. I am only justifying the motion which I have given notice of.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இது அவசரப் பிரேரணைக்கு உரியதா என்பதைத்தான் முதலில் பார்க்க வேண்டும். மற்றவைகளைப் பற்றி இப்பொழுது பேச வேண்டியது இல்லை.



4th November 1965]

**திரு. கே. ஏ. மதியழகன்:** கமிஷனர் பேச்சு முறிந்தபிறகு, இந்த அரசாங்கம் இரு தரப்பினரையும் அழைத்துப் பேசியிருக்கலாம். தொழில் உறவு, தொழில் அமைதி என்றெல்லாம் பேசுகிறோம். 'முதல் அமைச்சர் சென்று மாநாட்டைத் திறந்து வைக்கிறார்கள். கண்கவர் கோலத்துடன் முதலாளிகளை அழைத்து . . .

Mr. SPEAKER : No, no. The hon. Member is again going into the details. I am sorry, I cannot allow such allegations to be made at this stage.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இரு தரப்பினரையும் அழைத்து சர்க்கார் பேசியிருக்கலாம். அதிலே தவறியிருக்கிறது. சர்க்காருக்குப் பொறுப்பு இருக்கிறது. கனம் முதல் அமைச்சர் கோவைக்குப் போகிறார்கள். அங்கே தொழில் உறவு பற்றிப் பாராட்டுகிறார்கள். இன்றைக்கு போனஸ் ஆக்ட் பாஸ் ஆகியிருக்கிறது. அதைச் செயல் படுத்த முதலாளிகள் தவறியிருக்கிறார்கள். இது மிக நெருக்கடியான நிலையை உண்டுபண்ணியிருக்கிறது. இது முக்கியமான பிரச்சினை. ஆகவே, இதை அவசரத் தீர்மானமாக அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, 9-30 a.m.
இது அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் உறுப்பினர் அவர்கள் ஒரு பிரசங்கம் செய்தார்கள். ஆனால், இந்த விஷயம் அவர்களுக்குப் போதிய அளவு தெரியவில்லை என்று தான் நான் சொல்ல வேண்டும் அவசரப் பிரேரணைக்கு ஏன் உரியதல்ல என்று நான் சொல்கிறேன் என்றால், இதெல்லாம் சாதாரணமாக நிர்வாக தோரணையில் நடைபெறுகிறது. ஆண்டுதோறும் போனஸ் பிரச்னை வருவது உண்டு. அதைப்பற்றி கலந்து பேசுவது உண்டு. கலந்து பேசி, கூடிய வரைக்கும் மத்தியஸ்தத்திலேயே தீர்ப்பது உண்டு. கோர்ட்டுக்குப் போகாமல் தீர்த்துக் கொள்வது நலம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். ஆண்டுதோறும் அவ்வாறு தான் இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டுள்ளது. ஆனால், தீபாவளிக்கு முன்பு அட்வான்ஸ் கொடுக்கிறார்கள். தீபாவளிக்கு முன்பு எல்லாம் தீர்ந்து விடுவதில்லை. அட்வான்ஸ் எவ்வளவு கொடுப்பது என்பது பற்றி கலந்து பேசுவது உண்டு. அவ்வாறு கமிஷனர் கலந்து பேசி, இரு சாராருடன் பேசி, ஓரளவுக்கு அட்வான்ஸ் கொடுப்பது என்று கமிஷனர் தீர்ப்புக் கொடுத்தார்கள். அதை ஒரு சிலர் ஒப்புக் கொண்டார்கள். மற்றவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. நானும் கலந்து பேசாமல் இல்லை. நான் கோவைக்குப் போனபொழுது பேசினேன். 'இப்பொழுது கொடுப்பது அட்வான்ஸ் தான், பின்னால் அட்ஜெஸ்டு செய்து கொள்ளலாம், அதுவும் மில்களுக்கு உள்ளே உட்கார்ந்து கொண்டு ஸ்ட்ரைக் செய்வது நல்லது அல்ல, நியாயம் அல்ல, மற்றவர்கள் போவதைத் தடுப்பது சரியல்ல' என்று சொன்னேன். (குறுக்கீடு). உள்ளே உட்கார்ந்துகொண்டு ஸ்ட்ரைக் செய்வதும் உற்பத்திக்குத் தடை ஏற்படக்கூடிய ஸ்ட்ரைக் தான். பெண்களைக் கூட உள்ளே விட மறுத்தார்கள். எனக்குத் தெரியும் கனம் அங்கத்தினரை விட. நான் எல்லோரிடமும் கலந்து

[திரு. எம். பக்தவத்சலம்] [4th November 1965

பேசியிருக்கிறேன். அவ்வாறு எல்லாம் செய்வது சரியல்ல. அம்மாதிரி செய்தவர்களே என்னிடம் வந்தார்கள். அந்தத் தலைவர்களோடு கலந்து பேசினேன். "நீங்கள் இப்படியெல்லாம் செய்வது சரியல்ல. பின்னால் போனஸ் பிரச்னையை தீர்த்துக் கொள்ளலாம். வேண்டுமானால் அட்ஜுடிகேஷனுக்கு விடுவதற்கு என்றைக்கும் தயார்" என்று சொன்னேன். அட்வான்ஸ் பற்றி எல்லா வகையிலேயும் கவனம் செலுத்திக்கொண்டு தான் வருகிறது. அங்கே மேலே ஸ்ட்ரைக் செய்வது நல்லது அல்ல என்று சொன்னேன். முதலில் என்னிடம் ஒப்புக்கொண்டார்கள். மறுபடியும் கமிஷனர் முடிவு செய்ததற்கு மேலே எதாவது கொஞ்சம் கொடுங்கள் என்று கேட்டார்கள். இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல. அரசாங்கம் எந்தந்த வகையிலே என்னென்ன செய்ய முடியுமோ, எந்தெந்த வகையிலே கவனம் செலுத்த முடியுமோ அந்த அந்த வகையிலே கவனம் செலுத்திக்கொண்டு தான் வருகிறது. அதிலே ஒன்றும் தவறில்லை. அரசாங்கம் இதைச் செய்யவில்லை அதைச் செய்யவில்லை என்று சொல்வது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல. அரசாங்கத்தை கண்டிக்க வேண்டுமானால் பேசலாம். இப்படித் தான் செய்து இருக்கவேண்டும், அப்படித் தான் செய்து இருக்கவேண்டும் என்று சொல்வது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல. போனஸ் செட்டில்மெண்டு சமரசம் மூலமாக செய்துகொள்ளலாம். வேறு வழியில்லை என்றால், அட்ஜுடிகேஷனுக்கு ரெஃபர் பண்ணுவதற்கு தயார் என்று நான் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். தீபாவளிக்கு அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது. சில பேர்கள் வாங்கினார்கள் மற்றவர்கள் பின்னால் வாங்கினார்களோ என்னவோ தெரியாது. எப்படியும் இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I do not think that this is a matter for an adjournment motion as a machinery has been provided for under the Industrial Disputes Act and a regular procedure has also been laid down in that Act to deal with such disputes. Hence, I withhold my consent to it.

### (2) SHORTAGE OF KEROSENE.

MR. SPEAKER: The hon. Members, Sri M. V. Karivengadam and Sri M. Kalyanasundaram have given notices of an adjournment motion regarding scarcity of kerosene. The hon. Member, Sri Kalyanasundaram can speak.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று நான் பேசியபொழுதே சுட்டிக்காட்டியிருக்கிறேன். கிராமப்புறத்தில் மண்ணெண்ணெய் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. தொழிலாளிகள், விவசாயிகள் இவர்களெல்லாம் பகல் பூராவும் வேலை செய்துவிட்டு, இரவில் வீட்டிற்கு வந்து சமையல் செய்யவேண்டும். அவர்கள் இரவில் தான் குடும்ப வேலைகளை கவனிக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இந்தக் குடும்பங்களுக்கு இது பல விஷயங்களில் துன்பமாக இருக்கிறது.



4th November 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

நகர்புறங்களில் கூட, விறகுக்குப் பதிலாக, மண்ணெண்ணெய் அடுப்புகளை உபயோகப்படுத்தும் பழக்கத்துக்கு வந்துவிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் மண்ணெண்ணெய் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆலையிலே வேலை செய்யக் கூடிய தொழிலாளிக்கு இதனால் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதில் தான் கோளாறு இருக்கிறது. எண்ணெய் கிடைக்காமல் இல்லை. கிடைக்கிற எண்ணெயை சீராக விநியோகம் செய்யவேண்டும். மண்ணெண்யைப் பொறுத்தவரையில் ராணுவத் தேவைக்கு முதல் இடம் கொடுக்கவேண்டும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இருந்தாலும் மக்களுடைய அன்றாட தேவைக்கு ஓரளவாவது மண்ணெண்ணெய் சுலபமாக கிடைக்கும்படி செய்யவேண்டும். 18 லிட்டர் டின் ரூ. 18, 20 என்று பகிரங்கமாக விற்கப்படுகிறது. இதில் தான் கோளாறு இருக்கிறது. மக்களுக்கு இதனால் பெரிய அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அவசியமானால் அரசாங்கம் 'டிபன்ஸ் ஆஃப் இந்தியா' ரூல்ஸை பயன்படுத்தி தனிப்பட்டவர்களிடத்தில் உள்ள ஸ்டாக்கை எடுத்து, முறையாக கிராமப்புறங்களில் பஞ்சாயத்துகள் மூலமாகவும், அல்லது கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்குத் தான் இந்த அவசரப் பிரேரணைக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன்.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் ரூல் 41-ன் கீழ் இதே விஷயம் சம்பந்தமாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மந்திரி அவர்கள் ரூல் 41-ன் கீழ் ஸ்டேட்மெண்டு கொடுக்கும்பொழுது அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதற்குத் தகவல் கொடுப்பார்கள். என்னுடைய யோசனையைச் சொல்வதற்கு அதிலே இடமில்லை.

கனம் சபாநாயகர்: யோசனை சொல்லவேண்டும் என்பதற்காக 'அட்ஜர்ன்மெண்டு மோஷன்' நோட்டீஸ் கொடுப்பதா?

திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் சபாநாயகர் அவர்களே, இது எப்படி அவசரப் பிரேரணைக்குரியது என்பது முதலில் எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம். முன்பு சாதாரணமாக எல்லா பொதுமக்களுக்கும் அவர்களுக்கு வேண்டிய அளவுக்கு, உபயோகிக்க வேண்டிய அளவுக்கு கெரஸின் கிடைத்து வந்தது. ஆனால், இப்பொழுது தமிழகத்தில் பரவலாக பல இடங்களிலுள்ள விவசாயிகளுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி, விவசாயத்திற்கு வேண்டியதாயிருந்தாலும் அல்லது விளக்கு எரிப்பதற்கு வேண்டியதாயிருந்தாலும் அவர்களுக்கு ஏற்கனவே கிடைத்து வந்தது போல இப்பொழுது கிடைப்பது இல்லை. ஆகவே, பொது மக்கள் மிகவும் அவதியுறுகிறார்கள். ஆகையினால்தான் இது ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயமாக இருக்கிறது. இதைப் பற்றி விவாதிக்க இந்த மன்றத்திலுடைய நடவடிக்கைகளை ஒத்திவைத்தால் விவாதம் நல்ல பலன் உள்ளதாக இருக்கும்.

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [4th November 1965

அதுமட்டுமல்ல கண்ட்ரோல் விலைக்கு கெரஸின் கிடைக்கவில்லை, ஆனால் அநியாய விலைக்கு பிளாக் மார்கெட் விலைக்கு கிடைக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சபை முதல்வர் அவர்களின் கவனத்தை ஒரு முக்கியமான பிரச்னைக்கு இழுக்க ஆசைப்படுகிறேன். பல விவசாயிகள் ஆயில் என்ஜின் செட்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். டீஸல் ஆயில் உபயோகிக்கலாம் என்று இருந்தாலும் கூட, ஒரு சில ரக ஆயில் என்ஜின் செட்களுக்கு கெரஸின் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்தாலும் அதிக விலைக்குத் தான் கிடைக்கிறது.

Mr. SPEAKER: The hon. Member started his speech by saying how the matter comes under an adjournment motion. Now he is going on discussing it at length as if the adjournment motion has been admitted. There is scarcity of rice; there is scarcity of sugar; and there is scarcity of so many other things. But every such thing cannot come under an adjournment motion.

Sri M. V. KARIVENGADAM: Sir, it is a matter of urgent public importance.

Mr. SPEAKER: The hon. Member can speak on the matter when the Supplementary Demands are taken up for discussion.

Sri M. V. KARIVENGADAM: There is shortage of kerosene and that is why this is a matter of urgent public importance.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவசரப் பிரேரணை என்றால், 'அர்ஜெண்ட் மாட்டர் ஆஃப் பப்ளிக் இம்பார்டன்ஸ்' என்பதோடு கூட, 'ஸ்பெசிபிக் மாட்டராக'வும் இருக்க வேண்டும். எங்கே குறைவு, எந்த ஊரிலே கிடைக்கவில்லை என்று சொன்னால் கவனிக்கலாம். இப்பொழுது சில ஜில்லாக்களில் இந்தக் குறை இல்லை. சில இடங்களில் இருக்கிறது. சென்னை நகரத்தில் ரேஷன் மாதிரி முறையில் கொடுக்கிறார்கள்.

கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதிலிருந்து, ஆயில் என்ஜினுக்கு கெரஸின் உபயோகப்படுத்துகிறார்கள், அதற்கும் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அது தான் தவறு. அதனால் தான் பற்றாக்குறை வருகிறது. ஓரளவுக்கு பற்றாக்குறை இருப்பதினால், முக்கியமான உபயோகத்திற்கு முதலில் கொடுக்கவேண்டும். என்ஜினுக்கும் தவறுதலாக மண்ணெண்ணெயை கலந்து போட்டால், டீஸல், மண்ணெண்ணெய் இரண்டையும் கலந்து பரவாயில்லை என்று போட்டால், அப்படிப் போடுவதினால் தான் பற்றாக்குறை வருகிறது. தொடர்ந்து இந்த விஷயம் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. அவ்வப்பொழுது வேண்டிய அளவு கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது. ஏதாவது ஒரு ஊரிலே கிடைக்கவில்லை என்று சொன்னால், அதைக் கவனிக்கலாம். இந்த விஷயமாக



4th November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

ரூல் 41-ன் கீழ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு கனம் உணவு அமைச்சர் அவர்கள் பின்னாலே விளக்கம் கொடுப்பார்கள். ஆகவே, இதில் அவசரப் பிரேரணைக்கு இடமில்லை என்பதைத் தெரிவிக்கிறேன்.

Mr. SPEAKER: I withhold my consent to this adjournment motion.

(3) PROHIBITION OF ANNIVERSARY CELEBRATION OF LATE SRI MUTHU-RAMALINGA THEVAR UNDER SECTION 144, CRIMINAL PROCEDURE CODE.

Mr. SPEAKER: The hon. Members, Sri Sasivarna Thevar and Sri Cheemaichamy have given notice of an adjournment motion. I will read it.

"தமிழக அரசியல் பெரும் தலைவர்களில் ஒருவரான திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் இரண்டாவது குரு பூஜை விழா, அதாவது அன்னாரின் மறைவு நாள் விழா, சென்ற 30-10-1965 அன்று பசும்பொன் கிராமத்தில் நடைபெற இருந்தது. சமாதி இடத்தில் பூஜை நடத்த இராமநாதபுரம் சப்-கோர்ட்டிலும் அனுமதி வாங்கிப் பெருமளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததை எவ்வித நியாயமும், தேவையுமின்றி அதிகாரிகள் 144 தடை உத்திரவு பிறப்பித்து பதினாயிரக்கணக்கான மக்கள் விழா நடத்தி வணங்குவதைத் தடுத்த செய்கையான பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை இச்சபை விவாதிக்க வாய்ப்பளிக்க சபை நடவடிக்கையை ஒத்திவைக்குமாறு நான் பிரேரேபிக்கிறேன்."

May I know who passed the order under Section 144?

Sri T. L. SASIVARNA THEVAR: Sub-Magistrate, Sir.

Mr. SPEAKER: Was any appeal preferred against that order?

Sri T. L. SASIVARNA THEVAR: No, Sir.

Mr. SPEAKER: Then, how can we sit in judgment over the order of the Court?

* திரு. டி. எல். சசிவர்ண தேவர்: அந்தப் பர்மிஷன் வாங்கினவர்கள் பேரிலேயே தடையுத்தரவு போடப்பட்டது.

Mr. SPEAKER: The Sub-Court might have passed the order in the exercise of itscivil jurisdiction and the Sub-Magistrate might have passed the order in the exercise of his criminal jurisdiction, so that there was no breach of peace. If anybody it aggrieved by the order under Section 144, he has got the right to take up the matter to the superior Court on revision.

திரு. டி. எல். சசிவர்ண தேவர்: நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிடுகிறேன். யார் ஆட்சேபம் பண்ணினார்களோ அந்தப் பார்ட்டியாரும் கூட சப்-கோர்ட் உத்தரவிற்குக் கட்டுப்பட்டவர்கள்

தான். இதிலே சம்பந்தப்பட்ட சில உத்தியோகஸ்தர்களும் பாரபட்சமாக நடந்துகொண்டிருக்கிறார்கள்.

MR. SPEAKER : The officer may be partial or impartial, but the final order is passed by the Court.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : 144 பிரிவின் கீழ் யார் தடை உத்தரவு வாங்கினார்களோ, அவர்களும் குரு பூஜை பண்ண வாங்கப்பட்ட அனுமதிக்குக் கட்டுப்பட்டு இருக்கிறார்கள். சப்-கோர்ட்டிலே உத்தரவு வாங்கிக்கொண்டு, எங்கே கொண்டாடுவது என்பது பற்றி கலெக்டரும் நேரில் பார்த்து, சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் மூலம் பேசி முடிவு செய்து, பத்து மணிக்கு விழா கொண்டாட எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். ஒத்துக்கொண்டு போன பிற்பாடு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கடைசி நேரத்தில் பாரபட்சமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி விவரமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

MR. SPEAKER : It is not necessary to go into the details at this stage. Every order under Section 144, Criminal Procedure Code cannot be brought up before the House in the form of an adjournment motion. The time of the House is not intended for discussing everything as an adjournment motion.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : 144-வது பிரிவின் கீழ் தடை உத்தரவு போட்டு உத்தியோகஸ்தர்கள் பாரபட்சமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். தடை உத்தரவை 'ரிலாக்ஸ்' பண்ண ஒத்துக்கொண்ட பிற்பாடும் சில உத்தியோகஸ்தர்கள் பாரபட்சமாக நடந்திருக்கிறார்கள்.

MR. SPEAKER : Then, why was not this matter taken on appeal? Steps could have been taken to cancel the order?

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : நான் அப்பீல் செய்யவில்லை. அனுமதி வாங்கிய ஆட்கள் செய்ய வேண்டிய காரியம் அது.

அதிகாரிகள் பாரபட்சமாக நடந்துகொண்டதைக் குறித்து சபையின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். நான்கைந்து ஜில்லாக்களிலிருந்து பதினையாயிரம் ஜனங்கள் வந்து கூடியிருந்து வணங்குவதற்கு முடியாமல் போயிருக்கிறார்கள். அந்த அளவிற்குச் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பாரபட்சமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இந்தப் பிரேரணையை தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கனம் சபாநாயகர் : 'பாரபட்சம்' என்றும் மீண்டும், மீண்டும் சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை அனுமதித்தால் நான் விவரமாகச் சொல்ல முடியும்.



கனம் சபாநாயகர் : ஒத்திவைப்புப் பிரேரணையை அனுமதிப்பதா என்பதுதான் இப்பொழுது உள்ள பிரச்னை. கோர்ட் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறபொழுது, அதற்கு மேல் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையை இங்கே கொண்டுவருவதென்றால், அதை எப்படி அனுமதிப்பது ?

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : பெரிய கோர்ட் உத்தரவிட்டிருக்கிறது.

MR. SPEAKER : The hon. Member must have taken up the matter to the superior Court. The Legislative Assembly cannot sit as an Appellate Court.

Now, let me hear the hon. Member Sri K. Cheemaichamy.

திரு. கரு. சீமைச்சாமி : 30—10—1965 அன்று குரு பூஜை நடத்தலாம் என்று கோர்ட் அனுமதி அளித்திருக்கிறது. ஆனால், 30-ந் தேதியன்றே ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்கள் 144-வது பிரிவின்படி. . .

MR. SPEAKER : Will you please say who passed the order under Section 144, Criminal Procedure Code? Is it not the Court?

SRI K. CHEEMAICHAMY : The Revenue Divisional Officer, Sir.

MR. SPEAKER : The Revenue Divisional Officer as a First-class Magistrate empowered to issue the order under Section 144, Criminal Procedure Code has passed it. If the hon. Member was aggrieved, or if he was not satisfied with that order, he could have taken the matter to the Appellate Court. The Legislature cannot sit as an Appellate Court to question or set aside that order.

திரு. கரு. சீமைச்சாமி : 30-ந் தேதியன்று தடை உத்தரவு போட்டதால், அன்றைக்கே விழா நடத்த வழியில்லாமற் போய் விட்டது. வேண்டுமென்றே தடுக்கப்பட்டிருக்கிறது. விழா நடத்த வேண்டுமென்பது அரசாங்கமே நடத்த வேண்டிய காரியம். பூசை நடத்தக்கூட முடியவில்லை என்றால். . .

MR. SPEAKER : Anyhow, this is not a matter for an adjournment motion. Hence, I withhold my consent to it.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : இந்தப் பிரேரணைக்கு அனுமதி கிடைக்காததைக் குறித்து எங்கள் ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் வகையில் எங்கள் கட்சியைச் சார்ந்த நாங்கள் சபையை விட்டு வெளியேறுகிறோம்.

(ஃபார்வேர்ட் ப்ளாக் கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர்களும், சுதந்திராக் கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

[4th November 1965

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், தங்களுடைய தீர்ப்பை மனதார நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம் என்றாலும், இதில் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கத்திற்கு உணர்த்துவதற்காக நாங்களும் வெளி நடப்பு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கனம் உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தார்கள்.)

## IV. CALLING ATTENTION TO NON-AVAILABILITY OF KEROSENE AND DIESEL OIL.

MR. SPEAKER: Hon Members Sri T. P. Alagamuthu, Sri S. Arumugam and Sri M. Kalyanasundaram have given notice to call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, namely, the non-availability of kerosene in the State for the use of public, particularly in rural areas and the non-availability of diesel oil for pump-sets and diesel engines used by agriculturists and the consequent hardship experienced by them.

* திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, சற்று முன்பு நான் பேசியபோது, மண்ணெண்ணெய், டீசல் எண்ணெய் கிடைப்பதிலுள்ள கஷ்டங்களை எடுத்துச் சொன்னேன். அரசாங்கம் இது குறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பது பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, due to diversion of a part of supply of kerosene oil to the defence purposes, there is general scarcity of kerosene in this State.

Under the Defence of India Rules, the Government have acquired enabling powers for regulating the supplies of petroleum products and for restricting the use of kerosene. The Government have instructed the oil companies to intimate the movement of H.S.D. and superior kerosene oil into and from the main port installations from time to time and the Collectors have been requested to keep a watch on the movement and supply of petroleum products in their respective districts to ensure equitable distribution of the available stocks. Instructions have also been issued to the Collectors to see that the requirements of kerosene for agricultural operations in rural areas are complied without serious delay and on priority basis. The scarcity conditions are due to delayed supplies to main port installations. In order that the distribution arrangements are not impaired, the Government are arranging to obtain forecast of supplies from the oil companies so that they may plan well in advance



4th November 1965]

MR. SPEAKER: The hon. Member Sri Rama Arangannal has raised the question of want of time for giving notice of amendments to the Madurai University Bill and has requested for extension of time. In response to his request I extend the time till 1 p.m. today for giving amendments, if any.

## V. GOVERNMENT MOTION.

### (1) TRANSATION OF GOVERNMENT BUSINESS ON NON-OFFICIAL DAY.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That Rule 23 of the Madras Legislative Assembly Rules be suspended and the House do resolve to transact Government Business today."

The motion was put and carried.

## VI. ANNOUNCEMENTS.

The Madras Land Revenue and Water-cess (Sur-charge) Bill, 1965.

MR. SPEAKER: Ihave to announce to the House that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Land Revenue and Water-cess (Surcharge) Bill, 1965.

## VII. GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS LAND REVENUE AND WATER-CESS (SURCHARGE) BILL, 1965.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, I move for leave to introduce the Madras Land Revenue and Water-cess (Surcharge) Bill, 1965.

MR. SPEAKER: The question is—

"That leave be granted for the introduction of the Madras Land Revenue and Water-cess (Surcharge) Bill, 1965."

The motion was put and carried, and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

### (2) THE MADRAS CITY TENANTS' PROTECTION (AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move for leave to introduce the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1965.

MR. SPEAKER: The question is—

"That leave be granted for the introduction of the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1965."

[4th November 1965

The motion was put and carried, and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### VI.—ANNOUNCEMENTS.—*cont.*

(2) THE MADRAS ELECTRICITY (TAXATION ON CONSUMPTION) AMENDMENT) BILL 1965.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1965.

### VII.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS ELECTRICITY (TAXATION ON CONSUMPTION) AMENDMENT BILL, 1965.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move for leave to introduce the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1965.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1965."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(4) THE MADRAS UNIVERSITY BILL, 1965 (L.A BILL NO. 11 OF 1965).

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

"That the Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965), as amended by the Joint Select Committee, be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா முதல் கட்டத்தில் விவாதிக்கப்பட்டது கனம் அங்கத்தினர்களுக்கு நினைவு இருக்கலாம். அதற்குப் பிறகு இது பற்றி நன்கு பரிசீலனை செய்ய பொறுக்குக் கமிட்டி நியமிக்கப்பட்டது. பொறுக்குக் கமிட்டி சாவதானமாகவே இந்த மசோதாவின் பல பிரிவுகளை ஆராய்ந்து சில மாறுதல்களைச் செய்திருக்கிறது. பொறுக்குக் கமிட்டியினர் செய்துள்ள முக்கியமான மாறுதல்கள் சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவற்றைக் கனம் உறுப்பினர்களும் கவனித்து இருப்பார்கள். பொறுக்குக் கமிட்டியின் அறிக்கை இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.



4th November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

முன்பு ஓரியண்டல் காலேஜ் என்று டைட்டில்ஸ், டிப்ளமா கோர்சுக்கு பாட போதனை அளிக்கும் கல்லூரிகள் அப்ரூவ்டு காலேஜ் என்ற தலைப்பில் இருந்தன. இப்போது அந்த டெபனிஷனை மாற்றி அம்மாதிரியான ஓரியண்டல் காலேஜுகளை அஃபிலியேடெட் காலேஜ் என்ற வகையில் சேர்ப்பதற்கான திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. பி.யு.ஸி வகுப்புக்கான பாடம் மட்டும் சொல்லித்தரத்தக்க காலேஜுகளை "அப்ரூவ்டு காலேஜ்" என்ற தலைப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, முதலில் சமர்ப்பிக்கப்பட்ட மசோதாவில் "இண்டியன் அண்டு அதர் ஏஷியன் லாங்க்வேஜஸ்" என்பதாக போடப்பட்டிருந்தது. இப்போது ஏஷியன் என்பதை நீக்கிவிட்டு இந்திய மொழிகள் மேலும் இதர மொழிகள் என்பதாகப் போடப்பட்டுள்ளது. "அதர் லாங்க்வேஜஸ்" என்கிறபோது பிரஞ்சோ, ஜெர்மனோ வேறு எந்த மொழிகளை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளத்தக்க வகையில் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது.

முதலில் சமர்ப்பிக்கப்பட்ட மசோதாபடி இந்த மதுரை யுனிவர்சிடி எல்லைக்குள் இருக்கிற எந்தக் கல்லூரியும் வேறு எந்த பல்கலைக் கழகத்துடனும் சேர்க்கப்படலாம் என்று இருந்தது. இப்போது இவை மதுரை யுனிவர்ஸிடியுடன் தான் இணைக்கப்பட வேண்டும், வேறு எந்த யுனிவர்ஸிடியுடனும் இணைக்கப்படக் கூடாது என்பதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

வைஸ்-சான்ஸலர் நியமனத்தைப்பற்றியும் பொறுக்குக் கமிட்டி நன்கு விவாதித்துச் சில மாறுதல்களைச் செய்திருக்கிறது. குறிப்பாக செனட் ஒரு மெம்பரை நியமனம் செய்வது, சிண்டிகேட் ஒரு மெம்பரை நியமனம் செய்வது, சான்சலர் ஒரு மெம்பரை நியமனம் செய்வது—ஆக இவர்களால் நியமனம் செய்யப்பட்ட இந்த மூன்று மெம்பர்களைக் கொண்ட ஒரு கமிட்டி, சான்ஸலருக்கு மூன்று பேர்கள் கொண்ட ஒரு பானலைக் கொடுக்க வேண்டும் என்றும், அந்தப் பானலில் இருந்து சான்ஸலர் ஒருவரை வைஸ்-சான்ஸலராக நியமனம் செய்ய வேண்டும் என்றும் இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன கமிட்டியில் உள்ள மூன்று பேர்களில் யாருடைய பெயரும் பானலில் சேர்க்கப்படக் கூடாது என்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

செனட், அகடமிக் கவுன்சில் ஆகிய இரண்டும் சிறிய ஸ்தாபனமாக இருக்க வேண்டும். அதிக எண்ணிக்கையுள்ள ஸ்தாபனமாக இருந்தால் சரிவர கவனம் செலுத்த முடியாது என்று உணரப்பட்டது. அதன் பேரில் தான் முன்பு எல்லாக் கல்லூரிகளின் முதல்வர்களும் செனட் 'எக்ஸ் அஃபிஷியோ' மெம்பராக இருக்கலாம் என்று இருந்ததை மாற்றி அஃபிலியேடெட் காலேஜுகளில் குறைந்த பட்சம் மூன்றாண்டுகள் கல்லூரி முதல்வராகப் பதவி வகித்தவர்களை மட்டும்தான் எக்ஸ் அபிஷியோ மெம்பராகப் போடுவது, அப்ரூவ்டு காலேஜுகளைப் பொறுத்த வரையில் அந்த காலேஜுகளின் முதல்வர்கள் ஒன்று கூடி தங்களுக்குள் மூன்று பேரைத் தேர்ந்தெடுத்து செனட்டின் எக்ஸ் அபிஷியோ மெம்பராக இருக்கச் செய்வது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த முழு நேர ப்ரொபசர்கள்

எல்லோரும் செனட்டின் எக்ஸ் அபிஷியோ மெம்பராக இருப்பது என்பதற்கு பதிலாக அந்தந்த டிபார்ட்மெண்டின் தலைவர்களாக இருக்கக்கூடிய முழுநேர பல்கலைக் கழக ப்ரொபசர்களை மட்டும் செனட்டில் எக்ஸ் அபிஷியோ மெம்பராகப் போடுவது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

"அதர் மெம்பர்கள்" என்ற இனத்தில் சட்டமன்றம் இரண்டு எம்.எல்.ஏ.-க்களை தேர்ந்தெடுத்து அனுப்புவது என்று முன்பு இருந்தது. இப்போது "சட்ட மன்றம் நான்கு மெம்பர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது என்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதே மாதிரி இந்தப் பல்கலைக் கழகம் உள்ள ஏரியாவில் இருக்கும் எல்லா மாவட்டங்களையும் சேர்ந்த உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்களுக்குள் இரண்டு பேர்களைத் தேர்ந்தெடுத்து செனட்டின் எக்ஸ் அபிஷியோ மெம்பராக அனுப்ப வேண்டும் என்று இருந்தது. அதையும் மாற்றி பல்கலைக் கழகத்தின் ஏரியாவில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தலைமை ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்பட்டு வர முடியும்.

முன்பு நான் சமர்ப்பித்த மசோதாவில் ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. செலக்ட் கமிட்டியினர் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். இதன்படி ஒவ்வொரு ரெவின்யூ மாவட்டத்திலும் உள்ள நகரசபைத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து செனட் எக்ஸ் அபிஷியோ மெம்பராக அனுப்புவது என்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

கனம் அங்கத்தினர்களும் கவனித்திருப்பார்கள். இதே மாதிரி அகடமிக் கவுன்சிலும் பெரிய பாடியாக இருந்தால் சரியாகக் கவனம் செலுத்த முடியாது என்ற எண்ணத்தோடு அதன் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. இதிலும் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள எல்லாக் கல்லூரிகளின் முதல்வர்களில் குறைந்தது மூன்றாண்டு காலமாவது முதல்வராகப் பணியாற்றி இருப்பவர்களையே போடுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும், எல்லா போஸ்ட் க்ராஜ்வேட் காலேஜ் முதல்வர்களும், ட்ரெயினிங் காலேஜ்கள் நீங்கலாக மற்ற எல்லா ப்ரொஃபஷனல் காலேஜ்களின் முதல்வர்களும் இந்த அகடமிக் கவுன்சிலில் இடம் பெறுவார்கள். ட்ரெயினிங் காலேஜ் டீச்சர்ஸ் தங்களுக்குள் இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பலாம் என்றும் இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மற்றொன்று, தமிழ், சமஸ்கிருதம், இந்தி மற்ற மொழிகள் ஆகியவற்றுக்கு முன்பு, மூன்று பேர்கள்தான் சான்சலரால் நியமனம் செய்யப்படுவதற்கு இடம் இருந்தது. இப்போது இவற்றுக்கென ஆறு பேர்களை சான்சலர் நியமனம் செய்வதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.



ஃபைனான்ஸ் கமிட்டியிலும் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. முன்பு அந்தக் கமிட்டியில் ஃபைனான்ஸ் செக்ரட்டரியைப் போடுவதாக இருந்தது. இப்போது கல்வி இலாகா காரியதரிசியை அங்கத்தினராகப் போடுவது என்று மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் பல்கலைக் கழகத்தின் வரவு செலவுத் திட்டத்தை சிண்டிகேட் தயாரித்து பைனான்ஸ் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்புகிறது. பைனான்ஸ் கமிட்டி பரிசீலனை செய்த பிறகு சிண்டிகேட்டும் பரிசீலனை செய்து செனட்டுக்கு அனுப்புகிறபோது செனட் அப்படியே ஒப்புக்கொள்ளலாம், அல்லது தேவைப்படுகிற மாறுதலோடு ஒப்புக்கொள்ளலாம். ஆனால் செலவை அதிகப்படுத்துகிற வகையில் எத்தகைய மாறுதலையும் செய்யக் கூடாது என்று இதிலே போடப்பட்டு இருக்கிறது. குறைக்கவும் கூடாது என்பதும் அவசியம். அதற்கு ஒரு திருத்தம் இப்போது கொடுத்திருக்கிறேன்.

அடுத்து, ரிஜிஸ்டர்ட் க்ராஜ்வேட்ஸ், இப்போது இருக்கிற சென்னைப் பல்கலைக் கழகத்தின் விதிகள்படி டெல்லியில் இருந்தாலும், இந்தியாவுக்கு அப்பால் இருந்தாலும் வோட்டு உண்டு என்ற நிலை இருந்தது. ஆனால் இந்த மசோதாவில் மதுரை பல்கலைக்கழகத்தின் எல்லைக்குள் இருப்பவர்களுக்குத்தான் ரிஜிஸ்டர்டு க்ராஜ்வேட் என்ற உரிமை கொடுக்கப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருந்து மதுரைப் பல்கலைக் கழகம் பிரிகிறது. இதற்கு முன்பும் பல பிராந்தியங்கள் பிரிந்திருக்கின்றன. இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தின் பிராந்தியத்தில் 3-இல் 1 பங்கு பிரிகிறது. மதுரைப் பல்கலைக் கழகமாக மாறுகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் இப்போது சேவை ஆற்றிக்கொண்டிருக்கிற உத்தியோகஸ்தர்கள், நிபுணர்களுடைய பணி மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் தேவையாய் இருக்கும். அவ்விதம் தேவைப்படும்போது சென்னை பல்கலை கழகத்திலிருந்து, மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு தேவைப்படுகிற உத்தியோகஸ்தர்கள், நிபுணர்களுடைய சர்வீசை மாற்றுவதற்கும் இதில் ஒரு ஏற்பாடு இருக்கிறது.

அதே மாதிரி சென்னைப் பல்கலைக் கழக நிதியில் இதுவரை மதுரைப் பல்கலைக் கழகப் பிராந்தியம் இருந்து வந்துள்ள காரணத்தினால், மதுரைப் பல்கலைக் கழகம் இப்போது பிரிகின்றபோது ஒரு பகுதி நிதி கொடுப்பதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் ஓரளவு மதுரைப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுப்பது நியாயமென்று கருதி, அதற்காக அரசாங்கம் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் கலந்து ஆலோசித்து, எவ்வளவு நிதி கொடுப்பது என்று முடிவுசெய்து கொள்ளலாம் என்ற முறையில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவைதான் முக்கியமான மாறுதல்கள் என்று கருதுகிறேன். மற்றபடி அதிகமான மாறுதல்கள் இல்லையென்று கூறிக்கொண்டு, இதை எல்லா உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Motion moved—

"That the Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965) as amended by the Joint Select Committee be taken into consideration".

* திரு. இராம. அரங்கண்ணல்: தலைவரவர்களே, தமிழகத்தின் இருதய பாகமாக விளங்குகின்ற மதுரை மாநகரில் தமிழக அரசால் பல கலைகளை வளர்க்கின்ற முறையில், புதியதொரு பல்கலை கழகத்தைத் துவக்குகின்ற வகையில் கொண்டுவரப்படுகின்ற இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

கூட்டுப் பொறுக்குக் குழுவிற்குச் சென்று அங்கே சில மாறுதல்களோடு இந்த மசோதா இங்கே சட்டமாக்கப்படுகின்ற நிலைமையிலே இருக்கின்றது. தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, இப்பொழுது இரண்டு பல்கலைக் கழகங்கள்தான் இருக்கின்றன. தமிழகத்தின் மக்கள் தொகையைக் கணக்கிட்டால் குறைந்தது நான்கு பல்கலைக் கழகங்களாவது இருக்க வேண்டும். அந்த வகையில் மூன்றாவது பல்கலைக் கழகமாக இந்த மதுரைப் பல்கலைக் கழகம் துவக்கப்படுவதைக் கண்டு தமிழக மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் வியப்பொன்றுமில்லை.

மசோதாவின் நோக்கத்தையும், கூட்டுப் பொறுக்குக் குழுவால் செய்யப்பட்டுள்ள திருத்தங்களையும் நோக்கும்பொழுது, இதை நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையிலே இருந்தாலும், சில திருத்தங்களை நாம் பரிசீலனை செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பல்கலைகளை வளர்க்கின்ற பொறுப்பிலும், பல்கலைக் கழகத்தினை நிர்வகிக்கின்ற பொறுப்பிலும், பல்கலைக் கழகத்திற்கு நல்ல பெருமையைப் பெற்றுத்தரக்கூடிய நிலையிலேயும் இருக்கக்கூடியவர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராவார். அவ்வளவு முக்கியமான பொறுப்பில் இருக்கக்கூடிய பல்கலைக் கழகத் துணை வேந்தரின் நியமனத்தைப் பொறுத்த வரையிலும், இப்பொழுது இருக்கக் கூடிய முறைகளுக்கு உகந்ததாக அவருடைய நியமனம் இருக்க வேண்டும். ஒரு சில எண்ணங்களுக்கு இடம் கொடுக்கக் கூடிய முறையில் அவருடைய நியமனம் இருக்கக்கூடாது. உதாரணமாக, சென்னைப் பல்கலைக் கழகத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இப்பொழுது இருக்கிற முறை என்னவென்றால், செனட் உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து மூன்று பேர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அந்த முறை இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அந்த விதமாக இல்லை என்று கனம் முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், செனட் தேர்ந்தெடுத்து அனுப்புகின்ற மூன்று பேர்களிலிருந்து சான்ஸலர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார். இந்த



முறைதான் நல்ல முறை என்று கருதப்பட்டு, இதுவரை எந்த விதமான பிரச்னையோ, தகராறோ இல்லாமல் இருந்துகொண்டு இருக்கிறது. ஆனால், இப்பொழுது நாம் கொண்டு வருகிற முறை, செனட் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும். சிண்டிகேட் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்; வேந்தராக விளங்குகின்ற கவர்னர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பார். இப்படித் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மூன்று பேர்களிலிருந்தும் வைஸ் சான்ஸலர் ஒருவரை கவர்னர் நியமிப்பார். இந்த முறை சரிதானா என்பதை எல்லோரும் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே ஒரு நபரைப் பரிந்துரைக்கின்ற நேரத்தில், கவர்னர் 'ரெக்கமெண்டிங் அதாரிட்டி'யாக இருக்கிறார். அதற்கு அடுத்தபடியாக அவர்களே, 'அப்பாயிண்டிங் அதாரிட்டி' யாகவும் இருக்கிறார். இப்படி ஒருவருக்கு அதிகாரம் இருக்க வேண்டுமா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதற்குப் பதிலாக, இப்பொழுது இருக்கிற முறையையே—அதாவது செனட் மூன்று பேர்களைத் தேர்ந்தெடுக்கும், அந்த மூன்று பேர்களிலிருந்து வேந்தர் ஒரு துணைவேந்தரைத் தேர்ந்தெடுத்து நியமிக்கலாம் என்பதை—ஏற்றுக்கொண்டால் நலமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது நடைபெறுகின்ற செனட் கூட்டங்களில் எல்லாம் துணைவேந்தர்தான் தலைமை வகிக்கிறார். அப்படி அவர் தலைமை வகிக்கிற காரணத்தால், செனட் சபையின் அங்கத்தினர்கள் நல்ல முறையிலே தங்களுடைய யோசனைகளைத் தெரிவிக்க முடியவில்லை. செனட் சபையில் மெம்பர்களாக, கல்லூரி பிரின்ஸ்பால்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும்தான் அங்கம் வகிக்கின்றார்கள். இவர்கள் எல்லோரும், துணைவேந்தரே செனட் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கின்ற காரணத்தால், தங்களுடைய யோசனைகளைத் தெரிவிக்கக்கூடிய நிலைமை ஏற்படாமல் போய் விடுகிறது. ஆகவே, இந்த செனட் சபையே ஒரு சேர்மனைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, அந்த சேர்மனே செனட் சபைக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தால் எல்லோரும் தங்களுடைய யோசனைகளைத் தெரிவிப்பதற்கு நல்ல வாய்ப்பிருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, கனம் முதலமைச்சர் அவர்கள் திருத்தங்களைப் பற்றிச் சொன்ன நேரத்தில், சட்டசபை உறுப்பினர்கள் நான்கு பேர்கள் பிரதிநிதித்துவம் வகிப்பார்கள் என்று சொன்னார்கள். முன்பு இரண்டு பேர்களாக இருந்தது, இப்பொழுது நான்கு பேர்களாக் உயர்த்தப்பட்டிருக்கிறது. கொள்கையளவில் நாங்கள் இதை வரவேற்கிறோம். ஆனால், இந்த நான்கு உறுப்பினர்களும் சட்ட மன்றத்திலிருந்து எந்த முறையில் தேர்ந்தெடுத்து அனுப்பப் படுவார்கள் என்று பார்த்தால், அதற்கான விளக்கம் சரியாக இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இன்னும் இரண்டு தினங்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்காக இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இருக்கின்றோம். கேரளா, டெல்லி, பெங்களூர் யுனிவர்சிடிகளில் எல்லாம் 'ப்ரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன்' என்ற முறைதான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆனால், சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் அந்த முறை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதைப்பற்றி நான் ஏற்கனவே ஒரு முறை திருத்த மசோதாவைக் கொண்டுவந்தேன். ஆனால் அப்பொழுது கனம் முதலமைச்சர் அவர்கள் 'சென்னைப் பல்கலைக் கழக மசோதாவையே திருத்த வேண்டியிருக்கிறது, அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்' என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னபோதிலும் கூட, இப்பொழுது கொண்டுவரப் பட்டிருக்கின்ற மசோதாவில் அந்த முறை புகுத்தப்படவில்லை, ஆகவே, அந்த முறையை சபையின் முதல்வர் அவர்களும், மற்றும் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அந்த முறையிலேயே மதுரைப் பல்கலைக் கழகத்தின் மசோதாவிலேயும் 'ப்ரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன்' முறையை அமுலாக்குகின்ற விதத்தில் விதிகளைத் திருத்தினால் மிகவும் நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரித் தலைவர்களுக்கு நல்ல இடம் அமைத்துக்கொடுக்கக்கூடிய முறையில் இந்த மசோதா அமைய வேண்டும். [illegible] திருத்தங்கள் எல்லாம் பெரியதானவையல்ல, சிறு சிறு திருத்தங்கள் தான். ஆகவே, தவறான எண்ணங்கள் ஏற்பட்டுவிடாதபடி, தவறுகள் ஏற்படாத முறையில், நம்முடைய மன்றம் இந்தத் திருத்தங்களைப் பரிசீலனை செய்வதில் ஈடுபடவேண்டும். இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். வரவேற்கின்ற நேரத்தில், தமிழை வளர்க்கின்ற மதுரையம்பதியில் உருவாக இருக்கிற இந்தப் பல்கலைக் கழகம், தமிழிலேயே இயங்கும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது. அண்மையில் சேலம் இரும்பு ஆலை சம்பந்தமாக, இங்கு வந்திருந்த ஜப்பானிய கோஷ்டியின் தலைவர் அநேக விளக்கங்களை எடுத்துச் சொன்னார்கள். அவருக்கு ஆங்கிலம் பேசத் தெரியவில்லை. ஆகையால் அவர் ஜப்பானிய மொழியிலேயே விளக்கங்களைச் சொன்னார். நாம் மொழிபெயர்ப்பாளரின் உதவியால் அவர் சொன்ன விளக்கங்களைப் புரிந்துகொண்டோம். அந்த மாதிரியே, நாமும் தமிழிலேயே வைத்தியக் கலை, எஞ்சினியரிங் கலை, விவசாயக் கலை, தொழிற் கலை ஆகிய எல்லாக் கலைகளையும் பயிற்றுவிக்கக் கூடிய நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நம்பிக்கையை உருவாக்கிக் கொடுக்கக் கூடிய விதத்தில், இந்த மசோதாவினுடைய நோக்கம் இருக்குமென்று நம்புகிறோம். தமிழை வளர்க்கவும், பல்கலைகளை வளர்க்கவும், பல தொழில்களை வளர்க்கவும், சிறந்த ஒரு பல்கலைக் கழகமாக இந்த மதுரைப் பல்கலைக் கழகம் அமையும். அந்த வகையில் சிறிய சிறிய தவறுகள்கூட ஏற்படாமல் நாம் இந்த மசோதாவை நல்ல முறையில் சட்டமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI S. NANJUNDA ROW: Mr. Speaker, Sir, the Joint Select Committee has done a good job and necessary changes have been made to the original Madurai University Bill and those changes are very appreciable. Almost everybody in our unofficial



conversations and discussions have agreed with the changes made by the Joint Select Committee. In the proceedings of the Joint Select Committee, it was stated that its Chairman remarked that the expression 'Madurai' meant 'Tamil' which was implied in it. The Joint Select Committee has unanimously agreed to give that name and it is a beautiful name. The name is known anywhere and even in a State like Bihar in North India if I say that I come from the Madurai district, they would say, 'You have come from the Meenakshi temple area', and that is how the name of Goddess Meenakshi is associated with Madurai and Tamil is necessary acccociated with it. The whole Tamil Nad would be rather very happy to have this University.

Now, I want to give one or two suggestions though I ought to have made representations to the Joint Select Committee itself. I am sorry I did not do that. Anyhow, I take this opportunity to give my suggestion with regard to Clause 26 of the Bill relating to constitution and functions of Faculties. The clause says—

'(1) The University shall include Faculties of Arts, Science, Law, Medicine, Engineering, Technology, Teaching, Agriculture, Commerce, Indian and other . . . . languages, Indian system of Medicine, Veterinary Science, Fine Arts, and such other Faculties as may be prescribed by the statutes . . .'

Of course, so many details have been given about faculties in this clause but what is accepted in principle is often forgotten in detail. Though the clause is flexible enough to provide for 'such other Faculties as may be prescribed by the statutes' and also a lot of power to the Syndicate and the Academic Council to create a new department or faculty, I want to make one suggestion. After the demise of Gandhiji, there was a call to create Gandhian Centres but I do not think that any University has created any Chair for Gandhian Philosophy. Of course, the University like Delhi has created, what is called, the Gandhian Centre for the study of Gandhian Literature and also the University like the Madras University has given us scholarships for the study of the Gandhian Philosophy. Even then that has not been done on a wide scale. So, I want to suggest that the Madurai University should give a lead to other Universities and create a separate department for the study of Gandhian Philosophy and Literature. In this connection, I wish to point out that there is a very beautiful Gandhi Museum in Madurai and nowhere in South India is there such a beautiful museum. I hope many hon. Members of this House would have seen that museum. Once we enter that museum, we will be lost there for four or five hours and we would not know the outside world and we will be immersed and engrossed in it. I hope that the Hon. the Chief Minister who has introduced this Bill will give an assurance that the Academic Council will approve my suggestion for the creation of a new department for the study of Gandhian Philosophy in the Madurai University. At the same time, I want to emphasise here that the name of Gandhiji should not be separated from the name of Shri Jawaharlal Nehru and so

[Sri S. Nanjunda Row] [4th November 1965

I suggest that the name of Nehruji also should be associated with the new department proposed for the study of Gandhian Philosophy and Literature. We know that the Jawaharlal Nehru University has been created in Delhi and even there I do not think that the writings of Jawaharlal Nehru will be studied there in detail. We called Gandhiji as the Father of the Nation and Jawaharlal Nehru as the son of the Nation and so the names of these two great persons should be associated with the new department, the first of its kind in India it would be. I have also another suggestion to make in this regard. The name of Madurai is associated with Tamil Culture. Madurai is not only the seat of Tamil culture but it is also the seat of Ancient Culture. So I want that a separate department should be created for the study of not only South Indian religions but also world religions. Of course, so many universities have this department for the study of religions but I think a new department for the study of religious would be appropriate in Madurai. I hope the Hon. the Chief Minister can kindly give an assurance that such a department will be created. Nowadays, we are lost in the materialists world and a study of religions and philosophy is very essential. We know that three months ago a great leader and a theologist, Dr. Albert Schwitzer, died. He had a philosophical reverence for the human being and he had to study medicine also. He even started a Leprosy Clinic in Africa and thus he became a great humanitarian. So, a study of humanities, religions and medicines are essential. With these words, I congratulate the Joint Select Committee and the Hon. the Chief Minister on their having made the necessary changes in the Bill. Thank you, Sir.

*திரு. எம். வி. கரிவேங்கடம்:* மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழக மசோதாவை இந்த மாமன்றம் ஒருமித்த கருத்துடன் வரவேற்கும் என்றாலும்கூட, இந்த மசோதாவிலே ஒருசில குறைகள் இல்லாமல் இல்லை. பொதுவாக, வாக்காளர்களைப் பதிவு செய்ய வேண்டுமென்றாலும் வேறு எத்தகைய பதிவு நடைபெற வேண்டுமென்றாலும் அத்தகைய பதிவுகள் எல்லாம் இலவசமாகவே யாதொரு கட்டணமும் இல்லாமல் நடைபெறுவதைப் பார்க்கிறோம். ஆனால் மதுரை சர்வகலாசாலையில் பதிவு பெற்ற பட்டதாரியாக (ரிஜிஸ்டர்டு கிராஜுவேட்ஸ்) பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றால் அதற்குக் கட்டணம் செலுத்த வேண்டுமென்று 49-வது கிளாசிலே இருக்கிறது. இது தற்கால முறைக்கு உகந்த ஒன்று என்று பார்த்தால் நிச்சயமாக உகந்தது அல்ல. பொறுக்குக் குழுவினர் இதை விவாதிக்கும் நேரத்தில், சென்னைப் பல்கலைக் கழக உப அத்தியட்சகர் திரு. லட்சுமணசாமி முதலியார் அவர்களைக் கேட்ட நேரத்தில், சென்னை சர்வகலாசாலையில் பதிவு பெற்ற பட்டதாரிகள் ஆக இருந்து அவர்கள் மதுரை சர்வகலாசாலை எல்லைக்குள் வசித்து வந்தால், அந்த மதுரை சர்வகலாசாலையில் பதிவு பெற்ற பட்டதாரிகளாகத் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று விரும்பினால் அவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்படும் அல்லது கட்டணம் கட்ட வேண்டியதே இல்லை என்று



4th November 1965] *[திரு. எம். வி. கரிவேங்கடம்]*

சொல்லப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மீண்டும் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்ற விதி முறை இருக்கிறது. அதற்கும் கட்டணம் செலுத்தவேண்டும் என்று அந்தப் ப்ரோவிஷனில் இருக்கிறது. " Such fees as may be prescribed by the auothrity ' 'என்றிருக்கிறது. அமைச்சர் அவர்கள் கூட பொறுக்குக் குழுவில் அதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள். ஆகவே விதி முறைகளில் கட்டணமே இல்லை என்று கூடப் போட்டு விடலாம். ஆகவே இந்தச் சட்டத்தில் இருப்பது பற்றிக் கவலைப் படவேண்டியதில்லை என்றளவிற்கு அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். சர்வகலாசாலையில் உள்ள அதிகாரிகள், விதிமுறைகள் செய்கிறவர்கள் கட்டணம் வேண்டுமென்று விரும்புகிறபோது உரிய கட்டணத்தை விதித்தும், வேண்டாத போது விதிவிலக்குக் கொடுக்கிற தன்மையும் இருக்கிறது. இப்படிப் பதிவு செய்து கொள் நிறைவேற்றி விட்டால் என்ன தவறு வந்து விடும் என்பதை வதற்குக் கட்டணமே தேவை இல்லை என்று இதே சட்டத்தில் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், சென்னை சர்வகலாசாலையைப் பொறுத்தவரையில் வர்த்தகக் கழகத்திற்கு ஒரு பிரதிநிதித்துவம் இருக்கிறது. ஆனால் மதுரை சர்வகலாசாலையில் வர்த்தகக் கழகத்திற்கு, அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கழகத்திற்கு ஒரு பிரதிநிதித்துவம் வேண்டுமென்று பொறுக்குக் குழுவில் கேட்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது மறுக்கப்பட்டிருக்கிறது. அப்படி மறுக்கப்படுவது நியாயம் என்றால் சென்னை சர்வகலாசாலையில் வர்த்தகக் கழகத்திற்குப் பிரதிநிதித்துவம் இருப்பது தவறு. ஆகவே அதற்குத் தகுந்தாற்போல் சென்னை சர்வகலாசாலை சட்டமுறைகளைத் திருத்த வேண்டும். அல்லது, மதுரை சர்வகலாசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கழகத்திற்கு நாம் பிரதிநிதித்துவம் கொடுப்பது நல்லது. இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் வகிக்கிற பெரும் தலைவர்கள், தலைவர்கள், அங்கத்தினர்கள் ஆகியவர்களைக் கொண்ட பிரதிநிதிகளுக்கும் பிரதிநிதித்துவம் கொர்டுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் பலருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த மாமன்றத்தின் முன்னால் ஒரு கருத்தை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். மெடிகல் போர்டு இருக்கிறது. மாநிலத்திற்கு ஒரே ஒரு போர்டு. அந்த மெடிகல் போர்டில் அங்கத்தினர்களாக இருக்கிற அத்தனை பேர்களுக்கும் சேர்ந்து அல்லது அந்த குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களில் உள்ள அங்கத்தினர்கள் அவர்களுக்குள்ளாக ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்பலாம் என்ற அளவிற்கு இந்தச் சட்டத்தில் ஏன் இடம் செய்யக் கூடாது. அதேபோல் வழக்கறிஞர்கள் கழகம் இருக்கிறது, மாநிலம் பூராவிற்கும். அந்த நான்கு மாவட்டங்களில் உள்ள வழக்கறிஞர்கள் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அந்த செனட் சபைக்கு அனுப்பலாம் என்ற முறையில் ஏன் விதிமுறைகளைச் செய்யக் கூடாது? அப்படிச் செய்தால் நலமாகயிருக்கும். அதே சந்தர்ப்பத்தில் இந்தச் சட்டத்தில், ஒருவர் 50,000 ரூபாய் வழங்கி

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [4th November 1965

விட்டால் அவர் மூன்று ஆண்டுகள் அல்ல ஆயுள் பூராவும் அந்த செனட் சபையில் அங்கத்தினராக இருக்கலாம் என்றளவிற்கு சட்டம் இருக்கிறது. இது ஏதோ ஒரு பதவியை விலைக்கு பிரங்கமாக கூறி விலை போடுவதுபோல்தான் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். ஆகவே 50,000 ரூபாய் என்கிற அளவிற்கு அல்லது லட்சம் லட்சம் கொடுத்தால் கூட என்றில்லாது நல்ல அறிவுரைகளை வழங்குவதற்கு கற்றறிந்த மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கிற வகையில், அல்லது சர்வகலாசாலை அமைக்கிற அந்த நான்கு மாவட்டங்களில் உள்ள வழக்கறிஞர்கள் கழகங்கள், மருத்துவக் கழகங்கள் இவைகளில் உள்ள அங்கத்தினர்கள் சேர்ந்து அவைகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கிற வகையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரதிநிதித்துவம் கொடுக்கலாம். அதேபோல் தொழிலாளர் யூனியன் இருக்கிறது. அவர்களும் ஒருபிரதிநிதியை அனுப்புகிற அளவிற்கு இந்த விதிகளை மாற்றியமைக்கலாம்.

நம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்தைத் துவக்கி வைத்தபோது ஒன்றைக் கூறினார்கள். இந்த மசோதா பொறுக்குக் குழுவிற்குச் செல்வதற்கு முன்னால் ஃபைனான்ஸ் கமிட்டியில் அரசாங்க ஃபைனான்ஸ் செகரட்டரி அவர்கள் அதில் ஒரு உறுப்பினராக இருக்கலாம் என்ற அளவிற்கு இருந்தது. ஆனால் பொறுக்குக் குழுவிற்குச் சென்று ஆராயப்பட்டு அது இப்போது இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்படும் நிலையில் அரசாங்கக் கல்விச் செயலாளர் இருந்தால் போதும் என்ற அளவிற்கு ஃபைனான்ஸ் செகரட்டரி வேண்டாம் என்ற அளவிற்குத் திருத்தம் செய்யப்பட்டு இந்த மசோதா வந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? அவர்கள் பொறுக்குக் குழுவில் இதுபற்றி விவாதித்திருக்கிறார்கள். ஃபைனான்ஸ் கமிட்டியில் பொருளாதார விஷயங்கள் பற்றி விவாதிக்கப்படலாம், அப்படி விவாதிக்கப்படுகிற நேரத்தில் அந்த ஃபைனான்ஸ் செகரட்டரியைத் தாக்குகிற அளவிற்கு அவர் மனம் புண்படுகிற அளவிற்கு விவாதங்கள் நடைபெறக் கூடும். ஆகவே, அந்த ஃபைனான்ஸ் கமிட்டியில் ஃபைனான்ஸ் செகரட்டரி இருக்கக் கூடாது என்று இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது அல்ல காரணம். பின்னால் அரசாங்கமே இதுபற்றி ஏதாவது முடிவு செய்யவேண்டியிருக்கும். அரசாங்கம் மான்யம் எல்லாம் கொடுக்கிறது. ஆகவே அதில் நிதி இலாகா காரியதரிசி கலந்து கொள்ள வேண்டியிருக்கும். நிதிக் கமிட்டியில் நிதி இலாகா காரியதரிசி இருந்தால் மீண்டும் தானே அதை மேலும் பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டி இருப்பது முறை அல்ல என்ற காரணத்தினால்தான் நிதி இலாகா காரியதரிசிக்குப் பதிலாக கல்வி இலாகா காரியதரிசி அதில் இருப்பார் என்ற முடிவு செய்யப்பட்டது.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** கனம் முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஏற்கனவே நான் சொன்னது போன்ற வாதம் பொறுக்குக் குழுவில் சொல்லப்பட்டிருக்கிறது



4th November 1965] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த அடிப்படையில் ஃபைனான்ஸ் செகரட்டரிக்குப் பதிலாக கல்வி இலாகா செயலாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு விளக்கம் தந்தார்கள். நான் சொன்ன வாதம் அந்தக் கமிட்டியில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். நிதி சம்பந்தமாக விஷயங்களை ஆராய்ந்து சர்க்கார் முடிவு செய்ய வேண்டிய நேரத்தில் ஃபைனான்ஸ் செகரட்டரியே அதைத் தீர்க்க வேண்டியிருப்பதால் அவர்கள் இந்தக் குழுவில் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

அதேபோல், சர்வகலாசாலையைப் பொறுத்தவரையில் மூன்று முக்கிய சபைகள் இருக்கின்றன. அக்கடமிக் கவுன்சில், செனட், சின்டிகேட் என்றுள்ள மூன்று குழுக்களுக்கும் கவர்னர் அவர்களால் நியமிக்கப்பட்ட வைஸ்-சான்சலர் அவர்களே தலைமை வகிக்கிற தலைவராகவும் இருக்கிறார்கள். இந்தச் சபைகள் அத்தனையும் ஏறக்குறைய நியமனம் பெற்ற உறுப்பினர்களாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் ஆக்கப்பட்டவை. வைஸ் சான்சலர் கவர்னர் அவர்களால் நியமிக்கப்பட்டதற்குப் பின்னால் அவர் அந்த சர்வகலாசாலையின் முக்கிய நிர்வாகஸ்தராக அட்மினிஸ்ட்ரேடிவ் ஹெட் ஆக வந்து விடுகிற காரணத்தால் அவர் இந்தச் சபைகளின் தலைவர் என்ற முறையில் இருந்து கொண்டு இருந்தால் அங்கு நடக்கிற விவாதங்கள் நல்ல முறையில் நடக்குமா? நியாயமான முறையில் நடக்குமா? அல்லது விவாதத்தைக் கேட்டுத்தான் தலைவர் இருந்த வேண்டுமென்கிற நிலை இருக்குமா? இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்த அந்தக் குழுவில் உள்ள அங்கத்தினர்களே தலைவரைத் தேர்ந்தெடுப்பது நல்லது. அவர்களின் பதவிக் காலம் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் என்ற முறையில் இருப்பதால் அந்த அந்தக் குழுக்களின் அங்கத்தினர்களே அந்த அந்தக் குழுக்களின் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிற முறையிலே விதிமுறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், இந்த சர்வகலாசாலையின் அதிகார எல்லை இராமநாதபுரம், மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களைக் கொண்டதாக இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்தாற்போல் இப்போது திருச்சி யுனிவர்சிட்டி சென்டராக, சர்வகலாசாலை மையமாக இருக்கும், இன்னும் ஒரு சில ஆண்டுகளில் அது ஒரு பல்கலைக் கழகமாக மாறும் என்ற அளவிற்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்கிற நேரத்தில் இந்தப் பொறுக்குக் குழுவினர் கூடிப் பேசும்போது, இந்த நடவடிக்கைகள் எல்லாம் நடக்கிற நேரத்தில் சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப் படாத நிலையில் இருந்தது. சேலம் டிஸ்ட்ரிக்ட் என்றுதான் எல்லாக் குறிப்பேடுகளிலும் இப்போது வருகிற குறிப்பேடுகளில் கூட காணப்படுகிறது. தர்மபுரியின் நிலை

என்னவென்று கேட்டால், கனம் முதல் அமைச்சர் அவர்கள் தர்மபுரி நிச்சயமாக சென்னை சர்வகலாசாலையோடுதான் இருக்குமா என்பதை அவர் வாயால் சொன்னால் நலமாக இருக்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்களே சொன்னால் அதை யோசிக்கலாம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த பொறுத்த வரையில் அது சென்னை சர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்ட ஒன்றாக இருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள். அடுத்தாற்போல், இப்போது வருகிற அறிக்கைகள் மற்றவை எல்லாம் கூட தர்மபுரி டிஸ்ட்ரிக்ட் என்றில்லாமல் சேலம் டிஸ்ட்ரிக்ட் என்ற முறையிலேயே இருக்கிறது. இதை மாற்றி தர்மபுரி டிஸ்ட்ரிக்ட் என்ற அளவிற்கு அமையச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இப்போது ஏற்படுத்தப்போகும் சர்வகலாசாலையில் பல கலைகளுக்கும் இடம் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே சந்தர்ப்பத்தில் இதைப்பற்றி பொறுக்குக் குழுவிலும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்குத் தனியாக சிறப்புக் கழகம் ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்றும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் தனியாக ஒரு கழகம் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். விவசாய போதனை தனியாக இருக்க வேண்டும் என்று குழுவில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. சென்னை சர்வகலாசாலை உப அத்யட்சகர் அவர்கள் இதை ஒத்துக்கொள்ளவில்லை, இந்தப் பிரிவுக்குத் தனியாக போதனை வேண்டாம் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், வேறு நாடுகளில் இம்மாதிரிப்பட்ட சிறப்புக் கழகங்கள் இல்லாமல் இல்லை. புல்கலைக் கழகம் என்று சொல்லும்போது பல கலைகளும் இணைந்ததாக இருக்கவேண்டும். விஞ்ஞானத்தை எடுத்துக்கொண்டால் அதில் பல சிறப்புக் கழகங்கள் இருக்கின்றன. அந்த முறையில் விவசாயத்திற்கும் தனியாக முக்கியமான இடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்தகைய சில திருத்தங்களை இதில் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மதுரை யுனிவர்சிட்டி மசோதாவை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவானது ஆரம்பத்திலேயே நன்றாகப் பரிசீலிக்கப்பட்டு நல்லமுறையில் சென்னை சர்வகலாசாலை மசோதாவோடு ஒப்பிடப்பட்டு அதைப் பின்பற்றித் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலாக பொறுக்குக் கமிட்டியில் இதைப்பற்றி நல்லமுறையில் விவாதித்துப் பல திருத்தங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதற்கு மேலாக புதிதாக திருத்தங்கள் ஒன்றும் செய்யவேண்டிய தேவையிராது என்று நினைக்கிறேன்.





முதலாவதாக, கனம் முதலமைச்சர் அவர்கள் கூறியது போல் கல்லூரிகளைப் பற்றிய விளக்கத்தில் அஃபிலியேட்டட் காலேஜ், அப்ரூவ்ட் காலேஜ் என்பதற்கான டெஃபனிஷனில் பொறுக்குக் குழுவில் திருத்தங்கள் செய்து முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அடுத்ததாக, எலக்ஷன் அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதில் எலக்ஷனைத் தவிர்க்கவேண்டும் என்று முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. வைஸ் சான்சலர் சம்பந்தமாக மூன்று நபர்களைத் தேர்ந்தெடுத்து அதிலிருந்து கவர்னர் நாமினேஷன் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவதாக இருக்கிறது. பொதுவாக, எலக்ஷனைக் கூடிய மட்டும் தவிர்ப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கத் தகுந்த விஷயம்.

மேலும் செனட், அக்கடமிக் கௌன்சில் போன்றவற்றிலும் எலக்ஷன் தவிர்க்கப்படவேண்டும் என்ற அளவில் இவைகளுடைய எண்ணிக்கை குறைவாக வைக்கப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள முறைப்படி 100, 120 பேர்கள் இருப்பார்கள். எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் சர்வகலாசாலை விஷயத்தில் முக்கிய கவனம் செலுத்துபவர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள். சென்னை சர்வகலாசாலையை எடுத்துக்கொண்டால் வருகின்றவர்களில் பெரும்பகுதியினர் ஏதோ கூட்டத்திற்கு வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு, டி. எ. வாங்கிவிட்டுப் போவதில் தான் இருக்கிறார்களே தவிர, அதிகமான சிரத்தையில்லாமல் போய்விடுகிறது. ஆகவே இதனுடைய எண்ணிக்கை குறைந்த அளவில் இருந்தால் சிரத்தையோடு இருந்து பணியாற்றுவார்கள் என்ற எண்ணத்தில் குறைவான எண்ணிக்கை இந்த மசோதாவில் வைக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் இன்னும் நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால், எல்லாக் கல்லூரிகளிலுமுள்ள பிரின்ஸிபால்களும் கௌன்சிலில் அங்கத்தினர்கள் என்று வரும்போது, இன்னும் 10 ஆண்டுகளில் இன்றைக்கு 54 காலேஜ் என்றிருப்பது நாலைந்து ஆண்டுகளில் 100 காலேஜ்களாக வரலாம். இப்போது இந்த எண்ணிக்கை வளர்ந்து கொண்டேயிருக்கும். ஆகவே இதை வரையறுப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யவேண்டாமா என்பதைப்பற்றியும் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இல்லாவிட்டாலும் கூட, வருங்காலத்தில்—அதாவது ஆண்டுக்காண்டு கல்லூரிகள் வளர்ந்துகொண்டே போகும்—ஒரு ஆண்டுக்கு 10, 12 கல்லூரிகள் என்று எடுத்துக்கொண்டாலும், நாலைந்து ஆண்டுகளில் 50, 60 பிரின்ஸிபால்கள் இதில் அதிக உறுப்பினர்களாக வந்துவிடுகின்றார்கள். ஆகவே நம்முடைய குறிக்கோளான குறைவான எண்ணிக்கை என்பதற்கு வழியில்லாமல் போய்விடும். ஆகவே இதை வரையறுப்பதற்கு எலக்ஷன் முறையிலோ அல்லது ரொட்டேஷன் பேசிஸ்-லோ ஏதாவது செய்யப்பட வேண்டியது எப்படியும் தவிர்க்க முடியாத ஒன்று. எந்த அளவுக்கு பிரின்ஸிபால்கள் இருக்கலாம் என்பதற்கு வரையறை செய்யவேண்டும். இதைப் பற்றி அரசாங்கம் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், இந்த குழுக்களில் வருகின்றவர்கள், நாமினேட் செய்யப்பட்டு வருகின்றவர்களும் எலக்ஷனில் வெற்றி பெற்று வருகிறவர்களும் இருக்கிறார்கள். முக்கியமாக செனட்டை எடுத்துக்கொண்டால்---இப்போது சென்னையில் இருக்கின்ற நடைமுறையை எடுத்துக்கொண்டால்—செனட்டில் இருக்கின்ற பிரின்ஸிபால்கள், ப்ரொஃபசர்கள் இவர்கள் அங்கே தலைமை வகிக்கின்ற வைஸ்-சான்ஸிலருக்கு அடங்கி ஒடுங்கி இருக்கும்படியான ஒரு நிலைமை தான் இருக்கிறது. காரணம், வைஸ்-சான்ஸலருக்கு அடங்கிதான் இவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல முடியும். அதுவல்லாமல் முக்கியமாக ஏதாவது சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றால், அதற்கான கருத்துக்களை இவர்கள் வாயிலிருந்து காண்பது துர்லபம். காரணம் வைஸ்-சான்சிலரின் தயவு இவர்களுக்குத் தேவைப்படுகிறது. இதனால் கல்லூரி பிரின்ஸிபால்களோ அல்லது ப்ரஃபஸர்களோ அட்மினிஸ்ட்ரேஷன் பற்றியோ அல்லது ஸ்டாஃப் சர்வீஸ் கண்டிஷன் பற்றியோ எந்த விதமான கருத்துக்களையும் தங்கள் வாயால் சொல்ல முடியாது. வைஸ்-சான்ஸிலருடைய யுக்தம் எப்படியிருக்கிறதோ அதைத்தான் இவர்கள் சொல்ல முடியும். அதை எதிர்த்துச் சொல்ல இவர்களுக்குத் துணிவோ திராணியோ இருப்பதில்லை. அக்கடமிக் கௌன்சிலிலும் இது தான் நடக்கிறது. இப்படிப்பட்ட தலைவர்கள் இங்கு மேல் சபையில் வந்து பேசுவதைப் பார்த்தால் "—ஜனநாயகத்தை இன்னும் வளர்க்க வேண்டும், ஜனநாயகத்தில் இன்னும் சீர்திருத்தம் செய்யவேண்டும்" என்றெல்லாம் பேசுவார்கள்--- ஆனால் கௌன்சிலில் ஜனநாயத்திற்கு இடமில்லாமல் செய்து விடுவார்கள். இங்கு வந்து ஏதோ பெரிய விஷயமாக எடுத்துக்கொண்டு ஜனநாயகத்திற்கு இடமில்லை என்று சொல்லக்கூடியவர்கள் அங்கு வெறும் வாய் மூடிகளாகத் தான் இருக்கிறார்கள். ஜனநாயகத்திற்கு இடம் கொடுப்பதை அவர்களிடம் காண முடியவில்லை. இதைத் தான் சென்னை செனட்டில் நாம் பார்க்கிறோம். ஆகவே, சீர்திருத்தங்களை அதிகமாகக் கொண்டு வர வேண்டும் என்றால் கல்லூரி பிரின்சிபால்களை அதிகமாகப் போடுவதை விட்டு விட்டு, க்ராஜுவேட்-கான்ஸ்டிட்யூவன்சிகள் இருப்பது போல் ஏற்படுத்தி அதிலிருந்து அதிகமான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தால் முன்னேற்றகரமான கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். இல்லையென்றால் வைஸ்சான்சலர் மனதில் என்ன இருக்கிறதோ அதைத்தான் செனட்டிலுள்ளவர்கள் சொல்லக்கூடிய நிலைமையிருக்கும் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உறுப்பினர் அவர்கள் செலக்ட் கமிட்டியில் இருந்திருக்கிறார். இந்தக் கருத்துக்களை எல்லாம் அங்கு சொல்லவில்லை. நம்முடைய சம்பிரதாயம் என்னவென்றால் செலக்ட் கமிட்டியிலிருந்தவர்கள் கமிட்டி செய்த திருத்தத்தை ஒட்டித்தான் பேசுவார்கள். இல்லையென்றால் டிசென்டிங் மினிட் கொடுத்திருந்தால், அதைப்பற்றிச் சொல்லலாம். அப்படியில்லாமல் புதிய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்றால்--



அதற்கும் கனம் உறுப்பினர் அவர்களுக்கு உரிமையிருக்கிறது என்று தாங்கள் கருதினால்—அவர்கள் பேசலாம். பொதுவாக இருக்கின்ற சம்பிரதாயத்தை அனுசரிப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சங்கரன் :** செலக்ட் கமிட்டியிலும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன் என்பது என் ஞாபகம் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படிச் சொன்னால் மட்டும் போதாது. இங்கு அதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்றால் கமிட்டியில் டிஸென்டிங் மினிட் கொடுத்திருக்கவேண்டும்.

**திரு. வை. சங்கரன் :** இந்தக் கருத்துக்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேனே தவிர இப்போதே திருத்தங்கள் கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. சிந்தனை செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் சொல்லுகிறேன். அதில் தப்பு ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன். காரணம் என்னவென்றால், சட்டசபையில் முதலமைச்சர் அவர்களே தலைமை வகித்துக்கொண்டு நடத்தினால் எப்படி சர்க்காரிலுள்ள குறைகளைச் சொல்ல முடியும் ? அது போல வைஸ்-சான்சலர் அவர்களே செனட்டில் தலைவராக இருந்து கொண்டிருப்பதால், பல்கலைக்கழகம் பற்றிய அட்மினிஸ்ட்ரேஷன், சர்வீஸ் கண்டிஷன் போன்ற விவகாரங்களைச் சொல்லுவதற்கு உரிய வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்காது. ஆகவே, இவ்வாறு தலைமை தாங்குவது 'மூன்றாவது ஆள்' என்ற முறையில் ஒருவர் இருந்தால் நன்றாக இருக்கும். இதைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

ரிஜிஸ்டர்ட் கிராஜுவேட்ஸ் ரிஜிஸ்ட்ரேஷன் சம்பந்தமாக நல்ல திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. முன்பு இருந்ததை விட நல்ல முறையில் டெர்ரிடோரியல் ஜூரிஸ்டிக்ஷன் வைத்து எலெக்டொரேட் போடப்பட்டிருக்கிறது. அதோடு ஆப்ஷன் வேறு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் மதுரை யுனிவர்சிட்டியில் இருக்க மாட்டேன் என்று சொன்னால் அவரை கம்பெல் செய்ய முடியாது. அதே நேரத்தில் வேறு யுனிவர்சிட்டி கிராஜுவேட்டாக இருந்தாலும் பதிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது.

கடைசியாக ஒரே ஒரு விஷயம் : "South Indian History, Archaeology, Industrial Chemistry, Botanical research" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

"Sculpture and painting in temples" இதெற்கெல்லாம் ஸ்பெஷலிஸ்ட் கோர்ஸ் வைத்தால் நன்றாக இருக்கும்.

கடைசியாக, 54 முதல் 56 வரை செக்ஷன்கள் புதிதாகப் போடப்பட்டிருக்கின்றன. லிக்விட் அசெட்சை எப்படிப் பிரித்துக் கொடுப்பது என்பதில் "The Madras Government in consultation with the Madras University" என்ற முறையில்

*[திரு. வை. சங்கரன்]* [4th November 1965

அவர்களாகக் கொடுப்பது போல் இருக்கிறது. அடிப்படையாக நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதுரைப் பல்கலைக் கழகம் புதிதாக அமைக்கப்படும் அமைப்பு அல்ல. சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து மூன்றில் ஒரு பங்கு வெட்டி எடுக்கப்படப் போகின்றது. சுமுகமான முறையில் சௌகரியத்திற்காகப் பிரிக்கிறோம். எல்லா லிக்விட் அசெட்ஸிலும் மூன்றில் ஒரு பங்கு அவர்களுக்குக் கிடைக்க அவர்களுக்கு பூர்ண உரிமை இருக்கிறது. ஏதோ சென்னைப் பல்கலைக் கழகத்தின் தயவாக, புதிய அமைப்புக்குத் தானமாக அல்லது கிரேஸாகக் கொடுப்பதாக அமையக் கூடாது. சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பல முக்கிய கட்டடங்கள் இருக்கின்றன. அதற்கெல்லாம் மதிப்புப் போட்டு அந்த வேல்யூவில் மூன்றில் ஒரு பங்கை மதுரை சர்வகலாசாலைக்குக் கொடுக்கவேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் லயபிலிட்டீஸில் பொறுப்பில் மூன்றில் ஒரு பங்கை எடுத்துக்கொள்கிறது. ஆகவே அசெட்சிலும் மூன்றில் ஒரு பங்கு அவர்களுக்குச் சேர வேண்டிய நியாயம் இருக்கிறது. சர்க்கார் அதை நல்ல முறையில் செய்ய வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். இந்த யுனிவர்சிட்டிக்காக 1,500 ஏக்கர் நிலம் எடுத்துக் கொள்கிறார்கள். நல்ல முறையில் நடத்தப் பெருமளவில் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. இது நல்ல முறையில் வளர வேண்டும் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் கொண்டு வந்திருக்கக் கூடிய மதுரை யுனிவர்சிட்டி மசோதாவை வரவேற்கிறேன். பொறுக்குக் கமிட்டியினர் மிகவும் நுணுக்கமாகப் பரிசீலனை செய்து பல்வேறு நியாயமான திருத்தங்களை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக முதல் அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியது போல, ஆசிய மொழிகளைக் கற்க வசதி இருக்கவேண்டும் என்பதை விரிவுபடுத்தி உலக மொழிகளைக் கற்க வசதி செய்து கொடுக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன். மதுரை யுனிவர்சிட்டி போல உலகத்தில் பல்வேறு பகுதிகளில் பல யுனிவர்சிட்டிகள் இருக்கின்றன. பெரிதும் சிலாகிக்கத் தக்க யுனிவர்சிட்டிகள் எல்லாம் இருக்கின்றன. ஆங்காங்கு உள்ள நாகரிகத்திற்கு ஏற்ப தனித் தன்மை பொருந்தியதாகக்கூட யுனிவர்சிட்டிகள் இருக்கின்றன. மதராஸ் யுனிவர்சிட்டியைப் பொறுத்த மட்டில், அது புராதனமாக இருந்தாலும்கூட, நாம் அடிமை வாழ்வில் இருந்தபோது அவர்களுடைய நாகரிகம், அதற்கேற்றாற் போல் உள்ள பல்வேறு அம்சங்கள்யெல்லாம் பொருந்துகிற "It may be called a cosmopolitan university" மதுரை யுனிவர்சிட்டி நாம் தெரிந்து, தெளிந்து, பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்று அமைக்கின்றபோது, மதுரை யுனிவர்சிட்டி தனித் தன்மையுடன் விளங்கும் அளவுக்கு ஏதேனும் சில அம்சங்களிலேனும் தனித் தன்மை தென்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன்.



4th November 1965] *[திரு. எம். எஸ். செல்வராஜன்]*

குறிப்பாக அரசியலிலே இருக்கிற மன மாச்சரியங்களுக்கு அப்பாற் பட்ட நிலையில், அந்தப் பகுதி, அந்தநாடு, அவற்றினுடைய நாகரிகத்தின் பிரதிபலிப்பு போல, பல்கலைக் கழகங்களைத் தான் உலகம் உன்னிப் பார்க்கும் என்று நான் கருதுகிறேன். அந்த அளவுக்குப் பொறுக்குக் கமிட்டியிலே பரிசீலனை செய்து திருத்தங்கள் அமைத்திருக்கும்போது கண்காட்சிக்கு—மியூசியத்திற்கு—சிறப்பான அம்சத்தைச் சேர்த்திருப்பது மிகவும் பொருத்தம் என்று நான் கருதுகிறேன். மியூசியம் என்று குறிப்பிடும்போதே மதுரை பல்கலைக் கழகத்தைப் பொறுத்த மட்டில், தமிழ் நாட்டின் மைய இடமாக, மதுரமான இடமாக, நாகரிகத்தின் சின்னம் என்று பெயர் வாங்கி இருக்கக் கூடிய மதுரையில், தமிழனுடைய வளர்ச்சி பற்றிய கலைச் செல்வங்கள் எங்கு பொதிந்திருந்தாலும், அது மெக்ஸிகோவில் இருக்கிறதா, அல்லது வட இந்தியாவில் இருக்கிறதா என்று ஆராய்ந்து, பல்வேறு இடங்களில் இருந்து எடுக்கக் கூடிய பொருள்கள், சிற்ப சிலா சாசனங்களையெல்லாம் தொகுத்து வைக்கும் கண்காட்சியாக மட்டுமல்லாமல், பல்கலைக் கழகம் தானே ஆராய்ச்சியில் புகுந்து தமிழர்களுடைய நாகரிகம் எந்தெந்த நிலையில் எப்படி எப்படி இருந்தது, அதற்கான ஆதாரங்கள் எங்கெங்கு பொதிந்திருக்கின்றன என்று ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்ற இடமாக அமைக்கப்படும் என்று கருதுகிறேன். பல்வேறு வெளிநாடுகளில்கூட இந்த தேசத்திலிருந்து கவர்ந்து சென்ற பல்வேறு சாஸ்திரங்கள், சிற்ப சிலாசாசனங்களைக்கூட ஆராய்ச்சி செய்து புத்தக வடிவில் அவர்களுடைய நூல் நிலையங்களில் வைத்த பிற்பாடு ஆதர்சம் பெறக் கூடிய அளவுக்கு, அதன் பின்னால் நமக்குத் தெளிவு ஏற்படும் நிலைமை பல்வேறு அம்சங்களில் ஏற்பட்டிருக்கின்றது. உலகில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டிருப்பதற்குக்கூட, ஜெர்மனியர் இந்த நாட்டிலிருந்து, சரஸ்வதி மஹாலிலிருந்து எடுத்துச்சென்ற பல்வேறு கலைப்பொக்கிஷங்கள் உறுதுணையாக இருந்தது என்று தெரிகிறது. மதுரைப் பல்கலைக் கழகத்தில் தனியாக, நம் நாகரிக வளர்ச்சி எந்த இடத்தில் ஆரம்பித்து எந்த நிலையில் இருக்கிறது என்று ஆராய வசதி செய்யப்படும் என்று நான் கருதுகிறேன், வசதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். பல்கலைக் கழகம் இன்று அரசியலுக்கு அப்பாற்பட்டதாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும், நாகரிகம் உலகில் தெரிந்தது அரசியல் வழியாகத்தான் என்று நினைக்கும்போது, உலகத்தில் உள்ள தேசங்கள், சுதந்திரம் பெற்றிருக்கக் கூடிய தேசங்கள் தாங்கள் தங்கள் நாட்டிலே நாட்டின் வளர்ச்சிக்கு, நாட்டின் பூர்ண நிலைக்கு அவர்கள் வைத்திருக்கக் கூடிய வழி முறைகளைப் பற்றி ஆராய்வதில் தவறில்லை என்று கருதுகிறேன். உலகில் அபிப்பிராயங்கள் காரணமாக, உலகில் உள்ள தெளிந்து, வளர்ந்த மக்கள் சமுதாயம் ஏற்றுக்கொண்டிருக்கக் கூடிய அரசியல் கொள்கைகள், அரசியல் அம்சங்கள் பற்றி நாம் நினைத்திருக்கக் கூடிய நிலையில், சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு என்று இருந்தாலும்கூட, பல்வேறு தேசங்கள் தாங்கள் வளர்ச்சி அடைய தம் நாட்டில் வைத்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [4th November 1965

திருக்கக் கூடிய அம்சங்களைத் தொகுத்து அரசியலமைப்பு செய்து பரீட்சை செய்துகொண்டிருக்கிறோம். அந்த ஜனநாயக அம்சத்தில் இருக்கக் கூடிய குறைபாடுகள் என்ன, நல்லவைகள் என்ன, உலகம் கவர்ச்சியாக ஏற்றுக்கொள்ளக் கூடிய அம்சங்கள் என்ன என்று இந்த நாடு பரீட்சிக்கிற இந்த வேளையிலேயேகூட சர்வகலாசாலை ஆராய்வதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

யுனிவர்சிட்டி ரகசியம் என்று பாதுகாக்கும் சில அம்சங்களை நேரடியாக அரசாங்கத்திற்குக் கொடுப்பதற்குப் பதில் சான்சலருக்குக் கொடுப்பது என்று இருக்கிறது. சான்சலர் அவர்கள் யுனிவர்சிட்டியுடன் சேர்ந்தவர் இல்லையா என்று கேட்கத் தோன்றுகிறது. சான்சலருக்குக் கொடுத்து அவர்கள் மூலமாக அரசாங்கத்திற்குக் கொடுப்பது என்று சொல்லும்போது சான்சலர் யுனிவர்சிட்டியைச் சேர்ந்தவர் இல்லையா, ரகசியம் என்றாலும் அரசாங்கத் தலைமையினருக்குக் கொடுப்பதில் என்ன தவறு இருக்கும், அந்த நம்பிக்கையை அரசாங்கத்தில் இருக்கக் கூடிய முதல்வரிடத்தில் வைக்க முடியாதா என்று கேட்கத் தோன்றுகிறது.

இன்னும் பார்க்கும்போது சில டிஸ்க்வாலிஃபிகேஷன்ஸ் என்று இருக்கிற அம்சங்களில் முன்பு இருந்தபோது சாதாரணமாக "Lepers suffering from leprosy" என்று இருந்தது. லெப்ரசி என்பதைப் பற்றி நாமே மருத்துவ ரீதியில் பார்க்கிறபொழுது கூட லெப்பர்ஸ் எல்லோருமே புறக்கணிக்கத் தகுந்தவர்கள் என்ற எண்ணம் வரும்படி பார்ப்பது சரியல்ல தொழுநோயில்கூட, சில தொழுநோய் பரவக்கூடியது, சில தொழுநோய் பரவக்கூடாதது, ஆபத்து இல்லாதது என்ற முறையில் இருப்பதினால், ஒருவரைப் பார்த்த பார்வையிலே லெப்பர் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்த வார்த்தை இருக்கலாமா, 'ஸபரிங் ஃப்ரம் லெப்ரசி என்று சொல்லக்கூடிய வார்த்தைகளை சேர்க்கவேண்டியது அவசியமா என்பதை நுணுக்கமாக பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். லெப்ரசி தீர்க்கக்கூடிய வியாதிதான் என்று மருத்துவத் துறையில் அதற்கு பல்வேறு வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன; இம்மாதிரி அவர்கள் ஒரு புறக்கணிக்கப்பட்ட சமூகத்தினர், ஜாதியினர், பிரிவினர் என்று புறக்கணிக்கக்கூடிய அளவுக்கு சட்டதிட்டங்களைக்கூட உருவாக்கவேண்டுமா என்பதைப்பற்றி நாம் யோசிக்கவேண்டும் என்று கருதுகிறேன்.

மதுரை பல்கலைக் கழகத்தைப்பற்றி சட்டம் இயற்றுகின்ற நேரத்தில் சென்னை பல்கலைக் கழகத்தில் எந்த அளவுக்கு பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்று பார்த்து, பின்னாலே இது போன்று ஏற்கனவே நம்முடைய ராஜ்யத்திலுள்ள பல்கலைக் கழகச் சட்டங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இப்பொழுது புதியதாக அமைக்கின்ற சட்டதிட்டங்கள் எந்த வகையில் அமைந்திருக்கின்றதோ, அதே வகையில் ராஜ்யத்திலுள்ள மற்ற பல்கலைக்கழகச் சட்டங்களும், 'டு பி



4th November 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

கெப்ட் இன் பார்வித் திஸ்' எந்த அளவுக்கு அவைகளை மாற்றி அமைக்க வேண்டுமோ அதில் அரசாங்கம் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அப்படிச் செய்யும் பொழுது சர்வகலாசாலைகளில் சாதாரணமாக நடக்கக்கூடிய விஷயங்களிலே, தேர்தல் விஷயங்களில், பிரதிநிதித்துவம் சம்பந்தமான விஷயங்களில் எல்லா சட்டங்களிலும் ஒன்றுபோல இருக்கவேண்டும். இங்கு ஒன்று, அங்கு ஒன்று என்று அவசியம் இல்லாத சில வித்தியாசங்கள் இருப்பதற்கு உள்ள சந்தர்ப்பங்களையெல்லாம் குறைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

பொறுக்குக் கமிட்டி செய்திருக்கக்கூடிய மாறுதல்கள் பெரும்பாலும் வரவேற்கக்கூடிய, ஒத்துக்கொள்ளக்கூடிய மாறுதல்கள். இந்த மாறுதல்களுடன் மதுரை யூனிவர்சிட்டி பில்லை நிறைவேற்றுவதன் மூலமாக நாம் வெகு நாட்களாக எதிர்பார்த்த ஒரு யூனிவர்சிட்டி ஏற்படுத்தப்படுகிறது. தென் பகுதியிலே இருக்கக்கூடிய நான்கு ஜில்லாவாசிகளுக்கெல்லாம் ஆதரவும், உணர்ச்சியும், உத்வேகமும் தரக்கூடிய அளவுக்கு, தங்களுடைய குறி, இலக்கு வெற்றி அடையக்கூடிய அளவுக்கு, நாட்டு மக்கள் பெருமைபடக் கூடிய அளவுக்கு, எதிர்காலத்தில் மதுரை பல்கலைக் கழகம் எல்லா பெருமைக்கும் உரியது என்ற நல்ல பெயர் கிடைக்கும் அளவுக்கு இந்த மசோதா அமைந்திருக்கிறது. அந்தப் பகுதி வாசிகள் மகிழ்ச்சி அடைவதற்கு, வளம் பெறுவதற்கு இந்த மசோதா உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கையிலே இதை நான் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன்.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதுரை பல்கலைக் கழகம் அமைப்பது சம்பந்தமாக கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவினை சீரிய முறையிலே செலக்ட் கமிட்டி பரிசீலனை செய்து, இப்பொழுது அதைச் சட்டமாக நிறைவேற்றுவதற்காக சட்டமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற நிலைமையில் நான் சில கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே இதுவரையிலே இரண்டு பல்கலைக் கழகங்கள் இருந்தன. இப்பொழுது மூன்றாவது யூனிவர்சிட்டி வரப்போகிறது என்ற செய்தி தமிழகத்தில் இருக்கிற பல பகுதி மக்களுக்கும் ஒரு நல்ல செய்தியாகும். அதைப்போல மேலும் பல யூனிவர்சிட்டிகளை உண்டாக்க வேண்டும் என்று நான் அரசாங்கத்திற்கு யோசனை கூற விரும்புகிறேன்.

யூனிவர்சிட்டி சம்பந்தமாக நாம் சட்டம் இயற்றுகின்ற நேரத்தில் பழமை அல்லது சங்க காலம் அல்லது காந்திய பொருளாதாரம் இவைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு யூனிவர்சிட்டி ஆரம்பிப்பது அல்லது செயல்படுத்துவது என்பது இல்லா

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [4th November 1965

மல், பழைய வேதாந்தத்தை மறந்துவிட்டு, வளர்ந்துவருகின்ற சமுதாயத்திற்கு ஏற்ப, வளருகின்ற பொருளாதார நிலைமைக்கு ஏற்ப, பட்டதாரிகளையும் விஞ்ஞானிகளையும், சரித்திரப் பேராசிரியர்களையும் உண்டு பண்ணவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் யூனிவர்சிட்டி செயல்படவேண்டும், அதற்கான முறையிலே அங்கு பாடதிட்டங்களெல்லாம் வகுக்கப்படவேண்டும் கொள்கையை உடையவன் நான். உதாரணமாகச் சொல்லப்போனால், உலகத்தில் பல யூனிவர்சிட்டிகள் இருக்கின்றன. ஆனால், எல்லா யூனிவர்சிட்டிகளும் ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டி போல அல்லது கேம்பிரிட்ஜ் யூனிவர்சிட்டி போல இருப்பதில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையிலே ஏறக்குறைய 50-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. இருந்தாலும், சென்னையைப் பொறுத்தவரையிலே ஒரே ஒரு யூனிவர்சிட்டி, அண்ணாமலை யூனிவர்சிட்டி தனியாக காலேஜ் இயங்குகிற ஒரு யூனிவர்சிட்டி—ஆக இரண்டு யூனிவர்சிட்டிகள் தான் இந்த மாநிலத்தில் இருந்து வருகின்றன. நாம் பழமையிலிருந்து விடுபட்டு புதுமைக்கு வரவேண்டும் என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், தினம் தினம் நாம் பார்க்கிறோம் படிக்கிறோம், யூனியன்பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் பல துறைகளிலே வேலைக்கு அமர்த்தப்படுகிற விளம்பரங்களை பார்க்கிறோம். விஞ்ஞானிகள் தேவைப்படுகிறார்கள், சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள் தேவைப்படுகிறார்கள், அதேபோல பல பட்டதாரிகள் தேவைப்படுகிறார்கள். மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்குகின்ற பலதரப்பட்ட துறைகளில் வேலைக்கு அமர்த்துவது சம்பந்தமாக வருகின்ற விளம்பரங்களைப் பார்த்தால், 'பர்ஸ்டு கிளாசில் எம்.ஏ. பாஸ் செய்தவர்கள், பி. எஸ். சி. பாஸ் செய்தவர்கள், எம்எல் டிகிரி பெற்றவர்கள், பி.எல். டிகிரி 'பர்ஸ்ட் கிளாசில்' பாஸ் செய்தவர்கள் வேண்டும், இப்படிப்பட்ட குவாலிபிகேஷன் வைத்திருப்பவர்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். நான் இங்கே சொல்வேன், இந்தியாவில் இருக்கிற பல சர்வகலாசாலைகளில், கல்கத்தா யூனிவர்சிட்டியும், சென்னை யூனிவர்சிட்டியும் பிரசித்தி பெற்ற யூனிவர்சிட்டிகளாகும். இந்த யூனிவர்சிட்டிகளில் படித்து பட்டம் பெற்ற மாணவர்கள் இந்தியாவில் இருக்கிற எந்த யூனிவர்சிட்டிகளிலும் படித்தவர்களைவிட சாதனைகளில் குறைந்தவர்கள் அல்ல, மிகுந்தவர்கள்தான். இருந்தபோதிலும், அகில இந்திய சர்வீஸ்களில் நியமனம் செய்யப்படுவதைப் பார்த்தால், சென்னையைப் பொறுத்தவரையிலே நம்முடைய பட்டதாரிகளுக்கு அந்த இடங்களுக்குச் செல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. உதாரணமாகப் பார்த்தால் எனக்குச் சொல்லிக் கொடுத்த வாத்தியாரே இன்னும் எம்.எல். பாஸ் பண்ணவில்லை. எனக்கு பி எல் பட்டத்திற்கு படிப்பு சொல்லிக்கொடுக்க வாத்தியார் 10 தடவை பரீட்சைக்குச் சென்றும், இன்னும் எம்.எல். பாஸ் செய்ய முடியவில்லை. பாடதிட்டங்கள் மிகக் கடுமையாக அமைந்திருக்கின்றன. சில சமயங்களில் மெட்ராஸ் யூனிவர்சிட்டி ரிசல்டை பத்திரிகையில் பார்க்கலாம், எம்.எல். பரீட்சை எழுதியவர்கள் 8 பேர்கள், ஆனால்



4th November 1965] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

ஒருவரும் பாஸ் பண்ணவில்லை; ஜூரிஸ்ப்ருடென்சில் ஒருவர் பாஸ் செய்யவில்லை. இன்டர்நேஷனல் லாவில் ஒருவர் பாஸ் செய்யவில்லை என்ற அளவில்தான் இருக்கிறது. இங்குள்ள பட்டதாரிகள் மற்ற மாநிலங்களில் உள்ள யூனிவர்சிட்டிகளில் உள்ள பட்டதாரிகளோடு ஒத்துப் போகக்கூடிய அளவில் நம்முடைய யூனிவர்சிட்டிகள் வளரவேண்டும். நான் மதராஸ் யூனிவர்சிட்டியை குறை சொல்லுவதாக அமைச்சர் அவர்கள் கருதக்கூடாது. இனிமேல் அமைக்கப்படப்போகிற மதுரை யூனிவர்சிட்டி நல்ல ஒரு வழிகாட்டியாக வளர வேண்டும், மதராஸ் யூனிவர்சிட்டிக்கு சொல்லிக்கொடுக்கக்கூடிய அளவிலே அது முன்னுக்கு வரக்கூடிய அளவுக்கு இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நான் சொல்லுகிறேன். ஆகையினால், இப்பொழுது அமைக்கப்படுகின்ற மதுரை யூனிவர்சிட்டி நவீன முறையிலே, மாணவர்கள் யூனிவர்சிட்டியிலிருந்து படித்து வெளி வந்தவுடனேயே அவர்களுக்கு தன்னம்பிக்கை வரக்கூடிய அளவுக்கு யூனிவர்சிட்டி பாடதிட்டங்கள் அமைந்திருக்கவேண்டும். எத்தனை பேர்கள் எம்.ஏ. பொருளாதாரம் படித்து எம்பிளாய்மெண்டு எக்ஸேஞ்சில் எல்.டி.சி. போஸ்டுக்காக க்யூவில் நிற்கிறார்கள்? இந்த நிலைமையில் யூனிவர்சிட்டி இருந்து என்ன, இல்லாமல் போய் என்ன? மாணவர்கள் படித்து பட்டம் பெற்ற உடனேயே அவர்களுக்கு ஒரு வசதி ஏற்படுகின்ற அளவுக்கு அல்லது அவர்களே தன்னம்பிக்கை கொண்டு வாழ்க்கையிலே முன்னுக்கு வருவதற்கு வசதிகளை செய்துதரக்கூடிய பாட திட்டங்களாக அமைய வேண்டும். அவர்கள் பட்டம் பெற்று வெளியே வந்தவுடனேயே அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்று ஒரு காரண்டி இருக்க வேண்டும். இல்லையென்றால், படிப்புக்கு மதிப்பு இல்லாமல் போய்விடும், சட்டத்திற்கு மதிப்பு இல்லாமல் போய்விடும். நல்ல முறையில் மதுரை யூனிவர்சிட்டி வளரவேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த யோசனைகளைக் கூறுகிறேன்.

அடுத்தபடியாக, ரிஜிஸ்டிரேஷன் பற்றி கூற விரும்புகிறேன். மதராஸ் யூனிவர்சிட்டி செனெட்டுக்கு அங்கத்தினர்களெல்லாம் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், யாரை அங்கத்தினராக வைக்கவேண்டும் என்றெல்லாம் கவனிக்கும்பொழுதுதான் ரிஜிஸ்டிரேஷன் செய்வதற்கு சந்தர்ப்பம் வருகிறது. நான் பத்து வருஷங்களுக்கு முன்னால் பாஸ் செய்து பட்டம் பெற்றிருந்தாலும்கூட, நான் செனெட்டுக்கு நிற்க வேண்டுமென்றால், வோட்டு அளிக்கவேண்டுமென்றால் ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டும். ஏனெனில், பட்டதாரிகளாக ரிஜிஸ்டர் செய்து கொண்டவர்கள்தான் வாக்களிக்க முடியும். மற்றவர்கள் வாக்காளர்களாக வர முடியாது. இந்தக் குறை நீக்கப்படவேண்டும். வோட்டு அளிப்பதற்கு ரிஜிஸ்டெர்டு கிராஜுவேட்டாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருக்கக் கூடாது. எப்படி மேல் சபையில் 'கிராஜுவேட்ஸ் கான்ஸ்டிடுவென்ஸி' என்று வைத்திருக்கிறார்களோ, பட்டதாரிகளாக இருந்தால் வோட்டர்ஸ் லிஸ்டில் இடம் பெறுவார்கள் என்று வைத்திருக்கிறார்களோ, அதைப்போல

பட்டம் பெற்றவர்கள் ஆட்டோமாடிக்காக வோட்டர்களாக வரவேண்டும். மதுரை யூனிவர்சிட்டியில் பட்டம் பெற்று வெளியே வருகிறவர்கள் அவர்கள் மனுச் செய்துகொள்ளாமலேயே அவர்களுக்கு வோட்டுரிமை வழங்கப்படவேண்டும். அப்பொழுதுதான் நல்லவர்கள் செனெட்டுக்கு வர முடியும் என்று நினைக்கிறேன். ஆகவே, இந்த முறையில் மசோதாவை திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வெளியிலிருந்து, டெல்லி யூனிவர்சிட்டி, பாம்பே யூனிவர்சிட்டி, கல்கத்தா யூனிவர்சிட்டி, ஆந்திரா யூனிவர்சிட்டிகளிலிருந்து வந்திருக்கிறவர்கள், மதுரையில் வேண்டுமானால் அப்ளிகேஷன் போட்டுத்தான் பதிவு செய்து கொள்ளலாம் என்று போட்டாலும் பரவாயில்லை. ஆனால், ஒரே சர்வகலாசாலையில் பட்டம் பெறுகிறவர்கள், அங்கே அப்ளிகேஷன் போட்டுத்தான் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்பது, அப்படிப்பட்ட நிபந்தனை போடுவது சரியாக இருக்காது. அப்படிப்பட்ட நிபந்தனைகளால்தான் சென்னை சர்வகலாசாலை இன்றைவரைக்கும் ஒரு 'கன்சர்வேடிவ் இன்ஸ்டிட்யூஷனாக' இருக்கிறது. அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் அமைச்சருக்கு யோசனை சொல்ல விரும்புகிறேன்.

அதேபோலத்தான், வைஸ்-சான்ஸலர் செலக்ஷனிலும் செலக்ட் கமிட்டியிலே நிறைய அதுபற்றி விவாதித்து இருக்கிறார்கள். அதன்படி, செனட்டிலே ஒரு அங்கத்தினர், ஸிண்டிகேட்டிலே ஒரு அங்கத்தினர், சான்ஸலர் ஒரு அங்கத்தினர் என்று மூன்று அங்கத்தினர்கள் கொண்ட பேனலாக அமைப்பு இருக்கிறது. அதிலிருந்து ஒருவரை சான்ஸலர் தேர்ந்தெடுத்து, நாமினேட் செய்வார்கள் என்றிருக்கிறது. செனட்டிலே ஒருவரைப் போடுகிறார்கள், அது சரி. பிறகு ஸிண்டிகேட்டில் ஒருவரைப் போடுகிறார்கள், அதுவும் சரி. ஆனால், சான்ஸலர்—கவர்னர்—ஒருவரை நாமினேஷன் செய்கிறார்கள் என்றால் அது மற்றவர்களுக்கு நியாயமாக இருக்குமா என்று பார்க்க வேண்டும். ஆகவே, மூன்று பேர்களுக்கு அவசியமே கிடையாது. ஸிண்டிகேட் ஒருவரையும், செனட்டு ஒருவரையும் ஆக இரண்டு பேர்கள் இருந்து, சான்ஸலர் இவர்களில் ஒரு ஆளை வைஸ்-சான்ஸலராக நியமிக்க வேண்டும் என்று இருக்க வேண்டும். மூன்று ஆட்களிலிருந்து சான்ஸலர் நாமினேஷன் செய்வது என்றால் அது நீதியாக இருக்காது, அது நீதிக்குப் புறம்பாகத்தான் இருக்கும். ஆகவே, அந்த முறையில் முதல் அமைச்சர் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மூன்று வருஷத்திற்கு வைஸ்-சான்ஸலர் பதவி கொடுத்திருக்கிறார்கள். பிறகு இரண்டு டெர்ம் என்று ஒரு ஸீலிங் வைத்திருக்கிறார்கள். இந்த ஸீலிங் அவசியமா என்றுதான் யோசிக்க வேண்டும். ஆக ஒருவர் ஆறு-வருஷம் வைஸ்-சான்ஸலராக இருக்கலாம். இன்றைக்கு மெட்ராஸ் யூனிவர்சிட்டியை எடுத்துக் கொண்டால் அகில உலகத்திலேயும் பெருமை வாய்ந்த ஒரு வைஸ்-சான்ஸலர் கனம் லட்சுமணசுவாமி முதலியார் நான் பிறப்பதற்கு முன்னால் இருந்தே இருக்கிறார்கள்; இருக்கும் வரை



இருந்தாலும் இந்த யூனிவர்சிட்டிக்கு பெருமைதான் வளருகிறது, குறையவில்லை. ஆகவே, இரண்டு டர்ம், மூன்று டர்ம் என்றெல்லாம் ஸிலிங் வைக்கவேண்டிய அவசியமே இல்லை. நல்லவராக இருந்தால் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கலாம். அதே சமயத்திலே, சரியாக இல்லையென்றால் அவரை நீக்க சான்ஸலருக்கு அதிகாரம் இருக்கிறது. அதுவே போதும்.

அடுத்தபடியாக, எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் செல்வராஜன், சங்கரன் இவர்கள் வைஸ்-சான்ஸலராக வருகிறவர் அரசியலுக்கு அப்பாற்பட்டவராக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். கல்வி பயிலுகிற காலத்தில் அரசியலே வரக்கூடாது என்கிற கொள்கையைச் சேர்ந்தவன்தான் நான். வைஸ்-சான்ஸலர் அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தால், மாணவர்களும் அந்தக் கட்சியைச் சேர்ந்திருக்கலாம் என்று எண்ண இடம் கொடுக்கும். ஆகவே, அரசியலே அங்கு இருக்கக் கூடாது. ஆகவே, அரசியலும் கூடாது, அவருக்கு ஸீலிங்கும் இருக்கக் கூடாது. வேண்டுமானால் செனட் விரும்புகிறவரை, ஸிண்டிகேட் விரும்புகிறவரை, சான்ஸலர் விரும்புகிறவரை என்று போடலாம். அதற்கு ஒரு ஸீலிங் வைக்க வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்து, மதுரை பல்கலைக் கழகத்தில் சட்டக் கல்லூரி அமைக்க வேண்டும். இப்பொழுது இங்கே சட்டக் கல்லூரி இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பக்கம் போய்ப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எத்தனை பேர்கள் வருகிறார்கள்? வேலைக்கு எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் ரிஜிஸ்டர் செய்துவிட்டு லா காலேஜுக்கு அப்ளிகேஷன் போட்டு விடுகிறார்கள். பின்னால், ஏதாவது மந்திரிகள் சிபாரிசு இருந்து உத்தியோகம் கிடைக்கலாம். ஆண்டுக்கு இரண்டு டெபுடி கலெக்டர்கள்தான் எடுக்கிறார்கள். எட்டு மந்திரிகளும் இரண்டு டெபுடி கலெக்டருக்கு ஆள் சிபாரிசு செய்வது என்பது சாதாரண விஷயம் அல்ல. ஆகவே பல பேர்கள் லா காலேஜுக்கு வந்துவிடுகிறார்கள். அந்தத் தொழிலுக்குப் போக வேண்டும் என்று படிக்க வந்தால் சரி. அதை விட்டுவிட்டு, ஆட்டு மந்தைபோல கும்பலாக வந்து விடுகிறார்கள். அதைக் குறைக்க வேண்டும் என்று முதல் அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மதுரை பல்கலைக்கழகத்திலே ஒரு சட்டக் கல்லூரி அமைக்க வேண்டும் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சட்டப் படிப்புக்கு அதிகமாக மாணவர்கள் வருகிறார்கள் என்று சொல்லிவிட்டு, மதுரையில் சட்டக் கல்லூரி வேண்டுமென்றால் அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** மதுரையில் சட்டக் கல்லூரி வேண்டும். ஏனென்றால். அங்கிருக்கிறவர்கள் இங்கே படிக்க வருகிறதினால் அவர்களுக்கு அதிகச் செலவும், கஷ்டமும் ஏற்படுகிறது.

அவர்களுடைய செலவைத் தவிர்க்க அங்கேயே ஒரு கல்லூரி வேண்டும். இங்கே 500 மாணவர்களை வைத்துக் கொண்டு ஒரு ஆசிரியர் மாணவர்களைக் கவனிப்பது என்பது முடியாத காரியம். அவர்களைத் தனிப்பட்ட முறையில் கவனிக்க முடியாது. ஆகவே, மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி ஆரம்பிக்க முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கான்பிடன்ஷல் ரிப்போர்ட்டுகள் பற்றி கனம் அங்கத்தினர் செல்வராஜன் குறிப்பிட்டார்கள். கான்பிடன்ஷல் ரிப்போர்ட்டுகளை அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும் என்றால், அனுப்பக்கூடாது. சான்ஸலரிடம் வேண்டுமானால் காட்டலாம். ஆனால், வைஸ்-சான்ஸலரோ, ரிஜிஸ்ட்ராரோ எதைக் கான்பிடன்ஷல் என்று கருதிக் கொண்டிருக்கிறார்களோ, அதை கவர்ன்மெண்டுக்கு, டிபார்ட்மெண்டுக்கு, செக்ஷனுக்கு அனுப்பு என்றால், அதற்கு மதிப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே திரு. செல்வராஜன் அவர்கள் சொன்னதை நான் மறுக்கிறேன். அவர்கள் சொன்னதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

இந்தப் பல்கலைக் கழக மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். சில குறைபாடுகள் இருந்தாலும், அப்படிப்பட்ட குறைகளை நீக்கலாம் என்று நண்பர் திரு. மாதவன் அவர்கள் பல திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் சரி என்று கருதக் கூடியவைகளை கனம் முதல் அமைச்சர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் முதல் அமைச்சருடைய கவலையெல்லாம், அகில இந்திய சர்வீஸ்களில் இந்த மாநிலத்திலிருந்து எவ்வளவு பேர்கள் பங்கு பெறுகிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு பார்க்க வேண்டும் என்பதுதான். ஆகவே, பல யூனிவர்சிட்டிகளை உண்டாக்குவதன் மூலம் பலர் ஃபர்ஸ்ட் கிளாஸ் பெற்றவர்கள் இருக்க முடியும், அவர்களெல்லாம் யூனியன் சர்வீஸ் கமிஷன் போட்டிகளில் பங்கு கொள்ள முடியும். இன்றைக்கு அவர்கள் எல்லாப் போட்டிகளுக்கும், பரீட்சைகளுக்கும் ஃபர்ஸ்ட் கிளாஸ் வேண்டும் என்கிறார்கள், அதிலே பகல்பூர் யூனிவர்சிட்டியிலிருந்தும், ஆரியாறு யூனிவர்சிட்டியிலிருந்தும், தினம் தினம் திறக்கிற யூனிவர்சிட்டிகளிலிருந்தும் வருகிறார்கள். ஆனால், மெட்ராஸ் யூனிவர்சிட்டியிலே வடிகட்டி, ஃபில்டர் செய்து பெறுகிற தேர்டு க்ளாஸும் அவர்களுடைய பர்ஸ்ட் கிளாஸுக்கு சமமாக இருக்கும். மேலும், பரீட்சையில் பார்த்தால், இவர்கள் நன்றாகச் செய்யமுடியும். ஆனால் எண்ட்ரன்ஸிலே ஃபர்ஸ்ட் கிளாஸ் என்பதால் கஷ்டம் வருகிறது. அதனால் தான் இடைஞ்சல் வருகிறது. ஆகவே, இந்த முறையில் செயல்படமதுரை யூனிவர்சிட்டி பாடுபடவேண்டும். அதேபோல பல பல்கலைக் கழகங்கள் தோன்ற வேண்டும். இன்றைக்கு கோவையிலே, மில் முதலாளிகள் அண்ணாமலை யூனிவர்சிட்டி போல சர்க்கார் உதவியின்றியே தாங்களாகவே ஒரு தனி யூனிவர்சிட்டியை ஆரம்பிக்கலாம். அதே போல, திருச்சியிலே ஒரு யூனிவர்சிட்டி வைக்கலாம். இப்படி நம் முதல் அமைச்சர் கல்வித் துறையில் அவர்களுக்கு இருக்கும் நீண்ட நாள் அனுபவத்தை வைத்துக்கொண்டு பல கல்லூரிகளையும் சர்வகலாசாலைகளையும் வைக்கவேண்டும் என்று ஆவல் உடையவர்களாக இருக்கிறார்கள். அதற்கு மேலும் மேலும் வேண்டிய முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய யோசனை. அதைச் செய்ய எல்லோரும் முயற்சி செய்ய வேண்டும் என்று சொல்லி, அந்த அளவோடு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.



* திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழக மசோதாவை வரவேற்றுப் பேசும்போது ஒரு சில வார்த்தைகள் பேச நான் ஆசைப்படுகிறேன். இது மூன்றாவது பல்கலைக் கழகமாகத் தமிழகத்திலே ஆரம்பிக்கப்படுகிறது. இன்னும் எத்தனை அதிகமான பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்கின்றோமோ அந்த அளவிற்குக் கல்வி அளிக்க வாய்ப்புகளை அதிகமாகத் தருகிறோம் என்று நாம் பெருமைப் படலாம். ஆகையால், மதுரைப் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்த நாம் சீக்கிரமாக தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கும் ஒரு தனியான பல்கலைக் கழகத்தை ஆரம்பிப்பது மிக அவசியம் என்றே நான் கருதுகின்றேன். இந்த இரண்டு மாவட்டங்களிலும் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இப்படி பல்கலைக் கழகங்கள் இரண்டு மூன்று மாவட்டங்களுக்கு ஒன்றாக ஆரம்பிக்க ஆரம்பிக்க, கல்லூரிகள் அதிகமாக வளர்வதற்கும் திறமையாக நடப்பதற்கும் வாய்ப்பு இருக்க முடியும். அந்த வகையில், திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பிக்க முதல் அமைச்சர் அவர்கள் கட்டாயமாக முயற்சி எடுப்பார், அது வெகு சீக்கிரத்தில் வெற்றி அடையும் என்று நான் நம்புகிறேன்.

அது மாத்திரம் போதாது. எதையும் அரசாங்கமே ஆரம்பித்துத் தொல்லைகளைத் தாங்கிக் கொண்டிருக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. தனியார் துறையிலும் யாராவது பணம் தருவதாக முன்வந்தால், அதையும் ஏற்றுக்கொண்டு, அவர்களையும் ஊக்குவித்துப் பல்கலைக் கழகங்களை ஆரம்பிப்பது மிகவும் அவசியமாகும். இம்மாதிரி சமுதாய நல இலாக்காக்களில் எல்லாம், கல்வி, மருத்துவம் இப்படிப்பட்ட இலாக்காக்களில் எல்லாம் தனியார்த் துறையில் உள்ளவர்கள் எந்த அளவு பணத்தைத் தர முன்வருகிறார்களோ, அந்தப் பணத்தைப் பெற்று சமுதாயத்திற்கு எந்த அளவிற்கு நன்மைத் தர முடியுமோ அந்த அளவிற்கு ஊக்கம் தருவது மிகவும் அவசரமாகும். அந்த வகையிலே, நாமேதான் பணத்தைத் தேடி ஆரம்பிக்க வேண்டும் என்ற நினைப்பு இல்லாமல், கல்வியிலே சற்று கருத்துக் கொண்டவர்கள், கல்வியைப் பரப்ப வேண்டும் என்ற ஆசை உள்ளவர்கள், கல்வியை மக்கள் மத்தியிலே பரப்புவதற்கு எதையும் செலவழிக்கத் தயாராயிருக்கிறோம் என்று சொல்கிறவர்களை எல்லாம் இன்னும் தட்டிக் கொடுத்து வெகு சீக்கிரமாகக் கல்வியைப் பரவச் செய்வது மிகச் சிறந்தது என்று நான் கருதுகின்றேன்.

மதுரைப் பல்கலைக் கழக மசோதா ஏறக்குறைய சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தை சார்ந்த அளவிலேதான் தீட்டப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவிலே சில புரட்சிகரமான கருத்துக்களைப் புகுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. மதுரைப் பல்கலைக் கழக வட்டாரத்திலிருக்கும் கல்லூரிகள் வேறொரு பல்கலைக் கழகத்தைச் சார்ந்திருக்க முடியாது, மதுரைப் பல்கலைக் கழகத்தைத் தான் சார்ந்திருக்க வேண்டும் என்ற வகையில் ஐந்தாவது ஷரத்தை அமைத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

11-வது ஷரத்திலே, எப்படி வைஸ்-சான்ஸலரைத் தேர்ந்தெடுப்பது என்ற முறையைப் பார்க்கும்போது, ஒரு சிக்கலான முறையை ஏற்படுத்தியிருக்கிறார்களோ என்ற சந்தேகம் தட்டுகிறது. மூன்று பெயர்களைக் குழு சிபார்சு செய்யவேண்டும் என்றும், அந்தக் குழுவில் உள்ள மூன்று உறுப்பினர்களில் ஒருவர் ஸெனட்டாலும், ஒருவர் ஸின்டிகேட்டாலும், ஒருவர் சான்ஸலாராலும் நியமனம் செய்யப்படவேண்டும் என்று இருக்கிறது. இந்தக் குழு சிபார்சு செய்யும் மூன்று பேர்களைக் கொண்ட 'பானல்' இலிருந்து ஒருவரை வைஸ்-சான்ஸலாராக எடுக்கவேண்டும் என்ற நிலையில் போட்டிருப்பதைப் பார்க்கும்போது, அது அவ்வளவு எளிதாக இருக்குமா என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. Panel of three names to be recommended by the Senate என்று போட்டால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், செனட்டிலே எல்லாவிதமான துறைகளுக்கும் இடம் அளித்திருக்கிறார்கள். கல்லூரிப் ப்ரின்ஸிபால்கள், சட்டசபை பிரதிநிதிகள், பஞ்சாயத்து, முனிசிபல் கவுன்சில் பிரதிநிதிகள் இப்படி எல்லாப் பிரதிநிதிகளுக்கும் இடம் அளிக்கப்பட்டிருக்கும் செனட்டில் அவர்களே பார்த்து மூன்று பேர்களைச் சிபார்சு செய்து அனுப்பி, அதிலிருந்து யாரை வைஸ்-சான்ஸலராகத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு எடுப்பது சற்று எளிதாக இருக்கும். வைஸ்-சான்ஸலர் மூன்று ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார் என்றும், அவர் இரண்டு முறைக்கு மேல் தேர்ந்தெடுகக்ப்படாமல்இருக்க வேண்டும் என்றும் ஷரத்து அமைக்கப்பட்டிருப்பது மிகவும் புரட்சிகர்மான கருத்தாகும். எனக்கு முன்னே பேசிய எதிர்க் கட்சி கனம் அங்கத்தினர் ஒருவர் "ஏன் ஒருவரே தொடர்ந்து இருக்கக்கூடாது? சாகும் வரையில் ஒருவரே இருந்துவிட்டுப் போகலாம்" என்று சொன்னார். ஜனநாயக வளர்ச்சிக்கு அது பொருந்தாத கருத்து என்றே நான் நினைக்கின்றேன். Death or resignation alone can remove a person என்ற நிலை இருக்கக் கூடாது. சாவு அல்லது அவர்களாக விட்டுவிட்டுப் போக வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்திக் கொண்டு போவோமானால் அது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல என்று நான் மிகத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கின்றேன். ஒருவருடைய திறமையையோ ஆற்றலையோ குறைத்துப் பேசுவதாகக் கருதக் கூடாது. ஒருவர் இல்லாவிட்டால் இன்னொருவர் அந்த இடத்திற்கு வந்து நிரப்பக்கூடிய அளவு ஆற்றலை மக்கள் மத்தியில் உண்டாக்கியிருக்கிறோமா என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். ஒருவரையே



நம்பி உலகம் இருந்து கொண்டு இருக்குமானால் அந்த உலகம் முன்னேற வழி இருக்க முடியாது. அடுத்தவருக்கும் வாய்ப்பு கொடுத்தால், அவரவர் திறமையைக் காட்டுவதற்கு வசதி செய்து கொடுத்ததாகும். மற்றவர்களுக்கும் எவ்வளவுக்கு எவ்வளவு வாய்ப்புகளை அதிகரித்து வைக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு ஜனநாயகத்திற்கு உரம் அளித்ததாக இருக்கும். உளுத்துப் போன கொள்கையை இன்றைக்கு எதிர்க் கட்சி அங்கத்தினர் பேசுவது மிகவும் வருந்தத் தக்கதாக இருக்கிறது. இந்தகைய புரட்சிகரமான கருத்துக்களை இன்னும் சில சட்டங்களில் புகுத்தாமலிருக்கிறோம். அங்கேயும் புகுத்திவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். யாராயிருந்தாலும் இரண்டு முறைக்கு மேல் பதவியில் இருக்கக் கூடாது என்ற நிலையில் இந்த மசோதா அமைந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். அமெரிக்க நாட்டு ஜனாதிபதியைக் கூட இரண்டு முறைக்கு மேல் தேர்ந்தெடுப்பது கூடாது என்ற முறை இருந்து வருகிறது. அமெரிக்க நாட்டில் அறிவாளிகளுக்குப் பஞ்சமா? தலைவருக்கு ஆள் இல்லாமல் நாடு தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கிறதா?

SRI V. KRISHNAMOORTHY : On a point of information, Sir.

MR. DEPUTY SPEAKER : The hon. Member is not yielding.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் உறுப்பினர் குறிப்பிடுகிற கருத்துப்படி இரண்டு முறைக்கு மேலே தேர்தலுக்கு அவர்கள் நிற்காமலிருப்பாரா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு.)

திருமதி டி. என். அனந்தநாயகி : என்னைக் காட்டிலும் திறமையானவர்கள் தேர்தலுக்கு நின்றால், தேர்தலில் நிற்காமல் இருக்க நான் தயாராயிருக்கிறேன். ஆனால், மோசமானவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை கூடாது. (சிரிப்பு)

இப்படிப்பட்ட பதவிகளையெல்லாம் பார்க்கும்போது, மற்றவர்களுக்கும் அதிகமாக வாய்ப்புக் கொடுத்து, அவர்களுடைய அறிவையும், திறமையையும் அளிக்க வாய்ப்புத் தரவேண்டுமே தவிர, ஒருவரே சாகும் வரையிலும் இருந்துகொண்டு, கண் தெரியாவிட்டாலும் காது கேட்காவிட்டாலும் பரவாயில்லை, காரியம் நடந்துகொண்டு போகட்டும் என்ற நிலைமை இருந்தால், அது ஜனநாயக வளர்ச்சிக்கு நல்லதல்ல; வருங்கால சந்ததிகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்க முடியாது. இந்த மசோதாவில் புரட்சிகரமான அம்சத்தைப் புகுத்திய முதல் அமைச்சரை நாம் உண்மையிலேயே வாழ்த்த வேண்டும், வரவேற்க வேண்டும். இதுபோன்று இன்னும் பல சட்டங்களிலும் அந்தக் கருத்தைப் புகுத்தியாக வேண்டும்; அப்படித் திருத்தினால் சென்னை சட்டசபை ஏற்கும் என்று நான் நம்புகின்றேன். இந்தப் புரட்சிகரமான கருத்தைக் கொண்டு

[திருமதி டி. என். அனந்தநாயகி] [4th November 1965

வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும். இன்னும் மேன் மேலும் பல அறிஞர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்படியிருந்தால்தான் இன்னும் பல பேர்களுடைய ஆற்றலை இந்த நாடு பெற ஒரு வாய்ப்பு இருக்கும் என்று நான் கூற ஆசைப்படுகிறேன்.

12-வது ஷரத்தில் செனட்டுக்கு யார் தலைமை வகிப்பது என்பது பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்களும் குறிப்பிட்டார்கள். சின்டிகேட்டுக்கோ, செனட்டுக்கோ, கமிட்டிகளுக்கோ, எல்லாவற்றிற்கும் வைஸ்-சான்ஸலரே தலைவராக இருக்க வேண்டும் என்று போட்டிருப்பது நல்லதா என்று அவர்கள் கேட்டார்கள். அவருடைய இந்தக் கருத்தை நானும் ஆதரிக்கக் கூடிய நிலையில்தான் இருக்கிறேன். எல்லாவற்றிற்குமே வைஸ்-சான்ஸலரே தலைமை வகிப்பதென்றால், மற்றவர்கள் மனம் விட்டுக் கருத்துக்களை எடுத்துக்கூற முடியாது. இதை ஒரு நேரத்தில் செனட்டிலே கூட நான் கண்டேன். பள்ளிக்கூடத்தில் உள்ளது போல். கைகட்டி வாய் பொத்திக்கொண்டு இருப்பதைப் பார்க்கும்போது, அதிகமான பயம் இருப்பது போன்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகையால், மனம் விட்டு தங்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஒரு இடம் இருக்க வேண்டும். அதிகமான அதிகாரங்களை செனட்டுக்கும், சின்டிகேட்டுக்கும் கொடுத்திருக்கிறோம். இப்படி வருகிற பல்கலைக்கழக நடைமுறை வளர்ச்சி அத்தனையும் அவர்கள் கையில் இருக்கும்போது, மனதை விட்டு எடுத்துச் சொல்லக்கூடிய சூழ்நிலை இருந்தால்தான் வரவேற்கத்தக்கதாக இருக்கும். ஆக, வைஸ்-சான்ஸலரே எல்லாவற்றிற்கும் தலைமை வகிப்பது என்பது நல்லதல்ல. என்னதான் இருந்தாலும், மனிதர்கள் மனிதர்கள்தான். நாம் ஏன் வம்புக்கு ஆளாக வேண்டும் என்று நல்ல கருத்தைச் சொல்லக்கூடத் தயங்கத்தான் செய்கிறார்கள். ஆகையால், எந்தக் கூட்டத்திற்கு யார் தலைமை வகிப்பது என்று வரையறுப்பது சாலச் சிறந்ததாகும். அப்பொழுதுதான் மனதைவிட்டுப் பேசி கருத்துக்களை விவாதிக்க வாய்ப்பு இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன்.

அடுத்து, ஃபாகல்ட்டீஸ் ஆஃப் இண்டியன் மெடிஸின்ஸையும் 26-வது ஷரத்திலே புகுத்தியிருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்திலே அப்படிப்பட்ட ஃபாகல்டி ஆப் இண்டியன் மெடிஸின்ஸ் இல்லையென்று நினைக்கிறேன். மதுரைப் பல்கலைக்கழகத்தில் புகுத்தியிருப்பது நல்லது. நம்மைப் பார்த்து பிற மாநிலங்கள் இந்திய, சித்த, ஆயுர்வேத, யுனானி கல்லூரிகளை ஆரம்பித்து, அவர்கள் நம்மைக் காட்டிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நாம் பின்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம். நம்மைப் பார்த்து மராட்டிய மாநிலமும் இன்னும் பல மாநிலங்களும் இந்தத் துறையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இந்திய வைத்தியக் கல்லூரிகள் அங்கெல்லாம் அதிகரித்துக் கொண்டு போவதைப் பார்க்கிறோம். சென்னை மாநிலத்தில் கீழ்ப்பாக்கத்தில் இருந்த ஒரு கல்லூரிக்கு மூடுவிழா நடந்து இப்பொழுதுதான் குற்றாலத்தில்



4th November 1965] [திருமதி டி. என். அனந்தநாயகி]

ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படியே போனால் எந்த அளவுக்கு வளர்ச்சி அடையும் என்று தெரியவில்லை. இனி அதிகமான இந்திய வைத்தியக் கல்லூரிகளை இந்த மாநிலத்தில் திறக்க வகை செய்ய வேண்டும். சித்த, ஆயுர்வேத, யுனானி வைத்திய முறைகளைக் குறித்து இன்னும் அதிகமான ஆராய்ச்சிகளுக்கு இடம் தரவேண்டும். இந்திய வைத்திய முறைகளின் ஆராய்ச்சிக்கு மத்திய அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட சில சலுகைகளைக் கூட நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை நான் வேதனையோடு சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால், ஆராய்ச்சித் துறைக்கு மத்திய அரசாங்கம் அளிக்கும் உதவிகளை நாம் பயன்படுத்திக் கொள்ளும் நிலை வரவேண்டும். அந்த வகையில், மதுரைப் பல்கலைக்கழகத்தில் இதற்கென்று ஒரு ஃபெகல்டி ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்வது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் இதுவரை இல்லையென்றாலும் இனிமேலாவது ஆரம்பிக்க முயற்சி எடுக்க வேண்டும். அப்படி ஆரம்பித்தால்தான் பல ஆராய்ச்சிகளைச் செய்ய முடியும். நம்முடைய மூலிகைகளை மேலை நாடுகளுக்கு எடுத்துச் சென்று அங்கே அவர்கள் மருந்துகள் தயார் செய்து இங்கே அனுப்புகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நமக்கே வெட்கமாக இருக்கிறது. நம் மூலிகைகளை நாம் ஆராய்ச்சியின் மூலம் பயன்படுத்த வேண்டும். மேலை நாடுகளில் நம் மூலிகைகளை வைத்துப் பெரும் பெரும் நோய்களையெல்லாம் தீர்க்கும் மருந்துகளைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் எந்த அளவிற்குப் பின்தங்கியிருக்கிறோம், எந்த அளவிற்கு நம்முடைய நாட்டு வைத்தியத்திற்குப் பாதகமாக நடந்துகொண்டிருக்கிறோம், துரோகம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகையால், இன்னும் அதிகமாக மதுரைப் பல்கலைக்கழகம் இத்துறைக்கு ஆதரவு கொடுத்து. புதிய புதிய ஆராய்ச்சிகளை செய்து, புது புது மருந்துகளை இந்தியாவிலேயே கண்டுபிடித்து உலகப் புகழ் பெற முயலவேண்டுமென்பது என் ஆசை. அந்தப் பணியைச் சென்னைப் பல்கலைக்கழகமும் ஏற்றுக்கொள்வது சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்.

க்ளாஸ் பதினைந்தில் பல்கலைக் கழகத்திற்கு 50,000 ரூபாய் நன்கொடை அளிப்பவர்களை லைஃப் மெம்பராகச் சேர்த்துக்கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. 50,000 ரூபாய் என்பதை ஒரு லட்சம் என்று உயர்த்தி அதிகமாக நன்கொடை அளிப்பவர்களை லைஃப் மெம்பர்களாகப் போட்டுக்கொள்வதே நலம். கல்வித் துறைக்குச் சேவை செய்தவர்களில் இருந்து சான்சலர் மூன்று பேர்களை லைஃப் மெம்பராக நியமனம் செய்யலாம் என்கிற பிரிவுக்கே அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். கல்வித் துறையில் சேவை செய்கின்றவர்கள் செனட்டுக்கோ, சின்டிகேட்டுக்கோ, அகடமிக் கவுன்சிலுக்கோ வரப்போகிறார்கள். ஆகவே, தனியாக வேண்டியது இல்லை என்று கருதுகிறேன்.

அதற்குப் பிறகு செக்ஷன் 49-இல் ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் க்ராஜ்வேட்ஸ் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே மதுரைப் பல்கலைக் கழகத்தின் வட்டாரத்தில் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதோடு

'(i) has been for at least three years a graduate of any University in the territory of India; or

(ii) is a registered graduate of any University in the territory of India . . .'

என்று போட்டிருக்கிறார்கள். அந்த இரண்டு பாகுபாடு இல்லாமல் வேறு எந்த யூனிவர்சிட்டியைச் சேர்ந்தவராக இருந்தாலும் மதுரை பல்கலைக் கழகத்தின் எல்லைக்குள் வசிப்பவர்கள் எல்லோரும் ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாம் என்று வைத்தால் அதிகமான பேர்கள் பங்கெடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கும். மேலும் செனட் வருடத்திற்கு இரண்டு முறை கூடுவது என்பது அவ்வளவு நன்றாக இருக்காது. அதை அதிகப்படுத்த வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

சின்டிகேட் என்று வரும்போது எந்த எந்தப் பரீட்சைகளை அவர்கள் அங்கீகரிக்கிறார்களோ அந்தப் பரீட்சையில் தேர்ச்சியுள்ளவர்களைத்தான் மேல்படிப்புக்கு அனுமதிப்பது என்று இருக்கிறது. இன்று சென்னை பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள் நடத்துகிற பரீட்சைகளை அங்கீகரிக்கவில்லை. அதன் காரணமாக அங்கே படித்தவர்கள் இங்கே மேல்படிப்புக்கு வரும்போது கஷ்டப்படுகிறார்கள். அகில இந்தியாவில் எந்த இடத்தில் இங்கே உள்ள கல்லூரி பட்டப் படிப்புக்கு சமமான பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் போதும் அதை அப்படியே அங்கீகரித்து இங்கே மேற்கொண்டு தொடர்ந்து படிக்க வசதி ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சிலர் தங்கள் வேலையின் காரணமாக அல்லது இங்கே இடம் கிடைக்காத காரணமாக வேறு வேறு மாநிலங்களில் நடத்தும் கல்லூரிப் பரீட்சைக்குப் போக வேண்டிய நிலையில் உள்ளார்கள். இவற்றை எல்லாம் மனதில் கொண்டு மேல் படிப்புக்கு எவ்வித தடங்கல்களும் இல்லாமல் இந்தப் பல்கலைக்கழக பரீட்சைக்கு சமமான பரீட்சைகள் எல்லாவற்றையும் அங்கீகரிக்க வகை செய்ய வேண்டும்.

மேலும் போஸ்ட் க்ராஜ்வேட் கோர்சுக்கு சிலபல சட்ட திட்டங்களை வைத்திருக்கிறார்கள். பர்ஸ்ட் க்ளாஸ், செகண்ட் க்ளாசில் பாஸ் செய்தவர்கள் மட்டும் தான் அனுமதிக்கப்படுகிறார்கள். இடம் காலியாக இருந்தாலும் கூட 3-வது வகுப்பில் பாஸ் செய்துள்ளவர்களைச் சேர்ப்பது கிடையாது. பரீட்சைத் திறமையை மட்டும் கவனிக்கக் கூடாது. நன்றாகப் படிக்கக் கூடிய மாணவராக இருக்கலாம். பரீட்சை அன்று ஜுரவேதனைக்கு ஆளாகியிருக்கலாம் அல்லது குடும்பத் தொல்லைக்கு அன்று ஆளாகியிருக்கலாம். பர்ஸ்ட் க்ளாஸ், செகண்டு க்ளாஸ் மாணவர்களுக்குக் கொடுக்காமல் இவர்களுக்கு சீட் கொடுக்கவேண்டுமென்று சொல்ல வரவில்லை,



அந்த இனத்தில் ஆள் இல்லாமையினால் இடத்தை அப்படியே காலியாக விட்டு வைக்கிறபோது—மூன்றாவது வகுப்பில் பாஸ் செய்தவர்களாக இருந்தாலும் படிக்க முன் வருகிறவர்களுக்கு இடம் அளிக்க வேண்டும். அப்போதுதான் நல்ல ஆராய்ச்சித் துறை நிபுணர்களை தேசத்தின் சொத்தாக நாம் தயார் செய்ய முடியும். அந்த வகையில் பொறுக்குக் கமிட்டியினரால் நன்கு பரிசீலிக்கப்பட்டு சபை முன் வந்துள்ள இந்த மசோதாவில் மேலும் தேவைப்படுகிற சீர்திருத்தங்களைச் செய்து பிறருக்கும் வழி காட்டும் மசோதாவாக ஆக்கவேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர்கள் பாராட்டியது போல் பொறுக்குக் கமிட்டி இந்த மசோதாவில் சில முக்கியமான திருத்தங்களைச் செய்திருக்கிறது. ஆனால், முதலில் இன்று விவாதத்தை துவங்கிய திரு. இராம அரங்கண்ணல் அவர்கள் சில குறைபாடுகளை எடுத்துக் கூறினார்கள். வேறு சில உறுப்பினர்களும் இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவற்றில் வைஸ்-சான்சலர் நியமனத்தைப் பற்றியது முக்கியமானது. இதிலே பல்கலைக்கழகம் போன்ற ஸ்தாபனங்கள் கூடிய வரைக்கும் தேர்தல்களைக் குறைக்க வேண்டுமென்பது அடிப்படையான கருத்து. செலக்ட் கமிட்டியும் உணர்ந்து ஒப்புக் கொண்ட கருத்து. அந்த அடிப்படையில்தான் வைஸ்-சான்சலரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு பானலைத் தயாரிக்கும் பொறுப்பை ஒரு கமிட்டியிடம் விடுவது என்றும், அந்தக் கமிட்டியில் மூன்று பேர்களை அங்கத்தினராக நியமனம் செய்வது என்றும், அந்த மூன்று பேர்களில் ஒருவரை சான்சலரே நியமனம் செய்வது, மற்றொருவரை செனட் நியமனம் செய்வது, இன்னொருவரை சிண்டிகேட் நியமனம் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டியில் உள்ள மூன்று பேர்களில் யார் பெயரும் பானலில் சேர்க்கப்படமாட்டாது. இந்தக் கமிட்டி சிபார்சு செய்துள்ள பானலில் உள்ள 3 பேர்களில் ஒருவரை சான்சலர் வைஸ்-சான்சலராக நியமனம் செய்வது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவரே நியமனம் செய்து அவரே வைஸ்-சான்சலரைத் தேர்ந்தெடுப்பது என்பது இல்லை. சான்சலர் வைஸ்-சான்சலரைப் பொறுக்கும் குழுவுக்கு ஒரு அங்கத்தினரைத்தான் நியமனம் செய்கிறார். இவரும் மற்றுமுள்ள இரண்டு மெம்பர்களும் சேர்ந்து வைஸ்-சான்சலர் போஸ்டுக்கு கொடுக்கிற பானலில் இருந்துதான் சான்சலர் வைஸ்-சான்சலரைப் பொறுக்க வேண்டும். பல மசோதாக்களை நன்கு பரிசிலனை செய்துதான், மத்திய அரசாங்கத்தின் யூனிவர்சிட்டி கிரான்ட்ஸ் கமிஷன் தயாரித்துக் கொடுத்த ஒரு மாடல் மசோதாவையும் நன்கு பரிசீலனை செய்த பிறகுதான் பொறுக்குக் கமிட்டியினர் இந்த முடிவுக்கு வந்தார்கள். இதை மாற்றுவது சரியல்ல என்று நினைக்கிறேன். இதை அப்படியே கனம் அங்கத்தினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

சிண்டிகேட்டுக்கு வைஸ்-சான்சலர் தலைமை வகிப்பது தவறு, சிண்டிகேட் உறுப்பினர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப் பட்டது. வைஸ்-சான்சலர் பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரி யாக இருக்கிறார். சான்சலர் இருக்கிறார் என்றாலும் அந்தப் பல் கலைக்கழகத்திற்கே உண்மையில் தலைவராக இருப்பவர் வைஸ்-சான்சலர்தான். அப்படியிருக்க செனட்டுக்கு வேறு ஒரு தலை வரைத் தேர்ந்தெடுப்பது என்றால் செனட் வேறு, வைஸ்-சான்சலர் வேறு, சிண்டிகேட் வேறு—அடிக்கடி அவர்களுக்குள் முரண்பாடு இருக்கலாம் என்று கருதுவது போலத் தோன்றிற்று. வைஸ்-சான்சலர் தலைமை வகிக்கும்போது பலர் தங்கள் கருத்தை வெளிப் படையாகச் சொல்ல முடியாத நிலை இருக்கிறது என்றார்கள். இது கல்வி சம்பந்தமான ஒரு ஸ்தாபனம். இதிலே யாரும் அரசி யலைப் பற்றிப் பேசப்போவதில்லை. கல்வி முன்னேற்றம் பற்றித் தான் பேசப்போகிறார்கள். இதுபற்றி வைஸ்-சான்சலர் முன்னிலை யில் தங்கள் கருத்தை வெளிப்படையாக எடுத்துச் சொல்ல பயப் படுகிறவர்கள் கல்லூரி முதல்வர்களாக இருக்கவே தகுதி இல்லா தவர்கள் என்பேன். ஆனால், அவர்கள் அப்படி இல்லை. வைஸ்-சான்சலர்களும் ஒரு எதேச்சாதிகாரிபோல தம் கருத்துக்கு மாறு பட்ட கருத்தை வெளியிடுபவர்களை விரும்புவதில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அவர்கள் எதேச்சாதிகாரத் தன் மையோடு நடந்து கொள்வார்கள் என்று நான் நம்பவில்லை. ஆகவே தான் செனட் கூட்டத்திற்கு தனியாகத் தலைவரைத் தேர்ந்தெடுத் துக்கொள்வது என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. செனட் சபைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பது பற்றியும், எப்படித் தேர்ந்தெடுப்பது என்பதுபற்றியும் செலக்ட் கமிட்டியிலே நீண்ட விவாதம் நடைபெற்றது. நீண்ட விவாதம் நடைபெற்றதற்குப் பிறகு வேறு ஒரு மாறுதலும் செய்யாமல், பொதுவாக "தேர்ந்தெடுப்பது" என்றுதான் முடிவு செய்யப் பட்டது. ஆகவே, அதையும் மேலும் மாற்றுவது சரியல்ல என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, வியாபாரிகள், தொழிலதிபர்கள், டாக்டர்கள், லாயர்கள் இவர்கள் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று சிலர் கூறினார்கள். இதையும் செலக்ட் கமிட்டி ஆராய்ந்து, பல்கலைக்கழகத்தைச் சார்ந்த செனட் சபைக்கு டாக் டர்கள், லாயர்கள் இவர்களுடைய பிரதிநிதித்துவம் அவசியமில்லை என்று முடிவு செய்தது. ஸ்தல ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் டாக்டர்கள், லாயர்கள் இவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். அசல் மசோதாவில் இதற்கு வழி இல்லாவிட் டாலும்கூட, பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சி மன்றங்கள் இவைகளில் டாக்டர்கள், லாயர்கள் இவர்களுக்குப் பிரதிநிதித் துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதேமாதிரி பல்கலைக் கழகத்தைச் சார்ந்த செனட் சபைக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பது சரியல்ல என்று கருதித்தான் அது அவசியமில்லை என்று செலக்ட் கமிட்டி முடிவு செய்திருக்கிறது.



N65·32·2

கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் சொன்னார்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தின் சொத்திலிருந்து ஒரு பகுதியை—அதாவது மூன்றில் ஒரு பங்கை மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றவேண்டும் என்று. அப்படியெல்லாம் வரையறை செய்வது சரியாக வராது. ஆகவே, இதைப்பற்றி அரசாங்கம் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் கலந்தாலோசித்து ஒரு ஏற்பாடு செய்து கொள்வது என்று முடிவு செய்திருப்பதுதான் பொருத்தமானது என்று நினைக்கிறேன்.

கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறினார்கள், ரிஜிஸ்டிரேஷன் எதற்காக, அவசியமில்லை என்று, ஆனால் நாம் இப்பொழுது முடிவு செய்திருக்கிற ஏற்பாட்டின்படி, 'மதுரைப் பல்கலைக்கழக கிராஜுவேட்ஸ் என்றால் மதுரைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கிராஜுவேட்ஸ் மாத்திரம் அல்ல, மதுரைப் பல்கலைக்கழகத்தின் எல்லைக்குள் உள்ளவர்கள்—அவர்கள் ஆக்ஸ்ஃபோர்டு யூனிவர்சிட்டியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, பெனாரஸ் யூனிவர்சிட்டியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—எல்லோருக்கும் அந்த உரிமை உண்டு என்றுதான் முடிவு செய் திருக்கிறோம். ஆகவேதான், அந்த முறையிலே எல்லோரும் அப்ளி கேஷன் போட்டு ரிஜிஸ்டிரேஷன் செய்துகொண்டால்தான் ஒழுங் காக இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

6492

மற்றபடி இன்னும் சில கருத்துக்களை அங்கத்தினர்கள் தெரிவித் தார்கள். பல்கலைக்கழகம் அமைந்த பிறகு அந்தக் கருத்துக்களை யெல்லாம் பரிசீலனை செய்துகொள்ளலாம். மதுரைப் பல்கலைக் கழகம் சிறந்ததொரு பல்கலைக் கழகமாக விளங்குமென்று நான் நம்புகிறேன். இந்தப் பல்கலைக் கழகம் போதாது, வேறு ஒரு பல் கலைக் கழகமும் வேண்டுமென்று கனம் உறுப்பினர்கள் கூறினார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழகங்கள் ரொம்பக் குறைவுதான். மற்ற மாநிலங்களிலே அதிகமாக இருக்கின்றன. எனினும், இப்பொழுது நாம் மதுரைப் பல்கலைக் கழகத்தை அமைத் தவுடன், உடனடியாக வேறு ஒரு பல்கலைக் கழகம் வருமென்று எதிர்பார்ப்பதில்லை. ஒரு வாரத்திற்கு முன்பு நடைபெற்ற சென்ட்ரல் அட்வைசரி போர்டு ஆப் எஜுகேஷன் கூட்டத்திலே பல விஷயங்கள் விவாதிக்கப்பட்டபொழுது, 'நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வேறு ஒரு பல்கலைக் கழகம் வைக்க முடியாது' என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இருக்கிற பல்கலைக் கழகங் களை சீராக அமைக்கவேண்டுமே தவிர, புதிதாக பல்கலைக் கழகங் கள் அமைக்க முடியாது என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால், மதுரை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, இது மூன்று வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கப்பட்டுவிட்டது. இந்தப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவதற்கு உதவிய சென்னைப் பல்கலைக் கழகத்தை நாம் பாராட்ட வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத் தார் ஏற்கனவே மதுரையிலே ஒரு யூனிவர்சிட்டி சென்டரை அமைத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திலே உள்ளவர்கள், யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷனைச் சேர்ந்தவர்கள், சென்ட்ரல்

அட்வைசரி போர்டிலே உள்ளவர்கள் எல்லோரும் "சிரிய முறையிலே யூனிவர்சிட்டி சென்டரை அமைத்து, அதை விருத்தி செய்த அதற்குப் பின்னாலேதான் அது பல்கலைக் கழகமாக வரவேண்டும்" என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். மதுரைப் பல்கலைக் கழகம் சம்பந்தமாக, இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட உடனேயே கூடிய சீக்கிரத்தில் இந்தப் பல்கலைக் கழகம் இயங்கலாமென்ற ஒரு நம்பிக்கை நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர்கள் எல்லோரும் இதை வரவேற்கின்ற வகையில், அவர்கள் தெரிவித்த கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், இப்பொழுது அமைக்கப்பட இருக்கிற மதுரைப் பல்கலைக்கழகம் உயர்ந்தவொரு பல்கலைக் கழகமாக விளங்குமென்று நானும் நம்புகிறேன். இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற பிரேரணையை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணி நான் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965), as amended by the Joint Select Committee, be taken into consideration.'

The motion was put and carried.

## V.—GOVERNMENT MOTION—*cont.*

### (2) CHANGE IN THE ORDER OF BUSINESS

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That under rule 21 (3) of the Assembly Rules, item (5) in the Agenda, for the day, viz. The Madras Sales of Motor Sprit Taxation (Amendment) Bill, 1965 (L. A. Bill No. 18 of 1965) be taken up before the clause-by-clause consideration of the Madurai University Bill, 1965.'

The motion was put and carried.

## III.—GOVERNMENT BILLS—*cont.*

### (5) THE MADRAS SALES OF MOTOR SPIRIT TAXATION (AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 18 OF 1965.)

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg to move—

'That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965 [a] (L.A. Bill No. 18 of 1965) be taken into consideration.'

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா ஒரு சம்பிரதாயமான (ரொட்டீன்) மசோதாதான். பெரிய மாறுதல்கள் ஒன்றும் செய்யவில்லை. கோர்ட்டுகளிலே சொல்லப்பட்ட சில

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 31st July 1965.





தீர்ப்புகளைச் சட்டத்திலே அமல் நடத்துவதற்காகச் செய்யப்படுகின்ற மாறுதல்கள்தான் இவைகள் எல்லாம். குறிப்பாக நம்முடைய மோட்டார் ஸ்பிரிட் டாக்சேஷன் சட்டத்திலே மூன்றாவது பிரிவிலே "ஹோல்சேலரோ, ரீடெய்லரோ தன்னுடைய உபயோகத்திற்காகக்கூட டீஸல், மற்ற எண்ணெய்களை விற்றால் அதற்கும் வரி கொடுக்கவேண்டும்" என்று போட்டிருந்தோம். ஆனால் சுப்ரீம் கோர்ட்டிலே, கோபால் ஷுகர் இண்டஸ்ட்ரீஸ் கேஸிலே, "ஹோல்சேலரோ, ரீடெய்லரோ, தன்னுடைய உபயோகத்திற்காக டீஸல், மற்ற எண்ணெய்களை விற்றால் அதற்கு வரி விதிக்கக் கூடாது" என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி, நாமும் நம்முடைய சட்டத்திலே இந்த மாறுதலைச் செய்கிறோம். "ஹோல்சேலரோ, ரீடெய்லரோ தன்னுடைய உபயோகத்திற்காக டீஸல், மற்ற எண்ணெய்களை விற்றுக்கொண்டால் அதற்கு வரி கிடையாது" என்று மாறுதல் செய்யப் போகிறோம்.

இரண்டாவதாக, நம்முடைய சட்டத்தில் வரி விகிதத்திற்கு மேல் வரி வசூல் செய்தால்—அதாவது 3 சதவிகிதம் வரி போடப்பட்டு, 5 சதவிகிதம் வரி வசூல் செய்தால்—அல்லது, வரியில்லாத போது வரி வசூல் செய்தால், அதைச் சர்க்காருக்குக் கொடுத்து விடவேண்டுமென்று போட்டிருந்தோம். ஆனால், சுப்ரீம் கோர்ட்டிலே, அப்துல் காதர் கேசிலே "வரியில்லாத போது வரி வசூல் செய்தாலும், வரி விதித்த அளவுக்குமேல் வரி வசூல்செய்தாலும், சர்க்காருக்கு அதைக் கொடுக்கவேண்டுமென்று சொல்ல அதிகாரம் கிடையாது" என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். சர்க்கார் இவ்வளவு வரியென்று போட்டுவிட்டார்கள், ஆகவே அதைத்தான் அவர்கள் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கூறிவிட்டார்கள்.

மூன்றாவது, ஒவ்வொரு ரீடெய்லரும், ஹோல்சேலரும் ரிஜிஸ்டர் செய்ய வேண்டும், அதற்காகக் கட்டணம் கட்ட வேண்டுமென்று விதி ஏற்படுத்தி இருக்கிறோம். அந்த விதியை இப்போது சட்டபூர்வமானதாக ஆக்கி அந்தவிதமான விதிகள் போட சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது என்று திருத்தி விளக்கமாகச் செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, நம்முடைய சட்டத்திலே ஹோல்சேலர்ஸ் அல்லது ரீடெய்லர்ஸ் பொது டிரான்ஸ்போர்ட் நடத்தக்கூடாது என்று இருந்தது. இந்த எண்ணெய் வியாபாரம் செய்தால் லாரியோ, பஸ்ஸோ ஓட்டக் கூடாது என்று சட்டம் இருந்தது. சொந்த உபயோகத்திற்கு மண்ணெண்ணெய்க்கு வரி கிடையாது என்ற நிலையில் இவர்கள் பஸ், லாரி ஓட்டினால் சர்க்காருக்கு தம்பிடி கூட வரி வராது. இப்போது ஹோல்சேலர்சிடமிருந்து ஒரு முனை வரியாக வாங்கி விடுகிறோம். ஆகவே, இனிமேல் ரீடெய்லர்ஸ் பஸ் ஓட்டக் கூடாது, லாரி ஓட்டக் கூடாது என்ற தடை இல்லை. அவர்கள் வேண்டுமானால் பப்ளிக் டிரான்ஸ்போர்ட் நடத்தலாம் என்பதற்கான அதிகாரத்தைக் கொடுத்து விட்டோம். ஹோல்சேலர்ஸ், இம்ப்போர்ட்டர், ரீடெய்லர் எல்லோரும் ரிட்டர்ன்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [4th November 1965

சப்மிட் செய்யவேண்டுமென்று போட்டிருந்தோம். இனி டீடெய் லரிடமிருந்து வரி வசூல் செய்யாத காரணத்தால், அவர்கள் வரிக் கணக்குக் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால், கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டுமென்று திருத்தியிருக்கிறோம். இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 18 of 1965) be taken into consideration."

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே. இந்த மசோதாவில் எதிர்ப்பதற்கு ஒன்றுமில்லை. இருப்பினும் சில யோசனைகளைக் கூற விரும்புகிறேன். ஹோல் சேலர்ஸ் அல்லது இம்போர்ட்டர்ஸ் சர்க்கார் நிர்ணயித்திருக்கக் கூடிய விகிதத்திற்கு அதிகமாக வசூலித்தால் அதை அரசாங்கம் எடுத்துக் கொள்ள அதிகாரம் இல்லையென்று சுப்ரீம் கோர்ட் தெரிவித்து விட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுப்ரீம்கோர்ட் மனப்பான்மைப்படி 'கான்பிஸ்கேஷன்' ஆக இருந்திருக்கும். அதனால் வேண்டாமென்று கூறியிருப்பார்கள். சர்க்கார் நிர்ணயித்த விகிதத்திற்கு மேல் வரி வசூலிப்பது குற்றம். அதைத் தண்டிக்க சர்க்காருக்கு உரிமை உண்டு. அந்தமாதிரிச் செய்தால் தண்டனையைக் கடுமையான அளவுக்குக் கொடுக்கும் படியாகச் செய்து அதற்குரிய திருத்தம் கொண்டு வந்திருந்தால் கூட நலமாக இருந்திருக்கும். உபயோகப்படுத்துகிறவர் களிடத்தில் இருந்து வசூலிக்கிற தொகை ஒன்று அரசாங்கத் திற்குச் சேரவேண்டும் அல்லது உபயோகப்படுத்துகிறவர்களுக்கு அந்தச் சலுகைக் கிடைக்க வேண்டும். டீடெய்லர்கள் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். விற்பனைக்குக் கணக்கு வைப்பதோடு கூட ஹோல்சேலரிடத்தில் இருந்து வாங்கும்போது என்ன வாங்குகிறார்கள் என்பதையும் தெரிந்துக் கொள்ளும் வகையில் பாரம் பிரிஸ்கிரைப் செய்யவேண்டும். டீசல் எண்ணெயோடு மண்ணெண்ணெயைக் கலந்து லாரி, பஸ் ஓட்டி னார்கள் என்ற புகார் வந்தது எல்லோருக்கும் தெரியும். பஸ் ஆப்பரேட்டர்சும், லாரி ஓனர்சும் அதனால் எஞ்சின் கொஞ்சம் பழுதடையும் என்று தெரிந்திருந்தாலும் மண்ணெண்ணெய் உபயோகிப்பதால் லாபம் இருக்கிறது என்று நினைத்து அவ்வாறு செய்து வந்தார்கள். இப்போதுள்ள நிலையில் நாம் ஒரு எஞ்சின் எவ்வளவு அதிக நாட்கள் உழைக்க வேண்டுமென்பதிலே கவனம் செலுத்த வேண்டும். ஆகவே, அவ்வாறு உபயோகிப்பது சரி யல்ல. ஆனால் இப்போதுள்ள நிலை டீசல் எண்ணெயுடன் மண்ணெண்ணெயைக் கலந்து 'பங்க்' கிலேயே விற்கிறார்கள். முன்பு மண்ணெண்ணெயைக் கலந்து போட்டதால் அந்த லாபம் பஸ் ஆப்பரேட்டர்சுக்கும், லாரி ஓனர்சுக்கும் கிடைத்து வந்தது, ஆனால் இப்போது அது எண்ணெய் வியாபாரம் செய்கிறவர்



4th November 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

களுக்குப் போகிறது. இதையெல்லாம் தடுப்பதற்குரிய முறையில் பாரங்களைத் தயார் செய்யவேண்டும். மண்ணெண்ணெய், டீசல் எண்ணெய் ஆகியவற்றை விநியோகிக்கும் பொறுப்பையே சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மத்திய அரசாங்கத் திற்குச் சிபாரிசு செய்யவேண்டுமென்று கனம் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதனால் கிடைக்கக் கூடிய லாபம் அரசாங்கத்திற்கு வரும். இதைப்பற்றி மத்திய அரசாங்கத் தினிடம் எடுத்துக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் தொழிற்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதாவின் மீது என்னுடைய கருத்தைப் புலப்படுத்த முன் வருகிறேன். வரி விகித நிலையிலே, அதை வசூல் பண்ணுவதில் ஏற்படுகிற தவறுகள், பிழைகள் இருந்தாலும் சர்க்கார் பெற முடியாத நிலை சுப்ரீம் கோர்ட் முதலான கோர்டுகளின் தீர்ப்பினாலே பாதிக்கப்பட்டிருக்கும் உண்மையைக் குறிப்பிட்டார்கள். அதற்கு மாற்றாகத்தான் கனம் உறுப்பினர் கலியாணசுந்தரம் அவர்களும் தெரிவித்தார்கள். சர்க்காருடைய நியதிக்கு அல்லது விதிக்கு அதிகமாகவோ அல்லது விதி இல்லாதவற்றுக்குப் புதியதாகவோ வரி வாங்குவதைக் கடுமையான தண்டனைக்கு உட்படுத்துவது செம்மையானதாக இருக்கும் என்பதை நான் சொல்ல முன் வருகிறேன். இது ஒரு பிழையாக மட்டும் கருதப்படக் கூடாது; சர்க்கார் விதிக்காத ஒரு வரியை, வரி என்று சொல்லி வசூலிக்க எந்த வணிக நிறுவனத்திற்கும் அல்லது தனி நபருக்கும் உரிமை இருக்கப்படாது. அப்படிச் செய்வதைப் போன்ற ஒரு பெரிய குற்றம் மிகச் சிலதான் இருக்க முடியும் என்பதை மனத்திலே கொண்டு இந்தமாதிரியான வரி வசூலித்ததாக, அதிக வரி வசூலித்ததாகக் கிடைக்கிற தகவல்களின் மீது செம்மையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்தவர்களுக்குச் கடுமையான தண்டனை கிடைக்கும்படி செய்வதோடு, அவர்கள் இனி அந்த வணிகத்திற்கு உரியவர்கள் அல்ல என்றும் தடை செய்வது பொருத்தமாக இருக்கும். இத்தகைய ஊழல்களைச் செய்து கொண்டிருப்பவர்கள் மீது ஏதோ ஒரு தொகையை அபராதமாக மட்டும் போட்டுக் கொண்டு போவதால் அவர்கள் அந்த அபராதத்திற்கும் சேர்த்து சம்பாதிக்கும் நிலையைப் பிரத்தி யட்ச நிலையிலே காண்கிறோம். அதைக் கவனத்தில் கொண்டு தக்க வேறு முறையைக் கடைப்பிடித்து இந்தத் தவறுகள் நிகழாமல் தவிர்க்கப்பட வேண்டும். இப்படி அதிக வரி வசூல் செய்து அது அரசாங்கத்திற்கும் வருவதும் இல்லை, பயன்படுத்து கிறவர்களுக்கும் விலை குறைவதும் இல்லை; இடையிலுள்ளவர் கள் இந்தமாதிரி மோசடியின் பயனாக லாபத்தை அடைந்து கொண்டிருப்பது நியாயமாகாது. அதுவுமன்றி, கணக்குகள் வைப்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். விற்றதற்கு மட்டும் கணக்கு இருப்பது போதாது, வாங்கியதற்கும் கணக்கு இருக்க வேண்டும் என்று கனம் உறுப்பினர் கலியாணசுந்தரம் அவர்கள்

[திரு. சா. கணேசன்] [4th November 1965

குறிப்பிட்டார்கள். வாங்கியதற்கும் உரிய கணக்குகள் தக்க ஆதாரவுகளோடு, வவுச்சர், பில்கள் ஆகியவற்றோடு செம்மையான முறையிலே வைக்கப் பெற்றிருக்க வேண்டும்.

அதைப்போலவே விற்பனைக்குரிய கணக்குகள் செம்மையான முறையிலே பில்கள், கவுன்டர் ஃபாயில்ஸ் முதலியவை சேர்ந்த ஆதாரவுகளோடு கூட செம்மையான முறையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இதைக் கண்டிப்பாக அமல் நடத்த முழு முயற்சியையும் ஆட்சியில் உள்ளவர்களும், ஆங்காங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மேற்கொள்ளவேண்டும். இதுவரையில் ரீட்டெயிலர்ஸ் என்று சொல்வதில் எவனும் அடங்கி விடுவான். தலையில் கூடையில் வைத்து விற்கிறவன் முதல் டின்னில் அடைத்து பாரல்களாக விற்கிறவர்கள் வரை ரீட்டெயிலர்ஸ் என்பதில் அடங்கி விட முடியும். மிகச் சிறிய ரீட்டெயிலர்ஸை இந்தமாதிரி கணக்குகள் வைத்துக்கொள்ள நிர்ப்பந்தம் செய்வது சரியல்ல. அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு எல்லை, வரம்பு வகுத்து இத்தனை அளவிற்கு வியாபாரம் உள்ளவர்கள்தான் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டிய ரீட்டெயிலர்ஸ் என்ற நியதியை வகுத்து அதுமாதிரிச் செய்வதுவே பொருத்தமாக இருக்கும். இறுதியில் கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறிய ஆலோசனை பயன் தராது, தீமை விளைவிக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். எல்லாத் துறைகளையும் ஆட்சியே எடுத்துக் கொண்டு விடுவதில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன, எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் ஆட்சி பீடத்தில் இருக்கிறவர்கள் நன்றாக உணருவார்கள். இன்றும் கூட பல கம்பனிகள் இருப்பதனால்தான் ஏதோ கொஞ்சம் ஒரு கம்பனிக்கு ஒரு கம்பனி பார்த்தாவது நாலைந்து [illegible] வித்தியாசத்திலாவது மண்ணெண்ணெயை விற்கக் கூடிய நிலை வந்திருக்கிறது. (அமைச்சர் கனம் திரு. வெங்கட்டராமன் குறுக்கீடு.) ரிக்கார்ட் மூலம் சொல்கிறேன். பிரத்தியட்சமாக பில்லோடு காட்டுகிறேன். பில்லோடு நிரூபிக்க நான் தயாராயிருக்கிறேன். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுதான் சொல்கிறேன். இந்தியன் ஆயில் கம்பனியில் விலை 15 லிட்டர்கள் கொண்ட ஒரு டின் 9 ரூபாய். 16½ லிட்டர்கள் கொண்ட டின் பிற கம்பனிகளில் 9 ரூபாய். இரண்டுக்கும் பில் இருக்கிறது. என்ன ஐயா இப்படி என்று கேட்டால் அவர்களுக்கு வாகன்களில் வருகிறது, எங்களுக்கு லாரியில் வருகிறது, லாரியில் வருவதால் இப்படி விலை கூடி விடுகிறதே என்று சொன்னால் கம்பனியின் டாப்பில் உள்ளவர்கள் எல்லாவற்றையும் அடக்கமாகப் போட்டு விற்கச் சொல்லி எங்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படியிருக்கும்போது எல்லாவற்றையும் ஓரேயிடத்தில் குவியல் முறையில் கொண்டு வந்து விட்டால் சொன்னதைக் கொடுத்து, தருவதைப் பெறவேண்டிய நிலை அன்றி வேறு கிட்டாது என்பதை நான் சமர்ப்பித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தமாதிரியான நிலைகளை எல்லாம் மனத்தில் கொண்டு அதற்கேற்றபடி வாங்குபவர்களுக்கும் தீமை இல்லாமல், அரசாங்கமும் ஏமாற்றப்படாமல்,



4th November 1965] [திரு. சா. கணேசன்]

வாணிபமும் செவ்விய நிலையில் செல்லக் கூடிய முறையில் வேண்டிய விதிகள், சட்டங்கள், ஆணைகள் இவற்றைப் பிறப்பிக்க வேண்டுமென்று கூறி அமைகிறேன். ஜெய் ஹிந்த்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இதிலே விவாதம் சட்டத்தைப் பற்றியே இல்லை. மற்ற விஷயங்கள் பற்றி வெகு காரசாரமாக இருந்தது என்று சொல்லலாம். இந்தச் சட்டத்திற்கு எதிராக, மாறாக அதிகமாக வரி வசூல் செய்தால் இப்போது ரொம்பக் குறைவான ஒரு தண்டனைதான் போட்டிருக்கிறது. அடுத்த திருத்தம் கொண்டு வருகிறபோது இதைக் கடுமையாக மாற்றியமைக்கலாம் என்பது சர்க்கார் நோக்கம். அதைச் சர்க்கார் செய்யத் தயாராயிருக்கிறது. இரண்டாவதாக, இப்போது ரீட்டெயில் டீலர்சுக்கு வரி கிடையாது. மோட்டார் ஸ்பிரிட் டாக்சேஷன் ஆக்ட் பிரகாரம் அவர்கள் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் வாங்கியதற்கு, விற்றதற்கு கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும். ரிட்டர்ன்ஸ் கொடுக்க வேண்டாம் என்று திருத்தம் செய்திருக்கிறோம். விலையைப் பற்றி திரு. சா. கணேசன் அவர்கள் பேசினார்கள். இந்தியாவிலுள்ள எண்ணெய் கம்பனிகள் எல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு ஒரே விலையில், அவர்கள் நிர்ணயித்த விலைக்குத்தான் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியன் ஆயில் கம்பனி வந்த பிறகுதான் அவர்களுக்கு அதிக சலுகை வந்துவிடுமே என்று கொஞ்சம் மாற்றி, குறைக்கவும் முன் வந்தார்கள். போட்டி நிலைமை உண்டாகி போட்டி விலைக்கு மேலும் குறைந்து விற்றிருந்தார்கள் என்றால் அவர்களுக்குத் தகவல் கொடுத்தவர்கள் அறியாமையினால் கொடுத்திருப்பார்கள் என்றே நினைக்கிறேன். சர்க்கார் பல ஆண்டுகளாக எண்ணெய் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் பஸ்களுக்கு. ஒருவருக்கொருவர் குறைத்து கொடுக்க மாட்டார்கள். ஒன்றாகப் பேசி வைத்துக் கொண்டு ஒட்டுமொத்தமாக சேர்ந்து விலை பேசி ஒரு விலைக்குத்தான் விற்பார்கள். எண்ணெய்க்கு உலகத்திலேயே ஒரு மொனாப்பலி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எது விஷயமாக காம்பட்டிஷன் வேண்டும், வேண்டாம் என்பதைப் பற்றி நான் இப்போது சர்ச்சை செய்யாவிட்டாலும் இந்த எண்ணெய் விஷயத்தில் காம்பட்டிஷன் என்று சொல்வது நடக்கப்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று இந்தியன் ஆயில் கம்பனி வந்த பிறகு அவர்களுக்குள்ள வியாபாரம் போகக் கூடாது என்று எண்ணெய் கம்பனிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு சிறிது சலுகை காட்டலாமே தவிர இந்தியன் ஆயில் கம்பனி வாராதபோது ஒருவிதமான காம்பட்டிஷனும் நடத்தவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 18 of 1965) be taken into consideration."

[4th November 1965

The motion was put and carried, and the Bill was taken into consideration.

MR. DEPUTY SPEAKER : There are no amendments. I shall therefore put Clauses 2 to 10 to the vote of the House.

Clauses 2 to 10 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move--

"That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 18 of 1965) be passed."

The motion was put and carried and the Bill was passed.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn
11-59 a.m. and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

289. *Notification issued with G.O. Ms. No. 2157, Rural Development and Local Administration, dated the 25th September 1965, declaring that with effect on and from the 1st October 1965, the specified area in the schedule of the notification shall be a township called the "Kanyakumari Township". [Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958)].

290. *Notification issued with G.O. Ms. No. 2230, Revenue, dated the 27th July 1965 making the rules for the Madras (Transferred Territory) Thiruppuvaram Payment Abolition Act,* 1964 (*Madras Act* 32 *of* 1964). [*Laid on the Table of the House under section* 32 (5) *of the Madras (Transferred Territory) Thiruppuvaram Payment Abolition Act,* 1964 (*Madras Act* 32 *of* 1964)].

291. *Notification issued with G.O. Ps. No. 2368, Revenue, dated the 12th August 1965, exempting in respect of the tax payable on the sales of pictures of Nethaji Subhas Chandra Bose by the New India National Educational Trust, Madras. [Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act* 1 *of* 1959)].

292. *Notification issued with G.O. Ms. No. 3078, Home, dated the 28th August* 1965 *directing that from the date of this order, the tax payable in respect of tractor MSS* 1009 *and trailer MSS* 1012 *registered in the name of Sri Paramakalyani Education Society, Alwarkurichi, Tirunelveli district, be reduced by half, so long as the vehicles are used exclusively for the transport of materials for the construction of a College at Alwarkurichi. [Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931)].



293. *Notification issud by the Joint Development Commissioner, Madras in April* 1965 *regarding the inclusion of certain areas within the jurisdiction of certain panchayats in certain districts (Salem) under the Madras Panchayats Act,* 1958 *and published in the* Fort St. George Gazette *dated the 23rd June* 1965 (*1st set*). [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958)].

294. *Notification issued by the Joint Development Commissioner, Madras in April* 1965 *regarding the inclusion of certain areas within the jurisdiction of certain panchayats in certain districts (Salem) under the Madras Panchayats Act,* 1958 *and published in the* Fort St. George Gazette, *dated the 23rd June* 1965 (*2nd set*). [*Laid the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958)].

### B. Reports, Notifications and other papers.

* 78. *Committee on Estimates for 1964-65—Seventh Report of the Committee on Highways and Rural Works.*

* Placed on the Table of the House on 3rd November 1965.

[4th November 1965

## Appendix I.

[*Vide* Answer to Starred Question No. 269 on pages 9–12].

A.—Details of the open developed plots and Tenements constructed and allotted under the Slum Clearance Scheme and the houses constructed and allotted under the Low Income Group and Middle Income Group Housing Schemes.

| Name of the Scheme. | Number of houses/ house-sites developed or constructed during 1964. | Number of houses/ house-sites allotted during 1964. | Remarks. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 Slum Improvement/Clearance Scheme. | 286 open developed plots. | 71 | 215 Open developed plots were allotted in 1965 to the pavement dwellers in Georgetown. |
| | 352 tenements. | 352 | 30 houses were also allotted in the year 1964. |
| 2 Low Income Group Housing Scheme. | 186 houses | 186 | Includes Non-plan also. |
| 3 Middle Income Group Housing Scheme. | 152 houses | 152 | 142 houses for which allotment orders were issued in the year 1964 were still under construction in that year. These will be actually occupied in the year 1965. |

**பதில்.**—சேரி ஒழிப்புத் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள், கட்டிவிடப்பட்ட குடியிருப்புகள் ஆகியவையும் குறைந்த வருமானமுடையவர்கள், நடுத்தர வருமானமுடையவர்கள் ஆகியோருக்கு வீட்டு வசதி அளித்தல் திட்டங்கள் ஆகியவையும் பற்றிய விவரம்:

| திட்டத்தின் பெயர். | 1964-ல் அபிவிருத்தி செய்யப்பட்ட அல்லது கட்டப்பட்ட வீடுகளின்/ வீட்டு மனைகளின் எண்ணிக்கை. | 1964-ல் ஒதுக்கப்பட்ட வீடுகள்/வீட்டு மனைகளின் எண்ணிக்கை. | குறிப்புகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. சேரி அபிவிருத்தி /ஒழிப்புத் திட்டம். | 286 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள். | 71 | ஜார்ஜ் டவுனில் நடைபாதை வாசிகளுக்கு 1965-ல் 215 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் ஒதுக்கப்பட்டன. |
| | 352 குடியிருப்புகள். | 352 | 1964-ல் 30 வீடுகளும் ஒதுக்கப்பட்டன. |



[4th November 1965

| திட்டத்தின் பெயர். | 1964-ல் அபிவிருத்தி செய்யப்பட்ட அல்லது கட்டப்பட்ட வீடுகளின்/ வீட்டு மனைகளின் எண்ணிக்கை. | 1964-ல் ஒதுக்கப்பட்ட வீடுகள்/வீட்டு மனைகளின் எண்ணிக்கை. | குறிப்புகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2. குறைந்த வருமானமுடையவர்களுக்கு வீட்டு வசதியளித்தல் திட்டம். | 186 வீடுகள் .. | 186 | திட்டத்தில் சேராத திட்டங்களும் அடங்கியுள்ளன. |
| 3. நடுத்தர வருமானமுடையோர்க்கு வீட்டு வசதியளித்தல் திட்டம். | 152 வீடுகள். .. | 152 | 1964-ல் ஒதுக்குவதற்காக ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட 142 வீடுகள், அந்த ஆண்டில் கட்டப்பட்டு வந்தன. 1965-ல் இந்த வீடுகள் குடியிருப்புக்கு விடப்படும். |

## Appendix II.

[*Vide* Answer to Starred Question No. 274 on page 16 and 17]

**Statement showing the distribution of Umblachery breed of bulls on premium basis to the various Panchayat Unions in East Thanjavur.**

| Name of the Panchayat Unions. | Number of bulls distributed during 1963–64. | Number of bulls included in the Premium Scheme (those distributed and privately purchased and owned). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | Umblachery. | Umblachery. |
| 1. Nannilam .. .. | .. | .. |
| 2. Mannargudi .. | 13 | .. |
| 3. Kottur .. .. | 5 | 2 |
| 4. Needamangalam .. | 4 | .. |
| 5. Sembanarkoil .. | 2 | 2 |
| 6. Tiruvarur .. .. | 8 | .. |
| 7. Mayuram .. .. | 1 | 6 |
| 8. Tirumarugal .. .. | 5 | .. |
| 9. Vedaranyam .. .. | 7 | 6 |
| 10. Muthupet .. .. | 10 | 10 |
| 11. Thiruthuraipundi .. | 6 | 6 |
| 12. Kodavasal .. .. | 1 | 1 |
| 13. Thalanayar .. .. | .. | 3 |
| 14. Kivalur .. — | — | .. |
| 15. Koradachery .. .. | .. | 1 |
| 16. Kuttalam .. .. | 4 | — |
| 17. Coleroon — .. | 4 | 3 |
| 18. Nagapattinam .. .. | 8 | 8 |
| 19. Sirkali — — | 3 | 1 |
| Total ... | 81 | 49 |

4th November 1965]

**கிழக்குத் தஞ்சாவூரில் வெவ்வேறு பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தவணை முறையில் வழங்கப்பட்ட உம்பளச்சேரி காளைகளைக் காட்டும் அட்டவணை.**

| பஞ்சாயத்து யூனியன் பெயர். (1) | 1963–64-ல் வழங்கிய காளைகள். (2) உம்பளச்சேரி. | தவணை முறை திட்டத்தின்கீழ் வரும் காளைகள் (விநியோகம் செய்யப்பட்டவை, தனியாக வாங்கி சொந்தத்தில் வைக்கப்பட்டிருப்பவை). (3) உம்பளச்சேரி. |
|---|---|---|
| 1 நன்னிலம் .. .. | .. | .. |
| 2 மன்னார்குடி .. .. | 13 | .. |
| 3 கோட்டூர் .. .. | 5 | 2 |
| 4 நீடாமங்கலம் .. .. | 4 | .. |
| 5 செம்பனார்கோவில் .. | 2 | 2 |
| 6 திருவாரூர் .. .. | 8 | .. |
| 7 மாயூரம் .. .. | 1 | 6 |
| 8 திருமருகல் .. .. | 5 | .. |
| 9 வேதாரண்யம் .. .. | 7 | 6 |
| 10 முத்துப்பேட்டை .. .. | 10 | 10 |
| 11 திருத்துறைப்பூண்டி .. | 6 | 6 |
| 12 குடவாசல் .. .. | 1 | 1 |
| 13 தலைஞாயிர் .. .. | .. | 3 |
| 14 கீவளூர் .. .. | .. | .. |
| 15 கொரடாச்சேரி .. .. | .. | 1 |
| 16 குத்தாலம் .. .. | 4 | .. |
| 17 கொள்ளிடம் .. .. | 4 | 3 |
| 18 நாகப்பட்டினம் .. .. | 8 | 8 |
| 19 சீர்காழி .. .. .. | 3 | 1 |
| மொத்தம் .. | 81 | 49 |

D
V2l1, 31 N65
N65.32.2
64923